பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன்; நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை - II | புரட்டாசி — 1925 | காசு - 6

தாதாபாய் நௌரோஜி

நூறாவது பிறந்தநாள் - 4-9-125

"இந்நாடு எமது தாய் நாடே, ஈண்டு 1 ஆரியர்கள் வந்து, எம்முள்
முன்னாள் இல்லாச் சாதிவகை முழக்கி, எமையும் மோசித்தார்."
என்று 2 இகழ்வர் தமிழர்; இவர் இருவோர் தாமும் ஒரு சேர்ந்து,
"பின் நாள் உற்ற பிறைக்கொடியார் 3 ஒன்னார் 4 என்னப்
பேசுவரால்; (1)

இவர் மூவருமே ஒருகூடி, ஏசு அடியார் தமை, இன்று,
"கவர்சேர் 5 நெஞ்சக் கள்வர்!" எனக் கனன்று 6 ஏசுவர்; இந்
நால்வர்களில், 7
எவரும் என்றும் எக் குறையும் இயம்பாவாறு, இந்நாடு எய்தி,
தவர் 8 போல், பிறர்க்கா உயிர் வாழ்ந்து, தழல் போற்றிடுவார் 9
தனி மரபில்; (2)

மாதா உரையால் அரசு இழந்து, கோதாவிரி நீர் வளர் சூழல்
வேதா 10 விதியால் அடைந்தோனை 11 'நீதான் வேளாய் 12'
என வேண்டி
ஓதா ஒருத்தி 13 உருக்குலைந்த ஏதால், 14 நாஸிக் எனும் ஊரில்,
தாதாபாய்நௌரோஜிஎனும்சான்றோன்சனித்தான் இந்நாளே. (3)

அந்நாளை ஒரு நூறாண்டு ஆயபினும், அங்கி 15 அரன் அல்லா ஏசு
என் நாமம் பல பரவும் இந்தியர்கள் எல்லோரும், இதயம் பூத்துச்
செந்நாளாப் பொன்நாளாத் திருநாளாத் தொன்னாள்கள் 16எவற்றும்
சீர்த்த 17
நன்னாளாக் கொண்டாடி, இந்நாளில் நனிமகிழும் ஞாயம் நாடில்; (4)

எவன் ஒருவன், 'என் குலம், என் மனைமக்கள், என் சுற்றம்,' என்று
எண்ணாமல்,
அவனை அளித்து அகமலர்ந்த 17 அன்னையினும் தாய்நாடே
அதிகம் என்று
கவனம்எலாம், காலம்எலாம், அதன்பெரியகாரியத்தில்கழிய, இந்தப்
புவனமிசை 18 அது பொலிய, 19 உழைக்கின்றான்,
அவன் புருஷோத்தமனே, அம்மா! (5)

---

1. இக்காட்டில்; 2. என்று கூறி; 3. முஸ்லீம்கள்; 4. பகைவர், 5. பிளவுற்ற, சுத்தமற்ற; 6. கோபித்து; 7. திராவிடர், ஆரியர், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்; 8. தவசிகள்; 9. பார்சிகள்; 10. பிரமன்; 11. இராமனை; 12. மணம்புரிவான 13. சூர்ப்பநகை. 14. காரணத்தினால்; 15; அக்கினி தேவன்; 16. பழைய நாள்கள். 17. பெற்று மனமகிழ்ந்த; 18. பூமியில்; 19. விளங்க.

அன்னவனே, அவன் நாட்டுச் சின்னவர்கள், பெரியவர்கள், அகத்தின் ஊடு
தன் நயமே தாங்கிடுவோர், "தாய் நாடு!" என்று ஏங்கிடுவோர், சாரமான
சொன்னயமாய்ச்சொரிந்திடுவோர்,தொண்டுசெலபுரிந்திடுவோர், எல்லோரும்
[கூடி
உன்னுதலும், பகவானைப்பாவுதல்போல்,உளத்தூய்மைபெருக்கும்மன்றே.

"இந்தியாவின் விருத்த மகான்" என்று புகழப்பெற்ற இவரது 100-வது பிறந்தநாள், நாட்டில் பலவிடங்களில் கொண்டாடப் பட்டது. "இந்தியாவில் வறுமையும், பிரிட்டிஷ் நியாயத்துக்கு விரோதமான ஆட்சியும்" (Poverty and Un-British Rule in India) என்று இவர் ஓர் அருமையான பெருநூல் எழுதியுள்ளார். அதில்

நிரூபிக்கப்பட்ட கொடிய வறுமை இன்னும் நீங்கவில்லை; அரசியல் முறையும் அதிகம் மாறிவிடவில்லை. இந்தியாவின் முன்னேற்றத்துக்கு, இந்தியர்க்குள் ஒற்றுமையே அதி முக்கியம், இன்றியமையாதது என்று, இவர் முறையிட்டார், அப்படிப்பட்ட ஒற்றுமையும் இன்னும் ஏற்படவில்லை. ஆகையால், இவர் பிறந்த நாளையும், இவர் சீவசரிதையையும், இந்தியர் மறவாது நினைந்து சிந்திப்பது, உசித மாத்திரமன்று, அவசியமும் ஆகும்.

20. நினைத்தலும்.

“நாவல்கள்”

ஸ்ரீ. A. அரங்கசாமி ஐயங்கார், B. A., B. L., நாமக்கல்.

நாவல் என்பது சாதாரண ஜனவாழ்க்கையை விவரிக்கும் கற்பனைக் கதை. அந்தப் பதத்திற்கு ‘நவீனம்’ என்று அர்த்தம். சாமானிய நடவடிக்கைகளில் என்ன புதுமை? பாமர ஜனவாழ்வின் விவரத்தில் என்ன ரசமிருக்கிறது? அதென்னமோ! மேனாட்டில் நூறாண்டுகளுக்குமுன் இப்படிப்பட்ட கதைகள் வெளிவந்தபோது, நவீனமாயிருந்ததால், ‘நாவல்’ என்று அழைத்தனர். அதின் சாரத்தைப்பற்றி நாவல் வாசிப்போரையே கேட்கவேண்டும். சர்க்கரையின் இனிப்பை ருசிபார்த்தே அறிய வேண்டும். நாவல்கள் வெளிக்கிளம்பினதும், எல்லோருடைய மனதையும் கவர்ந்தன. இப்பொழுது எந்தத்தேசத்திலும் ‘நாவல்’ இல்லாத வாழ்க்கையைக் கனவிலும் கருதமுடியாது. நாவல் எழுதுவோர்களோ, மேதாவிகளாகவும் ஒருவித சிருஷ்டி கர்த்தாக்களாகவும் கொண்டாடப்படுகின்றனர். டிக்கன்ஸ், ஹ்யூகோ, பால்சக், தாக்கரே, இவர்கள் கீர்த்தி, வால்மீகி, காளிதாசர்களின் புகழையும் தோற்கடிக்கும் போலிருக்கின்றது. நம் நாட்டிலும், நம் பெண்மணிகளுக்கு நகைப் பைத்தியத்திற் கடுத்தபடி, நாவல் பித்தென்று சொல்லலாம். இதன் இரகசியமென்ன? நாவலில் அப்படி என்ன விசேஷமிருக்கின்றது?

கற்பனைக் கதைகளில் நாவலே சிரேஷ்டமானது. எவ்விதம் மானுட வாழ்க்கையில், படிப்படியாக, தன் திறனில்லாத குழந்தைப் பருவத்தையும், அறியாப் பாலக தசையையும், யௌவன பருவத்தின் பகட்டையும் மலைப்பையும் கடந்து, கிரஹஸ்தாசிரமத்தில் ஸ்திரீ புருஷர்கள் அறிவு முதிர்ந்து பகுத்தறிவோடும் அமைதியோடும் விளங்குகிறார்களோ, அவ்விதம், நாவலும் கற்பனைக் கதைகளுக்குச் சிகரமாக விளங்குகின்றது.

குழந்தைப் பருவம் :—கதைகளில் அனேக விதங்களிருக்கின்றன. ஒவ்வொரு காலத்திலும், நம்முடைய பருவத்திற் கொத்த அறிவுக்கும் மனப்போக்கிற்கும் ஏற்ற கதைகளே பிடித்தமாயிருக்கின்றன. குழந்தைகள், ‘அம்மா ஒருகதை சொல்லு” என்னும்போது, ஏதாவது பேருக்கு ஒன்று சொன்னால் சரி. இயற்கை விரோதம், அசம்பாவிதம், இவ்விஷயங்கள் அவர்களுக்குத் தோன்றுவதில்லை. ஒரு பூனை யானையைத் தூக்கி அடித்ததென்றாலும், ‘அப்படியா!’ என்று, கேட்டுக்கொண்டு தூங்கிவிடுவார்கள்.

வாலிப ப்பருவம்—ஆனால் அறிவு சீக்கிரத்தில் வளர்ந்து விடுகிறது. முன்னில்லாத சந்தேகங்கள் ஜனிக்கின்றன "அம்மா, பூனை எப்படி அவ்வளவு பெரிய யானையை எதிர்க்கமுடியும்? அந்தப் பெண், புலியை எப்படிக் கலியாணம் செய்துகொண்டாள்?" என்ற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் சமாதான அம்சமாகவோ, வேறு எவ்வித க்ஷணமாகவோ, மந்திரமும் ஜாலமும் நுழைகின்றன. மாயா விநோதக் கதைகளில் ஆழ்ந்து, சிறுவர்கள் சாப்பாட்டையும் மறக்கிறார்கள். பூதங்களும், யக்ஷிணிகளும் தேவதைகளும் வந்து உலாவுகிறார்கள். ஒரு லாந்தரைத் தேய்த்தமாத்திரத்தில் பூதகணங்கள் வெளிப்பட்டு, மாளிகைகளையும் பட்டணங்களையும் நிர்மாணம் செய்கின்றன; நகரங்களை அடியோடு பெயர்த்துக்கொண்டு போகின்றன. சாபத்தாலும், மந்திரத்தாலும் மனிதர்கள் மிருகங்களாக மாறுகின்றார்கள். இயற்கையில் மனிதர்களுக்கேற்பட்ட குறைவுகளும் தடங்கல்களுமின்றி, சுயேச்சையாக ஆகாயத்திற்பறந்து கொண்டும், நீர்க்குள்ளிருக்கும் பட்டணங்களில் சஞ்சரித்துக் கொண்டும் ஆனந்தமாகத் திரிகிறார்கள்.

யௌவனப் பருவம்—வாலிபர்கள் வெகு சீக்கிரமாக வளர்ந்து விடுகிறார்கள். அதுவும் நம்தேசத்தில் சொல்ல வேண்டியதில்லை. பொம்மைகளை வைத்து நேற்று விளையாடிக் கொண்டிருந்த பெண்கள், இன்று, நம் கண்ணெதிரிலேயே, திடீரென ஸ்திரீகளாக வளர்ந்து, விளங்குகிறார்கள். அவர்கள், முன்பு மனோவேகத்தினால் கிரகித்த மாயா மாலங்களைப் பிரத்யக்ஷமாகக் காணாமல், இயற்கை விரோதமான கதைகளில் ருசியை இழக்கின்றார்கள். அவர்கள் சரீரத்திலும் மனதிலும் ஒரு நவீன சக்தி கிளம்பி, அடக்க முடியாமல் ததும்புகின்றது. மனுஷவாழ்க்கையில் கொடி மின்னல்போல் தோன்றி மறையும் யௌவன பருவத்தை யடைந்து விட்டார்கள். கற்பனைக் கதையும் அவர்களோடு யௌவனத்தை யடைந்து, "ரோமான்ஸ்" ஆக விளங்குகின்றது.

இந்த "ரொமான்ஸ்" கதையையே நாவலின் தாயாக சொல்லலாம். அல்லது, "ரோமான்ஸ்" என்னும் மாதே யௌவனத்தைக் கடந்து, அறிவுத் தேர்ச்சியோடு நாவலாக மாறினாள் என்றும் வைத்துக்கொள்ளலாம். 'ரோமான்ஸ்' கதைகளில், இயற்கை விரோதமான அசப்பாவித விஷயங்கள் கிடையா. (?ப-ர் ப-ம்) ஆனாலும் நாடோடி வாழ்க்கையையும் காணமுடியாது. ஜகமுழுதும் யௌவனத்தின் சோபையில் களங்கமற்று விளங்குகின்றது. சாமான்ய விஷயங்களுக்கும் பாமர ஜனங்களுக்கும் அங்கே இடம் கிடையாது. அரசர்களும், வீரர்களும், அரசகுமாரிகளும், சீமாட்டிகளுமே கதாநாயக நாயகிகளாக வருகிறார்கள். தேசங்க

ளும், சமூகங்களும் தோன்றி மறைகின்றன. சேனைகளின் கோஷங்களும், படைகளின் இரைச்சலும், கோட்டை கொத்தளங்களும், மாளிகைகளும், உத்யானவனங்களும், சதுரங்கக் காய்கள் போல, பொழுது போக்கிற்காக நம்முன் வந்து விளையாடுகின்றன. எங்கும் ஜயமும் உற்சாகமும் சௌபமும் சௌந்தர்யமும், வியாபித்திருக்கிறது. யௌவன பருவத்தவர், 'ரோமான்ஸ்' கதைகளின் வனப்பில் மூழ்கி மயங்காதவர்களு முண்டோ? பின்னுட்களிலும் அக்கதைகளின் மயக்கம் நம்மை வலிக்கின்றது. ஸ்காட், டுமாஸ், மாரிஸ், இவர்களின் ரோமான்ஸுகளுக்கு அழிவுண்டோ? அவைகளின் எழிலுக்கும் குறைவுண்டோ?

தமிழ்ப் பாஷையில் சரியான ரோமான்ஸ்களில்லை என்று சொல்லவேண்டும். அனேக வருஷங்களுக்கு முன் வெளிபோந்த "பிரேமகலாவதியம்' ஒருவிதமான கிரந்தம். நாளிதுவரையில், அது எனக்குப் பிடிக்கிறதா இல்லையா என்று சொல்லத் தெரியவில்லை. மற்றபடி, ரோமான்ஸிற்கும் நாவலிற்கும் நடுவில்— வேத நாயகம் பிள்ளையின் "பிரதாப முதலியார் சரித்திரம்"— "பத்மாவதி" ஆசிரியர் மாதவையரின் "விஜயமார்த்தாண்டம்"; இவைகளோடு, சில வருஷங்களுக்கு முன் பதிப்பிக்கப்பட்ட "விஜயசாருண்பம்" என்றதையும் சேர்த்துக்கொள்ளலாம். இன்னும் அனேகம் இருக்கிறதாகச் சொல்லுவார்கள் சிலர். "விஜயமார்த்தாண்டத்தின்" ஆசிரியர், முதல் அத்தியாயத்தில் "குப்பை உயரக்கோபுரம் தாழ்ந்தது" என்றெழுதி யுள்ளார். தற்காலத்தில் எல்லாவிதத்திலும் சிறிழந்து அனுதையாக விருக்கிற தமிழ்ப் பாஷையில் குப்பை நாவல்கள் உயர்ந்து இருக்கும் சொற்ப கோபுரங்களைத் தாழவைப்பதோடு கோபுரங்களை மூடிவிடும் போலிருக்கிறது. குப்பையைக் கிளறித் தள்ளி விட்டே நான் பேசுகிறேன். இது தவிர, ஸ்காட் கதைகளில் இரண்டும், பங்காளி பாஷையிலிருந்து டட் அவர்களின் 'ஆக்ராநகரத்தின் அடிமைப் பெண் (மாதவிகங்கணம்")என்ற ரோமான்ஸும், "மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. டட் அவர்களின் இதர ரோமான்சுகளும்; சட்டர் ஜீயின் "ராஜசிம்ஹன்" "மிருணுளினி" முதலான ரோமான்சுகளும், தெலுங்கில் படித்தேனே யல்லது, தமிழில் வெளிவந்ததாகத் தெரிய வில்லை. தமிழில் ரோமான்சுகள் கணக்கிலவாய், நம் சிறுவர் சிறுமிகள் ஆழ்ந்துபடித்து மகிழும்படி வெளிவரவேண்டும். துப்பறியும் நாவல்களில் சிரமப்படும் ஆசிரியர்கள், மேனுட்டு ரோமான்சுகளை மொழி பெயர்த்தால், பின்னல் ஸ்வயமாக ரோமான்சுகள் ஏற்பட வழிகாட்டியாக விருக்கும்.

இனி, நம் "ரோமான்ஸ்" எப்படி நாவலாக மாறினுள் என்பதைக் கவனிப்போம்.

அந்தோ! யௌவனமும் அதன் வனப்பும் வந்தது போனது தெரியாமல் பறக்கின்றது. அதன் எழிலில் ஈடுபட்டு, அதன் நடனத்தைக்கண்டு களித்திருக்கையிலேயே, நழுவி விடுகிறது. போன யௌவனத்தை நினைத்துப் பெருமூச்சு விடாதவர் யார்? ஆனால், இதென்ன, இப்பொழுது ஒரு புதிதான அமைதியும், ஆழ்ந்த புத்தியுமுண்டாயிருக்கிறது? இதுவரையில் இல்லாத பெருமையும் தகையும், சாந்தமும், காருண்யமும், தோன்றுகிறது? நம் கண் முன்னிருந்த திரை விலகி, ஒரு நவீன உலகத்தைக் காண்கிறோம்? அதன் நேர்மையும் சீரும் என்னே! கோடிக்கணக்கான ஜன சமுகத்தின் பொறுமையும் உழைப்பும், சுகமும் துக்கமும், பேதைமையும் விளையாட்டும், தனி அழகோடு பிரகாசிக்கின்றன. "அரசர் தம் கிரீடத்திலும் வீரர் தம் தோளிலும்" துலங்கிய ஸ்ரீதேவி, "உடல் வெயர்த்திட உழைப்பவர் நெற்றியிலும்" விளங்குவதைக் காண்கிறோம். பாமர ஜனங்களின் தயையும், தாழ்மையும், செட்டும் சீரும், தரித்திரமும், கஷ்டமும், கோட்டைகளிலும் மாளிகைகளிலும் அரசர்களிடத்தும் காணாத மேன்மையோடு கூடித் தோன்றுவதோடு, சப்பத்திலும் ஆடம்பரத்திலும் நமக்குச் சலிப்புண்டாகிறது. முன்பு ஆசையோடணிந்த குண்டலங்களும் ஆபரணங்களும் நம் மெல்லிய சதையை உறுத்துகின்றன. முன்பு ஓர் அயல் வீட்டுத் தங்கப்பிரதிமையை எடுத்து, அதற்குச் சீராய் ஆடையுடுத்தி, மணி பூட்டி, களித்துக் கொண்டிருந்தோம். இப்பொழுதோ, தெருப் புழுதியோடு அலங்கோலமாய் வந்து விழுகிற நம் சொந்த அருமைக் குழந்தையை வாரி அணைந்து ஆனந்த முறுகின்றோம். செருக்கையும், பொய் கௌரவத்தையும் நாம் ஒழித்து, குடிசைக்குள்ளும் புகுந்து, கந்தலோடிருக்கும் ஏழைகளோடும் அளவளாவி, "அம்மா, நீயும் நானும் சகோதரிகளே. எல்லோரையும் ஜகன்மாதா பெற்றாளன்றோ" என்று, உறவாடுகின்றோம்.

"ரோமான்ஸும்" நாவலாக மாறிவிட்டது. சுந்தரேசனும், கோபாலனும், தோட்டக்கார முத்தனும், கதாநாயகர்களாக விளங்குகிறார்கள். மூன்றாவது வகுப்பில் நம்மோடு வாசித்த பங்கஜாக்ஷி, ஒருநாவல் முழுவதும்வந்துகொண்டிருக்கிறாள். பக்கத்தெருமீனாக்ஷி கல்யாணத்திற்காக ஊர் ஊராய் வரனைத் தேடிக்கொண்டு, அவள் அப்பா, மாமா, அத்தான் எல்லாரும் அலைந்ததும்; அகப்பட்டவரனுக்குச் சொத்தில்லையென்று குறைப்பட்டதும், கடைசியில், அந்த ஏழைப்பையன் பரீக்ஷைகளில் முதலில் தேறி, பி.ஸி.எஸ்.ஸில் தேர்ந்தெடுக்கப்பட்டு, டிப்டி கலெக்டரானதும், மீனாக்ஷி இப்பொழுது வைரங்கள் மின்ன, கோச்வண்டியில் வந்திறங்குவதும், நாவலில் படிக்க, ஏதோ ஓர் ஆச்சர்யமாயிருக்கிறது. குண்டினபுரத்து ராஜகுமாரனும், வங்கதேசத்துச் சேனாபதியும், இப்பொழுது எங்கே

போனார்கள்; அவர்கள் படைகளைத் திரட்டிக்கொண்டு யுத்த சன்னத்தராய் இருக்கையில், மறுநாட்காலையில் நடக்கப்போகும் சண்டையின் முடிவினால் ஒரு ராஜ்யமே ஒழிந்து, பாழாகும் போலிருந்தது. ஜயசீலன் ரோமான்சில் அதைப்பற்றிப் படிக்கும் போது நமக்கிருந்த அக்கறை எங்கே! இப்பொழுது, மன்னார்குடி ருக்மணி கல்யாணத்தில் பெங்களூருக்கு நேராகப் புடவைக்கு எழுதிக் காலை முகூர்த்தம் இருந்தும் புடவை இன்னும் வராமல் தபாலாபீஸில் பார்சலைக் கவலையோடு எதிர் பார்த்துக் கொண்டிருப்பதை, நாவலில் வாசிக்கும்போது, நமக்கிருக்கும் ஸ்வாரஸ்யமும் ஆத்திரமும் எங்கே! ஏதோ சாதாரண நடவடிக்கைகளைப் பற்றிய கதைகள் இத்தனை நாள் காணாத ருசியோடு இனிமையாயிருக்கின்றன. இந்தப் புது அனுபவம் கற்பனைக்கதைகளில் மட்டுமல்ல; சரித்திர கிரந்தங்களிலும் வெளிவந்திருக்கின்றது. இத்தனை காலம் அவுரங்கசீப் கி.பி. 1707௵ இறந்ததும் 1748௵த்தில் நைசாமல் மக்கை ஹைதராபாத் ஸம்ஸ்தானத்தை ஸ்தாபித்ததுமே, சரித்திரமாயிருந்தது. இப்பொழுதோ, அவை மட்டுமல்ல, அக் காலங்களில் பாமர ஜனங்களின் நாட்கள் எப்படிக் கழிந்தன; அவர்கள் நடையுடை பாவனைகள், கல்வித் திறமை, கஷ்ட நிஷ்டூரங்கள், இவைகளை உண்மையான சரித்திரமென்றும் ஆகி; பழங்கோயில்களும், சித்திரங்களும் ஒரு புது ஸாரத்தோடும், விளங்குகின்றன.

இவ்விதம் மனிதர்களைப் போலவே கற்பனைக் கதையும் வளர்ந்து, நாவலாகப் பழுத்து, நமக்கு இன்பத்தைக் கொடுக்கின்றது. புகழ் பெற்ற டிக்கன்ஸ் அனாதைக் குழந்தைகளையும், ஏழைப் படகோட்டிகளையும், ஜட்கா வண்டிக்காரர்களையும், அரைப்பைத்தியங்களையும் கதாபாத்திரங்களாக வைத்துக்கொண்டு, ஒரு புது உலகத்தையே சிருஷ்டித்து விட்டார். விசுவாமித்திரர், 'புது சூர்யனையும் தேவதைகளையும், இந்திரனையும் சிருஷ்டித்து விடுகிறேன்' என்று கிளம்பினார். டிக்கன்ஸும், ஹ்யூகோவும், தாக்கரேயும், எலியட்டும், புது மனிதர்களைச் சிருஷ்டித்தே விட்டனர். அரிச்சந்திரன், துரியோதனன், சாவித்திரி, தமயந்தி இவர்கள் கீர்த்திகூட, ஒரு 'பிக்விக்' என்ன, 'ஸைலாஸ் மார்னர்' என்ன, "ஜீன் வால் ஜீன்" என்ன, இவர்கள் கீர்த்திக்கு ஈடாகாது போலிருக்கிறது.

நாவலின் மகிமையும் சக்தியும் என்னே! மாதவையர் பத்மாவதியில் நாட்டு வைத்தியக் கிழவன் பேச்சும், அவன் அமக்களமும் படாடோபமும், என்ன ஸ்வாரஸ்யமாயிருக்கின்றது! பத்மாவதி, 'நாய்க்குட்டி மையைக் கொட்டி விட்டது'' என்று தப்புந் தவறுமான கடிதத்தை முடிக்கும்போது, 'கோடித் துக்கம் குழந்தை முகத்தில்' என்பதுபோல, நம் கவலைகளையெல்லா மறந்து, ஆனந்திக்கின்றோம். நாராயணன் செலவுக்குப் பணமின்றி, 'கம்பராமாய

ணத்தையும்' விற்றான் என்றபோது, நாம் அடையும் வருத்தமென்ன. பத்மாவதி பட்ட கஷ்டங்களும், அவள் குணமும் பொறுமையும் என்ன. கடைசியில் ஒரு நாள், நாராயணன் பைத்தியம் பிடித்தவன் போல் கதவைத் தள்ளிக்கொண்டு, "தான் வெகு நாளாகத் தொட்டறியாத ஆருயிர்க் காதலியை வாரி யெடுத்து மார்போ டணைத்துக் கொண்டான்" என்று படிக்கும் போது, நமக்கு உண்டாகும் உணர்ச்சி என்ன. ராஜமய்யரின் கமலாம்பாள், 'நீங்கள் சரபோஜி மகாராஜா வம்சத்திற்பிறந்தவர்கள்' என்று புருஷனோடு பரிகாசமாடுவதும், பேயாண்டித் தேவன் ஊர் கோலமும், அதைப் பார்க்கும் ஆவலில், இலையில் உட்கார்ந்திருக்கும் புருஷனுக்கு ஊறுகாய்கூடப் போடாமல், 'இதுக்கு வரும் கோபத்தைப் பார்த்தையாடி' என்று சேஷி அதட்டிவிட்டு வருவதும், ஸ்ரீனிவாசன் லக்ஷ்மியின் பரஸ்பர அன்பும், அவர்கள் சிரிப்பும், விளையாட்டும், அழுகையும், நமக்கு விளைவிக்கும் இன்பத்திற்கும் ஆறுதலுக்கும் இணையுண்டோ? இதனாலன்றோ, நாவலாசிரியர்கள் ஓர்வித சிருஷ்டிகர்த்தாக்களாகக் கொண்டாடப் படுகின்றனர். பார்க்கப் போனால், கமலாம்பாளும், சீதையம்மாளும், கோபாலனும், சாலாவும், பட்டணத்து ஜட்கா வண்டிக்காரனும், நாம் காணாத மனுஷ்யர்களோ? அதிலேயேதான் நாவலின் ஆச்சரியமும், அழகு மிருக்கின்றது. ஒரு ருஷிய ஆசிரியர், குப்பைத் தொட்டிகளில் எறிந்துவிட்ட சீசாக்களையும் கந்தைகளையும் பொறுக்கி விற்று வயிறு வளர்த்து, சதா கஷ்டத்தினால் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் கிழவனைப் பாத்திரனைக் கொண்டு, ஒரு நாவலை எழுதி விட்டார்.

இந்த நாவல்கள் சில காலங்களில் ஜன சமூகத்தின் கொள்கைகளையும், வழக்க பழக்கங்களையுமே மாற்றிவிடுகின்றன. அனாதை ஆசிரமங்களில் நடந்த அட்டூழியங்கள், ‘ஆலிவர் ட்விஸ்டு’’ என்ற ஒரு நாவல் வெளி வந்ததுமே, ஜனங்களுக்கு ஆத்திரம் வந்து, செம்மைப்பட்டு, ஒழிந்தன. ஒரு நல்ல நாவலின் சக்தி அதிகம்: அதைப் படித்ததும், நமக்குள் ஒருவிதப் பெருந் தன்மையும், நல்லுணர்ச்சியு முண்டாகின்றன; அல்ப சிந்தனைகளும் கெட்ட எண்ணங்களும் விலகுகின்றன. கெட்ட நாவல்கள் அபாரமான தீங்கையும் விளைவிக்கக் கூடும்; நம் மனத்தைக் கலக்கித் தீய வழிகளில் செலுத்தும். தமிழில் கணக்கற்ற நாவல்கள் வெளி வந்துவிட்டன. குப்பை கூளமே அதிகம். நாளடைவில் இவைகள் களை பிடுங்கப்பட்டு, "பத்மாவதி" "கமலாம்பாள்" போன்ற நாவல்கள் அனேகம் வெளிவந்து, மேனாட்டு நாவல்கள் அடைந்த பதவியிலும் மேன்மையை யடைந்து, தமிழ் நாவல்களை அயல் தேசத்தவர்கள் வியந்து தம் தம் பாஷைகளில் மொழிபெயர்க்க ஆதாரப்படும் படியான காலத்தை ஈசுவரன் அருளிப்பாராக!

8363

“மூட்டை”

ஒரு சிறு கதை

சிவி. மா. பாமணி, சென்னை



புகை வண்டி நின்று விட்டதால், திடீரெனக் கண் விழித்தேன். வெளிப்புறத்தில் இருட்டும், மழையும், மின்னலும். ‘ஸ்டேஷன்’ ஒன்றும் காணப்பட வில்லை. ‘என்ஜின்’ அடியிலிருந்து கிளம்பும் நீராவிக் கொழுந்து, ஓட்டுபவன் கை விளக்குப் பிரகாசத்தில், அக்னி ஜ்வாலைபோ லிருந்தது. வண்டிக்குள் எனது வலது பக்கத்திலிருந்த கிழவர், தன் சிவப்புக் கம்பளியைத் தோள்மேல் போர்த்திக்கொண்டு தூங்கினர். துரைபோல் ஆடை தரித்த வாலிபர், அவிந்த சுருட்டுக் கையுமாய் உறங்கினர். முகலக்ஷணமுள்ள பெண் ஒன்று, தாயார் மடிமேல் தலை வைத்துத் தூங்கிற்று. தாயார் அரை நித்திரை செய்தாள்.

“எந்த ஸ்டேஷங்க?” என்ற சப்தம் காதில் விழுந்தது. பேசியவர் எனக்குப் பின்னிருந்தவர். வயது நாற்ப திருக்கலாம். ஊடுருவிப் பார்க்கும் கண்களும், சிறிய மீசையும், சரிகைத் தலைப்பாவும், நீண்ட மேலங்கியு முள்ளவர். நெற்றியி லிட்ட சந்தனப் பொட்டு, அவர் அஞ்சன நிறத்தை எடுத்துக் காட்டிற்று. தாம்பூலம் தரித்ததனல், உதடுகள் சிவந்திருந்தன. அவர் கையில் சிறிய தங்கக் கெடியாரமும் காதில் வைரக் கடுக்கன்களும் விளங்கின.

நான் பதில் பேசு முன், அவராகவே, “ஓகோ, ஸ்டேஷனும் இல்லை, ஒன்று மில்லை. நடுக்காட்டில் நிறுத்திவிட்டான்” என்றார். பின்பு ஒரு மூச்சில், தன் பெயர் அளகப்ப முதலியார் என்றும், தான் ‘வெஸ்ட்’ கம்பெனியின் கமிஷன் ஏஜன்ட் என்றும், தனக்குப் புகை வண்டிப் பிரயாணத்தின்மேல் வெறுப்பென்றும், தான் பிறந்த விடம் கருவூர் என்றும் தெரிவித்துக்கொண்டார். அவர் பேச்சு, குழந்தைகள் பேச்சைப்போல், பரப்பரப்பாயும் ஆவல் நிறைந்தும் இருந்தது

“நீங்கள் எந்த ஊர் போகிறீர்கள்?” என்று முதலியார் என்னைக் கேட்டார். நான் கருவூர் போகிறேனென்றும், என் சொந்த

விடமும் அதுதா னென்றும் தெரிந்தவுடன், முதலியாருக் குண்டான மகிழ்ச்சிக் களவில்லை. இந்த சுப சமாசாரத்தைக் கொண்டாடுவது போல், இடுப்பிலிருந்து வெள்ளிப்பட்டை வைத்த சிமிழொன்றை எடுத்து, இரண்டுதரம் பொடி போட்டார்; மறுபடியும் பேச்சைத் தொடங்கினர்.

"தங்களுக்கு நாயக்கன்பேட்டை தெரியுமோ?"

"தெரியாம லென்ன? பேட்டையில் தானே வாரச் சந்தை."

"ஆமாம், ஆமாம். நாய்க்கன் பேட்டை நாகராஜ முதலியார் அறிமுகமோ?"

கருவூர் பார்த்து ஏழு வருஷமாயிற் றென்றும், பேட்டையிலுள்ளவர் ஒருவரும் அறிமுக மில்லை யென்றும், விநயமாய்த் தெரிவித்துக்கொண்டேன். இதற்குள் புகைவண்டி பேரிரைச்சலுடன் புறப்பட்டது. இருவருக்கும் நித்திரா பங்கமாய் விட்டபடியால், முதலியார் பின்வரும் சம்பவத்தை விவரித்தார். கூடிய வரையில் அவர், பாஷையை நானும் தொடருகிறேன்:—

"நாகராஜ முதலியார் தெரியாதா? அவர், பேட்டைப் பொன்னி அம்மனுக்குச் செய்த நகை மாத்திரம் பதினாயிரம் பிடிக்கும். பெண்சாதியுடன் வாழ்ந்தபோது, பல்லக்கில் அல்லது இரட்டைக் குதிரை சாரட்டில்தான் வெளி வருவார். அவர் வீட்டில் விசேஷ மென்றால், நூறு பாப்பான்களுக்கு வடை, பாயசம், கூட்டுக் கறியோடு விருந்து. தங்கமான மனுஷன். எவர் யாசகத்துக்கு வந்தாலும், கையை விரிப்ப தில்லை.

"இவ்வளவுக்கும், அவர் அப்பன் இறந்த காலத்தில், அவரிடம் ரொக்கமாய் நூறு ரூபாய் கிடையாது. ரங்கோனில் அரிசி வியாபாரம் செய்து, ஆறு வருஷத்தில் மூன்று லக்ஷம் திரட்டிவிட்டார். ஊருக்கு வந்து வேண்டியமட்டும் நிலமும், ஒரு மாடி வீடும் வாங்கினர். அவருக்கும், பெண்சாதிக்கும், பிள்ளை குட்டி யில்லை யென்ற விசாரம் அதிகமாயுண்டு. அதற்காக, அவர்கள் செய்த நோன்புகளுக்கும் திருப்பணிக்கும் அள வில்லை. ஒன்றும் பலிக்காமல், ராமேசுவரம் போவ தென்று நிச்சயித்தார்கள். ராமேசுவரத்தில், அந்த அம்மாள், காலரா கண்டு இறந்து போச்சு."

"அடாடா!"

"என்ன செய்வது? நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்தது என்ற சங்கதிதான்; அது முதல், நாகராஜ முதலியார், ஒருவருக்கும் அடையாளம் தெரியாதபடி மாறி விட்டார். ஒரு போதும் அதிகமாய்ச் சிரிப்ப தில்லை, பேசுவ தில்லை, பாட்டுக் கச்சேரிக்கும் கோவிலுக்கும் போவ தில்லை. வைதீகரைக் கண்டால் "பாப்பாரப் பயல்கள்" என்று திட்டத் தொடங்கி விட்டார். தெய்வ நம்பிக்கையே மறைந்துவிட்டது. நில மெல்லாம் விற்றுப்

பணமாக்கி மதராஸ் பாங்குக் கனுப்பி விட்டார். அவருக்குப் பணிவிடை செய்ய, ஒரு பரிசாரகனும் ஒரு வேலையாளும் தான். பேட்டையில்,முதலியார் கதியைக்கண்டு பரிதபிக்காதவர், அநேகமாய் ஒருவரு மில்லை.

"இதற்குள், முதலியார் பந்துக்களுக்கு, அவர் இறந்த பின் சொத்து யாரைச் சேருமென்ற மனக்கவலை பிடித்துவிட்டது. உடனே, அவர் அம்மாஞ்சி மருமகன், அத்தை பிள்ளை, மாமனார் பேரன் முதலிய சகலரும் (தாயாதிகள் என்று சொல்ல முடியாதவர் கூட) வேறு வேலைகளை விட்டுவிட்டுப் பேட்டையில் வசிக்கலானார்கள். முதலியார் காலையில் வெளிக்கிளம்பினால், கும்பிட்டுக் கொண்டும், பல்லை யிளித்துக் கொண்டும், ஒரு கும்பல் பின் தொடரும். சாயங்காலம் வீட்டுக்கு வந்தால் பத்துப்பேர், ஆசார உபசாரங்களுடன் வாசலில் நிற்பார்கள். இவர்களைக் கண்டால், முதலியாருக்கு மனசில் ஆவேசம். ஆனால் வெளிப்படையாய்ச் சிரித்தும் பேசியும் நடந்து வந்தார். இதனால் முதலியார் பந்துக்களுக்குத் தலை கிறுங்கிவிட்டது. ஒருவன் முதலியார் பரிசாரகனைத் தனக்கு இஷ்டமென்றான். மற்றொருவன், தினம் பலகாரம் செய்து, முதலியாருக் கனுப்பலானான். வேறொருவன் முதலியாரின்மேல் இரகசியமாய்க் சூன்யம் வைத்தான். ஒவ்வொருவனுக்கும் மற்றவன்மேல் பொறாமை.

"முதலியாருக்கு ஒரு மருமக னுண்டு. அவன் பெயர் சுந்தர பாண்டியன். அவன் இந்த கோஷ்டியைச் சேர்ந்தவ னில்லை. ஆனால் முகஸ்துதி செய்ய மாட்டா னென்றால், முன் கோபமாய்ப் பேசி விடுவான். ஒருதரம் முதலியார் ஏதோ கவனியாமல் பேச, "என்னையா பைத்தியம்!" என்று சொல்லிவிட்டான். அது முதல் "சுந்தரபாண்டிய மஹாராஜாவிற்கும் பைத்தியத்திற்கும் சம்பந்தம் வேண்டாம்" என்று முதலியார் சொல்ல, இருவரும் பாரா முகமாய் இருந்து விட்டார்கள்.

ஒரு நாள், சுந்தர பாண்டியன் இந்த கோஷ்டியில் ஒருவனாகிய தன் அக்காள் மகனைப் பார்க்க, பேட்டைக்கு வந்தான். முதலியார் வாசல் எதிரில், கோஷ்டியைச் சேர்ந்த பலருடன் அவன் பேசிக்கொண் டிருந்தான். அப்பொழுது, ஒரு பெரிய அரிசி மூட்டையை முதுகின் மேல் தூக்கிக்கொண்டு, தள்ளாடும் நடையுடன்,நாகராஜ முதலியார் வெளி வந்தார். இந்த விநோதக் காட்சியைப் பார்த்து, எல்லாரும் ஒரு நிமிஷம் தியங்கினார்கள். பத்துத் தொண்டர்கள் முதலியாருக்குச் சகாயம் புரியக் காலெடுத்து வைப்பதற்குள், முதலியாரே—"அடே சுந்தர பாண்டியா! மூட்டையைப் பிடி" என்றார். ஒருநாளும் வாய் கொடுக்காதவர், இன்றைக்குப் பேசவே, சுந்தர பாண்டியன் கொஞ்சம் திகைத்தான்.

முதலியார் மறுபடியும் "என்னடா களுதே, காது செவிடா?" என்று அதட்டினர். சுந்தர பாண்டியன், கோபத்துடன், "என்ன ஐயா, வாயிலே வந்தபடி திட்டறீங்க? கூலிக்காரனு நான்?" என்று பதில் சொல்லிவிட்டு, ஊரை நோக்கி நடந்தான். மெதுவாக "இவ்வளவு கொளுப்பா பயலுக்கு! இருக்கட்டும்,: இருக்கட்டும்." என்றபின், தொண்டர் சகாயத்தால், முதலியார் மூட்டையை எடுத்துச் சென்றார்.

ஆவணி மாதம் பத்தாம்தேதி திங்கட்கிழமை நாகராஜ முதலியார் பரமபதம் அடைந்தார்.

அப்பா! உடனே உண்டான குழப்பத்திற் களவில்லை. ஒவ்வொருவனும் தனக்குச் சொத்தென்றும், தான் முதலில் உயிலைப் பார்க்கவேண்டுமென்றும், மயிர் பிடி மண்டை பிடி சண்டைபோட ஆரம்பித்தான். ஆனல் நாயக்கன் பேட்டை லாயர் தாமோதரம் பிள்ளை, உயிலின்படி தாம் காரியஸ்தரென்றும், பதினறு கழிந்தபின் எல்லாரும் முதலியார் வீட்டில் கூடினல் உயிலை வாசிப்பதாகவும் வெளியிடவே, யாரையும் நம்பமுடியாமல், பந்துக்கள் ஒத்துக்கொண்டார்கள். முதலியாரின் ஆத்ம திருப்தியின் பொருட்டுச் சுந்தர பாண்டியனும் வரவேண்டுமென்று லாயர் வற்புறுத்த, அவன் அரை மனதாய்ச் சம்மதித்தான்.

அதை நினைத்துப்பாருங்கள், அன்று காலை 9-மணிக்கு; முதலியார் வீடிருந்த நிலைமையை! நாற்பது பேர் 'மனசு பதை பதைக்க, தாமோதரம் பிள்ளையின் வரவை எதிர் பார்த்தார்கள். கடைசியில் பிள்ளை வந்தார் - உட்கார்ந்தார். அவசரம் சிறிதுமில்லாமல், கைப்பெட்டியைத் திறந்து, அவர் உயிலை எடுத்தவுடன், ஒரு நிமிஷம் ஒருயுகம் போலிருந்தது.

கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, பிள்ளையவர்கள் உயிலின் முதற்பாகத்தை வாசித்தார். பிறகு "கன்னையா முதலியார்" என்று கூப்பிட்டார். கன்னையா முதலியார்தான், இரகசியமாய்ச் சூன்யம் வைத்தவர். அவர் எழுந்தவுடன், தாமோதரம் பிள்ளை அவரைப் பார்த்து, "நாகராஜ முதலியார் உயிலின் முதல் அங்கத்தின்படி, இந்த வீடும் நிலமும் உமக்குச் சொந்தம்" என்றார். கன்னையா முதலியார் தன் மகிழ்ச்சியை ஒரு வகையாய் மறைத்துக்கொண்டு, "எல்லாம் அவர்கள் கிருபை" என்று கண்ணைக் கசக்கினர். தாமோதரம் பிள்ளை, "ஆனல் இந்த வீடு ரூ. 10000க்கு மார்ட்கேஜ் ஆயிருக்கிறது. கடன்காரர் விற்றபின் உமக்குத் தம்படி மிகுவதும் அசாத்தியம்" என்றார். கன்னையா முதலியார், திடுக்கிட்டு, முகம் வாடி; உட்கார்ந்தார்.

"கறுப்பண்ண முதலியார்" என்றார், தாமோதரம் பிள்ளை. கறுப்பண்ண முதலியார், நாகராஜரின் மாமனர் பேரன். நாகராஜர்

ஒரு பொழுதும் விற்காததும் பெயர் போனதுமான, அவர் மனைவி அலமேலு அம்மாளின் நகைப் பெட்டி தன்னைச் சேருமென்ற வுடன், அவர் மனம் பூரித்தார். மற்றவர்களுக்கு வயிறெரிந்தது. "ஆனால், உயிலில் 'ஸ்பெஷலாய்' கூறியபடி, பெட்டி மாத்திரம் தான் உமக்குச் சொந்தம். தற்காலம் பெட்டியில் நகைகளு மில்லை. பெட்டி நல்ல தேக்குமரத்தில் செய்தது. இரண்டு ரூபாய் பெறும்" என்றார் தாமோதரம் பிள்ளை. ஆவலுடன் பெட்டியைத் திறந்து பார்த்த கறுப்பண்ண பிள்ளை, அதில் ஒன்றுமில்லாதது கண்டு, ஏதோ 'படவா' 'ராஸ்கல்' என்று திட்டிக்கொண்டு, ஆசனம் அமர்ந்தார். மற்றவர் ஒருவருக்கு முதலியார் வயல்கள் யாவும் சொந்தமாயின. ஆனால், விற்றதுபோக மீதியுள்ளது, இருபதடி நீளமும் அறுபதடி அகலமுமுள்ள ஓர் நிலமென்றும், அதன் முக்கிய விளைவு புல் என்றும் தெரிந்தவுடன், அவர் போய் விட்டார். ஒவ்வொருவர் கதியும் இப்படியாகவே, "பாவி" "படுபாதகன்" என்ற சொற்களும், "மோசடி!" "பாங்கிலிருக்கும் பணம் யாருக்கு?" என்ற சொற்களும் கிளம்பின. குழப்பத்தை அமர்த்திவிட்டு, சுந்தரபாண்டியனைப் பார்த்து, தாமோதரம் பிள்ளை, அங்கிருந்த அரிசி மூட்டை யொன்றைச் சுட்டிக் காட்டி, "உயிலின்படி இந்த மூட்டை உம்முடையது. ஆனால் நீர் ஒரு முறை மூட்டை தூக்க மறுத்ததற்காக, இதைத் தூக்க முயற்சித்த பின்புதான், இது உம்முடையதாகும்." என்றார். எல்லாரும் வயிற்றெரிச்சல் தீரச் சிரித்தார்கள். ஆனால் சுந்தரபாண்டியன், "உசிரோடிருந்தவரை தான் நான் முதலியார் சொல்லைக் கேட்க வில்லை. அவர் செத்த பின்பாவது அவர் மனசின்படி நடக்கட்டும்" என்று சொல்லி, மூட்டையைத் தூக்கப்பார்த்தான். அது சிறிதும் அசைய வில்லை. வலுவாக இழுக்கவே, கோணிக் கயிறவிழ்ந்து, மூட்டை நிறைய விருந்த பவுன்களும் நகைகளும் தரையில் குவிந்தன!

அப்பப்பா! என்ன குழப்பம், என்ன சச்சரவு! கடைசியில் தாமோதரம் பிள்ளை, சட்டப்படி உயில் சரிதா னென்றும், யாராவது சரி யில்லை யென்று சொன்னால், கோர்ட்டில் தானே சண்டை போடுவதாகவும் பயமுறுத்தி, பந்துக்களை அனுப்பிவிட்டார். கதையை வளர்ப்பதில் பிரயோசன மென்ன? இப்பொழுது பேட்டைக்குப் பெரியவர் சுந்தர பாண்டிய முதலியார் தான். அவரும், ரூ. 5000-க்கு மேல் பொன்னி அம்மனுக்கு நகை செய் திருக்கிறார்."

இதற்குள் புகைவண்டி கும்பகோணம் ஸ்டேஷனில் நின்றது. காலை ஆறு மணியாய் விட்டது. மழை நின்று கீழ்வானம் ஜோதி மயமாய் விளங்கிற்று. அளகப்ப முதலியார், தமது டிரங்க் பெட்டியுடன், வெளியே யிறங்கினர்.

"இந்த மூட்டை விஷயத்தைப்பற்றி உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று ஆவலுடன் கேட்டேன்.

அளகப்ப முதலியார் என்னைப் பார்த்துச் சிரித்தார். "கதை, நம்ம மூட்டை!" என்று சொல்லிப் போய்விட்டார்.

பின்பு விசாரித்ததில், அவர் பெயர் வரதராஜலு நாயுடு வென்றும், அவர் ஒரு மிராசுதா ரென்றும், சில நாவல்கள் எழுதியுள்ளார் என்றும் தெரிந்தது. என் பெட்டி மூடியில் "கருவூர்" என்ற சீட்டு ஒட்டியிருப்பது ஞாபகம் வந்தவுடன், அவர் கதையும் விளங்கிவிட்டது.

இந்தியாவின்

ஜனசங்கை—1921.

ஜனத்தோகை மொத்தம்.—31 கோடியே 80 லக்ஷம்.

ஆண்கள்.—16,3995,552; பெண்கள்.—15,4946,926.

மதத்திற்கேற்ப ஜனத்தொகையைப் பிரித்துப் பார்த்தால், ஆரியர்கள் 23,27,23000 பேர்களும்; இதர மதஸ்தர்கள், 73511000 பேர்களு மிருக்கிறார்கள்.

ஆரியர்களில், ஹிந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் 21,67,55000 பேர்கள், சீக்கியர்கள் 32 9000 பேர்கள்; ஜைனர்கள் 1178000 பேர்கள்; புத்தர்கள் 1,1571000 பேர்கள்; பாரசீகர்கள் 1,02,000 பேர்கள்.

இந்துக்களைத் தவிர இதர வகுப்பினர்களில், முஸல்மான்கள் 68735000 பேர்களும், கிறிஸ்தவர்கள் 475400 பேர்களும்; யூதர்கள், 22,000 பேர்களும், ஆதிக்குடிகள் 977500 பேர்களும்; இதர மதஸ்தர்கள், 18000 பேர்களும் இருக்கிறார்கள்.

பிராமணர்கள், 14 லக்ஷம் பேரே; "தீண்டாச் சாதி"யினரோர், 5 கோடியே 30 லக்ஷம் பேர் இருக்கிறார்கள்.

இந்தியாவில் மொத்தம் 1,74,659 ஐரோப்பியர் வர்க்கத்தவர்களும், 1,13,012 ஆங்கிலோ - இந்தியர்களு மிருக்கிறார்கள்.

த னி ப் பா ட ற் றி ர ட் டு

பத்திராதிபர் குறிப்பு—தஞ்சாவூர் சரபோஜி மகாராஜா ஸரஸ்வதி மஹால் லைப்ரரி காட்லாகில் இந்நூலைப்பற்றிப் பின்வருமாறு குறித்திருக்கிறது :—

"336. No. 690 (a) தனிப்பாடற்றிரட்டு.

ஏடுகள் 80 ; Lines 4—6 in a Page.

இது பலபுலவர்கள் பாடிய தனிப்பாடல்களின் திரட்டாகும். இதில் அச்சிடப்படாத பல செய்யுட்களும் இருக்கின்றன."

இந்நூலின் கையெழுத்துப் பிரதி யொன்றை, பஞ்சாமிர்தம் பத்திரிகையில் வெளியிடுதற் கென்றே தருவித்தேன். என்னால் இயன்றவரை எழுத்துப் பிழைகளைத் திருத்தி, இந்நூலி லுள்ள 58 செய்யுள்களையும் அச்சேற்றுகிறேன். எனக்கு விளங்காத, என்னால் திருத்த முடியாத, பாகங்கள் மட்டும், " " குறிகளுக்குள், பிரதியில் உள்ளபடியே, பதிபிக்கப்படும்-ப-ர் ப-ம்.

நூல்.

வள்ளற்கைத் தலமில்லாமானிடரைப் பாடி, அவர் வாசற்போந்து,
தள்ளத்தள் ளுண்டடைந்த நோவெல்லாம், புலவீர்காள் ! சாற்றக் கேளீர்;
உள்ளதநின் அன்பர்க ண்ணீர் ஊற்ற, வலஞ்சுழியில் வளர்ந் தொருகொம்போங்கும்
வெள்ளத்தி அடியின்பால் இட்டத்தால் நமக்காறி விடுங் கண்டீரே. (1)

தள்ளைக்கும் அன்னம் இடார்தமைக் காமதேனு எனச் சாற்றி, வீணே
கொள்ளைச்செந் தமிழ் உகுத்தால் மிடி போமே? புலவீர்காள்! கூறக்கேளீர்;
வள்ளைத்தன் குழைகொள்இரு பெண்ணை அணை ஒருபெண்ணை வளைகைத் தஞ்சை
வெள்ளைப் பிள்ளையைப் புகழ்ந்தால், கறுப்புப் பிள்ளைக்கொடியாள் மேவிடாளே. (2)

விண்வழியே ஓடுகின்ற மேகங்காள்! ஒரு வார்த்தை விளம்பக் கேளீர்:
மண்வழியே புகழ்நீத்த "மகதேகவாண னென்றன்" வரையிற் சென்றால்,
கண்வழியே முத்தொழுகும், கைவழியே சங்கொழுகும், காமனெய்த
புண்வழியே உயிர் ஒழுகும், வரும்வழியே பார்த்திருக்கும் பூவையார்க்கே* (3)

சொரிந்தாற் பொருள்வழங்கும் ராமரசத்
துன்முகிராசன் வரையில் தோகையன்னீர்!
தருந்தார் அறியாமல் பாகிநொந்தாள்
தாமரைக் கோயிலைத் திறந்து தனியே வந்தீர்;

---

* இந்தப் பாட்டின் அழகை என்னென்று சொல்வது! கண்ணீரும் கைவளையும் இன்னுயிரும் காதலிக்கு ஒழுகுவது போலப் பாட்டைப் படிப்பவர் செவி வழியெ தேனொழுகுவதும் உறுதி. ப-ம் ப-ர்.

வருந்தாதோ திருமேனி? இடைநோகாதோ?
மணிச்சிலம்பு புலம்பாதோ? வளைபொங்காதோ?
கருந்தாரை அளகம் நறு மலர் சிந்தாதோ?
கன்னுதோ உமது பத கமலத்தூடே? (4)

சீறிய மருவலர்ச் சித்து, வாம்பரி
ஏறிய தும்பிச்சி இலிங்க நாட்டிலே
கீறிய பிறைநுதற் கிளியைவிட்டு, நெஞ்சு
ஆறி இங்கிருப்பது "மதிபுட வண்ணமே" (5)

மலையினும் கானினும் போயினார் வருவரோ,
முலையில் வெம் பசலைபோய் முதுநிறம் கொள்ளுமோ,
தொலை இலங்கிய புகழ்ச் சோமன்வாழ் புவனைசூழ்
அலை இலங்கிய தடத் தன்னமே, இன்னமே! (6)

'மன்னுபுகழ்ப் பொன்னம்பலத் "தொண்டை" வேந்தன்,
மல்லர் கோமான் பவனி வருவான்; வந்தால்,
இன்னம் அவன் பவனியில் செல்லாதே; சென்றால்,
இருகை வளையும் கலையும் இழப்பாய்' என்றே,
அன்னை பிடித்திழுக்க, அயல் இழுக்கத், தங்கை
அங்கை பிடித்திழுக்க; அது தானுமன்றி,
பின்னையும் ஓர் தமக்கை பிடித்திழுக்க, ஆசைப்
பேய் இழுக்க, ஒருத்திமனம் பேதித்தாளே ! (7)

னையும் அடி என்னும்? கொற்ற நங்கோ ஆதன் தன் செஞ்சித்
தய்ய வரைநுண் இடைமடவீர்! துகிலின் தூமம் முகில் அன்று;
பெய்யும் துளியோ, அவன் காவில் பிரசத்துளியே, பிழையாது;
வையம் பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே. (8)

'வையம்பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டார்' என்று
ஐயன் களந்தைப் புகழேந்தி ஆண்டான் சொல்லும் அவரோ நீர்?
எய்யும் சிலைவேள் வடிவோனே! இராசாதிபனே! இப்போதெம் *
ஐயம் தவிர்த்த பெருமானே! ஆவோம் அடியோம் ஆவோமே.* (9)

புலவருக்கு நிதிஅளிக்கு 'மது...லான மைந்தன
புகழச செனற வாழுழகன'' பொன்னி நாட்டில்,
பலர் வழுத்துப் 'பஞ்சமினதன'' பூசை பண்ணிப்
பனைகளையே குருக்கள் எனப் பகருவோம் யாம்;
அலகின் மிக்க சாத்திரங்கள், நால் வேதங்கள்,
ஆகமங்கள், புராணங்கள், அவைகள் எல்லாம்
இலகளுக்குள்''ளிருக...வதனிள மருவாளைகருள''
எழுத ஒண்ணு மந்திரம் ஒன்றிருக்கையாலே. (10)

(தொடரும்)

* 'யிரபொாதமைய யாதவிழதத பெருமானெ யாவொமடி யொமாவொமெ''

பெண்மக்களின் மன வேற்றுமைகள்

("விலாஸினி," சென்னை.)

"இடிகளின் பெரும் முழக்கத்தையும், மின்னல்களின் கூர்மையையும், ஸ்திரீகளின் மனப் போக்கையும், யாவர் நன்குணர்ந்து கூறமுடியும்?" என்று மாந்தர்களினியல்பை ஆராய்ந்தறியும் கருத்துக்கொண்ட ஒருவர் வியந்துரைத்ததாகக் கேட்டதுண்டு. ஆகாயம் முழுவதும் ஒன்று சேர்ந்து கற்பாறைகள்போன்று (?ப-ம்ப-ர்) முழங்கும்பொழுது அப்பேரிரைச்சலின் தன்மையுடனும், கண்களைப் பறிக்கும் வண்ணம் பளீரெனக் கணப்பொழுதில் பாய்ந்து மறையும் மின்னலொளியுடனும், ஸ்திரீகளின் இருதயத்தையும் சேர்த்துக் கூறியது. அவர்களை அவ்வளவு கல்நெஞ்சுடையவரெனவும், க்ஷணத்தில் மாறும் சித்தமுடையவரெனவும் எடுத்துக் காட்டியதாகின்றதல்லவா? சஞ்சல புத்தியை பெண்ணுருவென்றே பழிப்பதுமுண்டு. மலர்போன்ற மிருதுவான சரீரத்தினுள் கடினமான ஹிருதயம் உறைவது எவ்வளவு அசம்பாவிதமாய்த் தோன்றுகின்றதோ, அவ்விதமே, நிலையற்ற புத்தியுள்ளவர்களென மாதர்களை இகழும்பொழுது, கொண்ட கணவனை சிறந்த தெய்வமெனத்தன்னயமற்ற அன்பு பாராட்டி ஒழுகும் உத்தமிகளின் மனவுறுதியின் பெருமையானது நினைவிற்குவந்து, அவர்களைப்பற்றி புலவும் பொது அபிப்பிராயத்தை உடனே சிதறச் செய்யக் கூடுமன்றோ?

எக்காலத்தும் ஒரே நிலையை — புருஷனிலும் மேலான, தளர்வற்ற மனவுறுதியை — தனக்குத் தானே யோசிக்கத் திறமையில்லாதவர்களும், தம்மைத் தாமே ரக்ஷிக்கச் சக்தியற்றவர்களுமானவரெனக் கூறப்படும் ஸ்திரீகளிடத்திலும், நாம் காணலாம். ஆயினும், அவர்களை ஒன்றிலும் ஊன்றி நிற்காத, பிடிப்பற்ற மனத்தோற்றமுடையவர்களெனக் கூறினால், அதுவே அநேகமாய் அவர்கள் தன்மைக்கு முற்றிலும் பொருந்துமெனத் தோன்றுகிறது. இளமைப் பருவம் தாண்டி யோசிக்கக் கற்றது முதல், முன்பின் ஒத்து நிதானத்துடனும், காரணத்துடனும் சிந்திப்பது, சாதாரணமாய் ஆண்மக்களினியல்பெனின், தங்கள் பலவகை மனத் தோற்றங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் வெகுவாய்க் காரணங்கள் கண்டு பிடிக்கமாட்டாமலிருப்பது, பெண்மக்

களின் சுபாவக் குறிப்பென்று கொள்வதிற் பிசகொன்று மில்லை. இமைப் பொழுதில் உதிக்கும் தங்கள் விருப்பிற்காவது, வெறுப்பிற்காவது முகாந்திரங்களைத் தேடியறியப் பல சமயங்களில் அவர்களே தம்மைச் சிரமப்படுத்திக் கொள்ளாமல் விடுவது, மிகுந்த அதிசயமல்ல. ஸ்வேச்சையும், செல்வாக்கும் ஏற ஏற, வெகுவாய் ஸ்திரீகள் இச் சுபாவத்தை மேன்மேலும் உறவாடி வளரச் செய்வதை நிதர்சனத்திலும் பார்க்கக் கூடு மல்லவா? சில நூற்றாண்டுகளுக்குமுன் இங்கிலாண்டை ஆண்ட எலிஜபெத் மகா ராணியை, இவ் விசித்திரமான குணமே உருவெடுத்து வந்தவளெனக் கூறலாம். மேகங்கள் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பொழுது இடையிடையே மறைவதும், பிரகாசிப்பதுமான வெயிலின் தன்மை போன்ற மனப் பாங்குடையவளான அந்த அரசியின் ஆளுகையில், ஒரு காரணமுமில்லாமல் எவ்வளவு பெயர்கள் அவள் ஆதரவையும், பிரியத்தையும் பெற்றுத் தலை சிலிர்த்துச் செழிக்க, மற்றும் சிலர் தம்மை யறியாமலே அவள் வெறுப்பையும், சினத்தையும் பெற்ற நிர்ப்பாக்கியரானார்கள்! ஆயினும், அரிய நன்மைகளும், சில சமயங்களில், ஒவ்வொரு நிமிஷத் தோற்றத்தின் பெருமையில் நடந்தேறக் கூடுமென்பதற்கு, அந்த ராணியையே அத்தாட்சியாகச் சொல்லலாம்.

மாதர்களின் தன்மையை ஆராயும்பொழுது, ஒரு குணத்திற்குச் சரியாய் அவர்களுடைய மற்றொரு குணமிருக்காதென்பதை ஒரு பழமொழியாகவே கொண்டிருக்கிறார்கள். ஜன சமூகத்தின் கண், அதற்கொட்டி அதனின்றும் வேறுபடாத மனோ பாவனைகளும், கொள்கைகளும் கொண்டொழுகும் புருஷனுக்கு, நேராக, காரணங்களோ டொத்த வழியைவிட்டு விநோதமான பாவங்களை மேற்கொண்டு சிந்திக்கும் ஒரு பெண்ணின் மனது, எவ்வளவு அதிசயமாகத் தோன்றும்! அவள் ஹிருதயத்தி லெழும்பும் பல திறப்பட்ட எண்ணங்களும், அவைகள் உற்பத்தியான விதமுமே, அவனுக்கு விளங்கக் கூடாதனவா யிருக்கும். உடைகளிலும், மற்றும் அணியும் பொருட்களிலும், ஆண் மக்களுக்கு அநேகமாய் அபிப்பிராய பேதமாவது, தனித்தனி ருசியாவது, முன் நோக்கித் தோன்றுவ தில்லை. இதன் சம்பந்தமாய்ப் பேச ஆரம்பித்தால், ஸ்திரீகளினுள்ளத்திற் கிளம்பும் பல விதமான தோற்றங்களை என்னென்றுதான் எடுத்துரைப்பது? ஒவ்வொன்றிலும் அதன் சிறு மாறுபாட்டையும் தேர்ந்தறிந்து, தங்கள் ருசிக் குணத்தைப் பின்னும் கூர்மையாக்கிக் கொள்ளுவதை, அவர்கள் பெருமையாகவே மதிக்கின்றனர். ஒவ்வொரு பொருளும் தங்கள் மனதிற்குத் தோன்றியவாறு அமைந்திருந்த பின்னே கண்டு களிப்புறும் இச் சுபாவம் நாளடைவில் விருத்தியடைந்து, இறுதியில் அவர்களை

எதையும் திருப்தியுடன் அங்கீகரிக்க வொட்டாமற் செய்துவிடுகின்றது.

மிக்க எழில் வாய்ந்த பெண்மணியொருத்தி தன்னைக் கண்ட எந்த ஆடவனும் தன் அழகில் ஈடுபட்டு மற்றவை யொன்றையும் ஒரு பொருட்டெனக் கருதாது அடி பணியச் சித்தமாயிருப்பானென்று தைரிய முறுவதுபோல, சௌந்தரியத்திற்காக மட்டும் தன் ஹிருதயத்தை விற்றுவிட அப்பெண் சம்மதிப்பாளென ஒரு புருஷன் எப்பொழுதும் திடமான நம்பிக்கைகொள்ளுவது முடியாது. அழகிற்கே ஒரு மங்கை அடிமையாகும் தன்மையுடையவளென்றால், மற்றொருத்தி, ஆடவரின் முக வசீகரத்தை மிகச் சாதாரணமாய்க் கருதுகின்றவளாய், முற்றிலும் வேறு விதமான குணங்களில் தன் மனதை நாட்டியவளாய்க் காண்பாள். செல்வமும் செல்வாக்கும் பொருந்திய பல பிரபுக்களையும் அசட்டைசெய்து, தன்னைக் காட்டிலும் மிக்க வயது சென்றவனும், கரிய நிறம்படைத்தவனுமான ஒதெல்லோவை, மாசு மறுவற்ற தேக காந்தியையுடைய தெய்வ கன்னிகைபோன்ற டெஸ்டிமோனா காதலித்துக் கணவனுக்கிக் கொண்டதிலும், இதற்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ? ஒதெல்லோவின் வீரச் செயல்களும் பெருங் குணமுமே ஹிருதயத்தில் வேரூன்றப்பெற்ற டெஸ்டிமோனாவிற்கும், பாரிஸ் என்னும் ராஜகுமாரனுடைய சௌந்தரியத்தையும் யௌவனத்தையும்மட்டும் கண்டு மயங்கிய ஹெலன் என்பவளுக்கும், என்ன ஸாம்மியம் கூறலாம்? இவ்விதம் பல வேறுபட்ட பாவனைகளை மேற்கொள்ளுவதற்கு, மாதர்களின் ஒரு அபூர்வமான மனப் பாங்கே காரணமென்பதி லென்ன சந்தேகம்?

குரூபமுள்ள பெண்ணைப் புருஷன் இச்சிப்பானென்பது சகஜமல்ல. "கன்யா வரயதே ரூபம்" என்றபடி, கண்ணுக்கினிய மணாளனையே வரிக்கக்கூடிய பெண் சமூகத்திலும், ஆண்மக்களைப் போன்று அநேகமாய் ஒரு ரீதியிலேயே சிந்திக்கும் தன்மையைப் பெறாத மனப் போக்கின் வயப்பட்டு, சௌந்தரியத்தைப் பாராட்டாமல், வேறு சில அம்சங்களையே உயர்ந்தனவாய்க் கருதக் கூடிய வர்க்களுண்டென்றால், புருஷர்களைக் காட்டிலும் மேலான அகப்பொலிவை இவர்கள் இவ் விஷயத்திற் பெற்றிருக்கிறார்களென்று கூறுவதில், என்ன தடை யிருக்கின்றது? நிதான புத்தியும் தீர்க்காலோசனையும் எப் புருஷனுக்கில்லையோ, அவனை நாம் மிகவும் குறைவாக மதிக்கின்றோம். ஆயினும், ஒரு ஸ்திரீயினிடத்தில் இக் குணங்க ளில்லாம லிருந்து, அவள் பெண் தன்மையி னழகைக் கெடுத்துவிடக் கூடுமெனச் சொல்லுவதற் கில்லை. அவளிடம் அவைகளை யெதிர் பார்ப்பதும் அனுபவ விரோதமே. பர்த்தாவை உயிரினும் மேலாகக் கருதக்கூடிய ஒரு அபூர்வ அன்பையும், பக்தி

யையும் உணர்ந்து நடத்திக் காண்பித்த கற்புக்கரசி சீதாதேவியி னிடத்தும், பின் விளைவதை யெண்ணுது தற்போது கிளம்பும் மனத் தோற்றத்தையே மேலாக் கொண்டு, அதன் வன்மையி லகப்பட்டு நிற்கும் சுபாவம் வெளியாகின்றதென்ருல், வால்மீகமக ரிஷி அவ்வாறெழுதியது, பெண் தன்மைக்கே அது பொதுவாக அமைந்துள்ள தென்பதை எடுத்துக் காட்டியதாக ஏற்படுகிற தன்றோ? "உலகில் பொன் மயமான மான்கள் உண்டென்று கேள் விப்பட்ட தில்லை. இதை ஏதோ மோசமெனக் கருதுகிறேன். இச் சைப்படி ரூபம் தரிக்கும் சாமர்த்தியம் வாய்ந்த அரக்கர்களுடைய வஞ்சனையாகவே ஒரு வேளை யிருக்கலாம்' என, அதி நுட்ப புத்தி கொண்ட லக்ஷ்மணன் தடுத்ததையும், காட்டில் சஞ்சரிக்கும் மற்ற சாதாரண மான்கள் எவ்வளவுண்டோ, அவைகளை எல்லாம் உயிருடன் பிடித்துத் தருவதாய்ச் சொல்லி ராமர் தயங்கியதையும் பார்த்தும், ஜானகி, தான்கொண்ட விருப்பத்தை மாற்ற முடிந்ததா? அவ்விருவர் சொல்லையும் பொருட்படுத்தாது முறண்டியதுபோ லவே, பின்பு, இறக்கும் தருவாயில் மாரீசன் ஓலமிட்டதைச் செவி யுற்றதும், அவளுக்குண்டான சந்தேகத்தைத் தீர்ப்பதன்பொரு ட்டு லக்ஷ்மணன் எடுத்துக் கூறிய யாவும், நீரிற் கரைத்த சாம்ப லைப்போல் ஆகிவிட்டதல்லவா? புத்திரனினும் மேலான அபி மானமும் பக்தியும்கொண்டு ஒழுகிவந்தவனிடத்து என்னென்ன கடும் சொற்கள் வழங்கும்படி, அதிமிருதுவான சுபாவத்தையுடைய சீதையும் இசையலாயிற்று! தனக்கு நேர்ந்த இன்னல்களையும், மானக் கேடுகளையும், ஒவ்வொரு சமயமும் உயிரைக் கொடுத்தாயி னும் நீக்க முன்வந்து, தன்னலமற்ற ஒரு பரிசுத்த காதலை, மற்ற நால்வரையும்விட அதிகமாய் வெளிக் காண்பித்த பீமசேனனை, பாஞ்சாலியும், அர்ச்சுனனைக் காட்டிலும் மேலாய் நேசிக்க முடிய வில்லையே! மகா கவிகளானபடியால், வால்மீக மகரிஷியும், வியா சரும், ஸ்திரீகளின் தன்மையை அதற்கமைந்துள்ள பலபாவனை களுடனும் சேர்ந்துணர்ந்து, நன்கு எடுத்துக் காட்டினர்களென்ப தில் நாம் ஐயம்கொள்ள வேண்டியதில்லை.

தன்னிடம் தன் சிறு விருப்பத்திற்கும் மாருமல் அன்புபூண் டொழுகும் மனைவியிடம் பூரணப் பிரியம் செலுத்திக் கொண்டா டாடாத கணவன், நூற்றில் ஒருவனிருந்தாலும் இருக்கலாம். வெளி யினின்றும் களைத்து வீடு திரும்பும் புருஷனை, உடனே தன் குறைகளைச் சொல்லத் தொடங்காமல் பரிவுடன் விசாரித்து, முக மலர்ச்சியுடன் மனைவி வரவேற்ருல், தன் இல்லற பாக்கியத்தை யெண்ணி, எக் கணவன்தான் களிப்பெய்தாம லிருப்பான்? ஆனல், தன் மனோரதங்கள் யாவையும் எவ்விதமேனும் நிறைவேற்றித் தன்னை ஒரு தேவதையாகவே மதித்துத் தொழும் பதியை

யடைந்து, மற்றவர் யாவரிலும் மிகவும் மேலான பாக்கியம் பெற்றவளென ஒரு பெண் சந்தோஷிப்பது, அவ்வளவு சகஜமல்ல. அவள் மேற்கொண்ட காதற்பெருக்கில், தன்னுடைய மனது, விருப்பம், என்பவை யாவற்றையுமே அறவே யொழித்து, அவள் வாக்கையே சிர மேற்கொண்டு புருஷன் நடக்க வாரம்பித்தால், அவனை வரவர அசட்டையுடன் நோக்கத் தொடங்குவது, மனைவியின் இயல்பாய் விடும். என்ன தான் ஒரு அரிய பொருளைப் பாவிப்பதுபோல் கொண்டாடப் படவேண்டுமென்ற ஆவல் மேலிட்டவளாயிருப்பினும், தன் அற்ப ஆசைகளை நிறைவேற்றுவதில், மேலோங்கி நிற்கும் தன் புருஷ குணத்தைக் கணவனிழக்க லாகாதென, அவள் விரும்புவாள். முற்றிலும் அவளுக்குக் கீழ்ப்படிந்து நடக்காத புருஷனே, மற்றவரிடம் அவளால் மிகவும் கௌரவத்துடனும் பெருமையுடனும் பேசப்படுகிறான். வீட்டில் தம் சொற்களை வென்று வரும்பொழுதும், பிறரிடம் தம்மை ஒவ்வொன்றிலும் கணவன் மீறி நடப்பதாகக் கூறுவதன்றோ சில மனைவியரின் ஸ்வபாவமாகிறது! எது கணவனுக்கு அப் பிரியத்தை யளிக்குமோ வென்ற கவலை இல்லாளுக்குச் சிறிது மில்லாமலிருப்பின், அதொன்றும் அவள் குணத்தை நல் வழியில் விளங்கச் செய்வதற்கு ஒரு சாதனமாய் நில்லா தென்பது திண்ணம்.

ஸ்திரீகளின் மனது மிகவும் நுட்பமானது. ஆகவே, அதில் வளர்ந்து வரும் உணர்ச்சிகளும், தீட்டிய, மேன்மையான கத்தியின் முனை போன்ற கூர்மையைப் பெற்றிருப்பது, பொருந்தக் கூடாத தல்ல. புத்திர வாஞ்சையின் பொருட்டோ, அல்லது பதிப்ரேமை மேலீட்டாலோ, சில சமயங்களில் எவ்வித தியாகத்தையும் செய்யப் பின் வாங்காத துணிவு பெறும் அவர்கள், இவ்விதம் அற்ப விஷயங்களிலும் பல வேறுபாடுற்ற மனப்போக்கை வெளிக்காண்பிப்பது, மிகவும் விநோதமாயிருப்பது மன்றி, அதை ஆராய்ச்சி செய்யவும் மனதைப் பெரிதும் தூண்டுகிறதல்லவா?

குறள் நானூறு!

ராப்பர் - 0—4—0; டக்ஸீன் - 0—6—0;

போஸ்டேஜ் 0—1—0

பஞ்சாமிர்தம் ஆபீஸ் - மயிலாப்பூர்,

சென்னை.

புத்தர் அறநெறி

ஸ்ரீலஸ்ரீ T. S. இலக்குமணப்போற்றிகள், தச்சநல்லூர்.

(305-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நாலாவது அதிகாரம்

44. இப் பூலோகத்தையும், யமலோகத்தையும், தேவலோகத்தையும் யார் வெல்லுவார்? சமர்த்தனுயுள்ளோன் (சரியான) புஷ்பத்தைக் கண்டுகொள்கிறதுபோலத் தெளிவாய்க் காட்டப்பட்ட அறநெறியை கண்டுக்கொள்வோன் யாவன்?

45. இப்பூலோகத்தையும், யமலோகத்தையும், தேவலோகத்தையும், சீடனானவன் (ஞானத்தினால்) வெல்லுவான். சமர்த்தனுயுள்ளான் சரியான புஷபத்தைக் கண்டுகொள்கிறது போல, சீடனானவன் தெளிவாய்க் காட்டப்பட்ட அறநெறியைக் கண்டுகொள்வான்.

46. இந்தச் சரீரமானது திரை நுரையைப்போல உள்ளதென்று உணர்ந்து, கானலைப்போல நிலையற்றதென்று அறிந்திருக்கிறவன், புஷ்பபாணனாகிய மாரனுடைய பூமுனைபோன்ற பாணத்தை முறித்துவிடுவான். மரணத்திற்கு அரசனாகிய யமனை ஒருபோதும் காணமாட்டான்.

47. புஷ்பங்களைச் சேகரித்துக்கொண்டு மயங்கிய மனமுடையவனை, நித்திரையிலுள்ளதோர் கிராமத்தை வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறதுபோல, மரணமானது கொண்டுபோய் விடுகிறது.

48. புஷ்பங்களைச் சேகரித்துக்கொண்டு மயங்கிய மனமுடையவன், தன் இன்பானுபவங்களின் திருப்தியடைகிறதற்கு முன்னர், மரணத்தால் வெல்லப்படுகிறான்.

49. வண்டானது தேனைச் சேகரிப்பதுடன் புஷ்பத்திற்காவது அதன் நிறத்திற்காவது மணத்திற்காவது சேதமின்றிச் செல்லுகிறது போல, ஞானியாயுள்ளவன் பூமியில் வசிக்கக் கடவன்.

50. பிறருடைய தவறுகளையாவது, அவர்கள் செய்தோ செய்யாமலோ உள்ள பாவங்களையாவது, ஞானியானவன் கவனியாமல், தன் சொந்தக் குற்றமுள்ள செயல்களையும் அஜாக்கிரதைகளையும் கவனித்தல்வேண்டும்.

51. ஆனால் அவ்வாறு நடவாதவனுடைய அழகிய, ஆனால், பயனற்றமொழிகள், அழகியவாய் நிறங்கொண்ட வாயினும், மணம் நிறைவில்லாப் புஷ்பங்களைப்போல இருக்கின்றன.

52. அவ்வாறு நடப்பவனுடைய அழகும் பயனும் உற்ற மொழிகள், நிறம் நிறைந்தும் மணம் நிறைந்துமுள்ள அழகிய புஷ்பத்தைப்போல இருக்கின்றன.

53. புஷ்பங்களின் ஒரு குவியலினின்றும் பலவிதமான மாலைகள் உண்டாக்கப்படுவதுபோல, ஒரு முறை பிறப்புற்ற ஒரு மனிதனால், அனேக நல்ல காரியங்கள் நிறைவேற்றப் படலாம்.

54. புஷ்பங்களுடைய வாசனை, அல்லது சந்தனக் கட்டையின், அல்லது தகர மல்லிகைத் தைலத்தின் வாசனை, காற்று மோதுகிற திசையை எதிர்த்துச் செல்லமாட்டாது. ஆனால், நல்ல ஜனங்களுடைய வாசனையோ, காற்றையும் எதிர்த்துச் செல்லுகின்றது; நல்ல மனிதன் ஒவ்வொரு இடத்தையும் ஊடுருவிச் செல்லுகின்றான்.

55. சந்தனக்கட்டை அல்லது தகரமல்லிகை, தாமரைப்பூ அல்லது வாசிகி, இவற்றின் நறுமணம் வெளிப்படும்பொழுது, அவற்றின் சிறந்த மணம் ஒப்பற்றதாயிருக்கின்றது.

56. ஆனால் தகரமல்லிகையிலும் சந்தனக் கட்டையிலும் நின்று உண்டாகிற மணம் இழிவானதாயிருக்கின்றது; சிறந்த குணமுள்ள ஜனங்களுடைய வாசனையானது, மிகவும் உயர்வுற்றதாகக் கடவுளை நோக்கி உயரச் செல்லுகின்றது.

57. இத்தகைய சிறந்த குணமுடையவர்களாய், அஜாக்கிரதையின்றி வாழ்வுற்று உண்மை ஞானத்தினால் பாச விடுதலை பெற்றவர்களிடத்தில், துர் இச் சாபிரோகனாகிய மாரனுக்கு, புகுவதற்கு ஒருக்காலும் வழி கிடையாது.

58.–59. பெரும்பாதையில் எறியப்பட்ட குப்பை கூளத்தின் குவியிலின்மேல் லிலிச் செடியானது இனிய மணமும் அழகிய காட்சியுமுடையதாய் வளர்வதுபோல, உண்மையான ஞான ஒளி பெற்ற புத்தரின் சீடனானவன், தள்ளுபட்ட குப்பைகளைப் போன்றவர்களிடையே, அஞ் ஞானத்தில் அமிழ்ந்து நடப்பவர்களின் நடுவே, தன்னுடைய ஞானத்தினால் பிரகாசிக்கின்றனன்.

ஐந்தாவது அதிகாரம்.

60. விழித்துக் கொண்டிருக்கிறவனுக்கு இராக்காலம் நீண்டிருக்கின்றது; இளைத்துப் போனவனுக்கு ஒரு மைல் தூரம் நீண்டிருக்கின்றது; உண்மையான நியாய பிரமாணம் தெரியாத மூடர்களுக்கு, வாழ்க்கை நீண்டிருக்கின்றது.

61. ஒரு பிராயாணி தனக்கு மேலான அல்லது தனக்குச் சமமானவனுடன் கூடுவதற்கு இலேயேல், தனித்ததோர் பிரயாணத்தை உறுதியாக வைத்துக் கொள்ளக்கடவன். மூடனுடன் கூட்டுறவு ஆகாது.

62. "இந்தப் புத்திரர் எனக்குச் சொந்தம், இந்தச் சொத்து எனக்குச் சொந்தம்" எனப்பட்ட எண்ணங்களால், மூடன் இம்சிக்கப்படுகிறான். அவன் தானே தனக்குச் சொந்த மில்லே; அப்படியானுல், மக்களும் சொத்தும் எவ்வளவு குறைந்த உரிமையவாகும்?

63. தன்னுடைய் மூடத்தனத்தைத் தெரிந்து கொள்ளுகிற மூடன், அந்த மட்டிலாவது விவேக முள்ளவனுயிருக்கிறான். ஆனுல், தன்னைத் தானே விவேகியாக நினைத்துக்கொள்ளுகிற மூடன், உண்மையாகவே மூடனுகச் சொல்லப் படுகிறான்.

64. ஒரு மூடன் தன் வாழ் நாள் முழுவதும் ஒரு விவேகியுடன் கூடியிருந்தால் (குழம்பில் கிடக்கிற) கரண்டி அந்தக் குழம்பின் ருசியை அறியாததுபோல, அவன் உண்மையை அறிந்து கொள்ளமாட்டான்.

65. புத்தி தீக்ஷண்முள்ளவன் ஒரு நிமிஷ மாத்திரம் விவேகியுடன் கூடியிருந்தால்,குழம்பின் ருசியை நாக்கு அறிகிறது போல, விரைவில் உண்மையை அறிந்து கொள்வான்.

66. அறிவில்லாத மூடர்கள், தங்களுக்குத் தாங்களே மிகவும் பெரிய சத்துருக்களாயிருக்கின்றனர்; ஏனென்றுல் வெறுப்பான பலன்களை அளிக்கிற தீயசெயல்களை அவர்கள் செய்கின்றனர்.

67. ஒருவன் பச்சாத்தாபப் படத்தக்க செயலானது, நன்றுய்ச் செய்யப்பட்டதன்று. அதனின்றும் அவன் அடைகிற பிரதிபலனுனது, அழுகையும் கண்ணீர் நிறைந்த முகத்துடன் கூடியதுமா யிருக்கின்றது.

68. அப்படிக்கின்றி, ஒருவன் பச்சாத்தாபப்படாத செய்கையானது, நன்கு செய்யப்பட்டதாகின்றது. அதினின்றும் அவன் அடைகிற பிரதிபலன், சந்தோஷமும் மனமகிழ்ச்சியுமாயிருக்கின்றது.

69. செய்யப்பட்ட தீவினையானது பலனை அளியாத காலம் வரைக்கும், மூடன் அதனைத் தேன்போல் நினைத்துக்கொள்கிறான்; ஆனுல், அது முதிர்ந்து பலனளிக்கும்பொழுது, அந்த மூடன் துன்பம் அடைகின்றான்.

70. ஒரு மூடன் மாசாமாசம் தன் ஆசாரத்தை (சந்நியாசியைப்போல) தருப்பைப் புல்லின் நுனியினுல் எண்ணட்டும்; ஆகிலும், நியாயப் பிரமாணத்தை நன்கு அறிந்து அளந்திருக்கிறவர்களுக்குப் பதினுறில் ஒரு பங்கு யோக்கியத்தை உடையோனுகான்.

71. தீய செயலானது பாலைப்போல உடனே மாறுகிற தில்லை; சாம்பலால் மூடப்பட்ட அக்கினியைப்போலக் கனிந்து கங்காகி அந்த மூடனைப் பின்பற்றுகின்றது.

72. தீய செயலானது வெளிப்படத் தெரிந்த பிற்பாடு மூடனுக்குத் துக்கத்தை விளைவிக்கின்றது, அப்பால் அவனுடைய நல்ல விதியைக் கெடுக்கின்றது. அது மட்டோ, அவனுடைய தசையைப் பிளக்கின்றது.

73. மூடனானவன் பொய்மையான கீர்த்திக்கும், சந்நியாசிகளுக்குள் அக்கிரஸ்தானத்துக்கும், மடங்களில் ஆதிபத்தியத்துக்கும், மற்ற ஜனங்களுக்குள்ளே பூஜிதைக்கும் இச்சிக்கட்டும்,

74. "இலௌகிகர்களும் உலகப்பற்றை விட்டவர்களும் இது என்னால் செய்யப்பட்டதென்று நினைக்கட்டும். செய்வதற்கு உள்ளதும் இல்லதுமாகிய ஒவ்வொன்றிலும், அவர்கள் எனக்குக் கீழ்ப்பட்டிருக்கட்டும்" என்றவிதமாய், மூடனுடைய மனசு நிகழ்கின்றது, அவனுடைய விருப்பமும் அகந்தையும் மேலிடுகின்றன.

75. "பொருட்செல்வத்தை நோக்கிச்செல்லுகிற பாதை ஒன்று, நிருவாண திசையை நோக்கிச் செல்லுகிற பாதை வேறொன்று". புத்தரின் சிடராகிய பிட்சுவானவன் இதையறிந்திருந்தால், கண்யத்துக்காக இச்சிக்க மாட்டான். அவன் இவ்வுலகப்பற்றை விட்டு விலகுவதற்கு முயலுவான்.

(தொடரும்)

"தாருல் இஸ்லாம்"

சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக் கொண்டிருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவானதாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

சிராவணம்

(ஆவணி அவிட்டம்)

ஸ்ரீ. R. அனந்தகிருஷ்ண சாஸ்திரி, சாந்திநிகேதனம்.

இப்பொழுது முக்கியமாக நம் தென் இந்தியாவில் சிராவணம் என்கிற கிரியையை பிராமணர்கள் நடத்தி வருகிறபடியினால், இந்தக் கிரியை உண்டான காரணங்களை இந்தப்பத்திரிகையில் கொஞ்சம் விசாரிப்போம். நம் ஆரியர்கள், வேத காலம் முதல், ஞான யோகத்திற்குச் சந்திரன் ஒத்தாசை செய்கிறதென்று சுக்கில பக்ஷத்தை ஞான காலமாகக் கொண்டிருந்தார்கள். சுக்கிலபக்ஷம் 15 தினங்களிலும், பிரதமை முதல் அஷ்டமி வரை அந்தப் பக்ஷத்திற்கு முதல்கால மென்றும், நவமிமுதல் பௌர்ணமிவரை மத்தியான்ன காலமென்றும்கொண்டு, சந்திரனுடைய கலைகளின் அபிவிருத்தியை உத்தேசித்து, பௌர்ணமிக்கு வெகு கௌரவம் கொடுத்தார்கள். நக்ஷத்திரம் 27-ல், எந்த நக்ஷத்திரத்தில் பௌர்ணமி வருகிறதோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரை அந்த மாதத்திற்குக் கொடுத்தார்கள். அதாவது, சைத்ர மாத மென்று, சித்திரை மாதத்திற்கு சித்திரா நக்ஷத்திரத்தில் பௌர்ணமி வருகிறதினாலும்; அப்படியே, விசாகத்தில் பௌர்ணமி வருகிறதினால், வைசாக மாத மென்றும்; இவ்விதமாக, பால்குண மாதம், பங்குனி மாதம் வரை பெயரிட்டார்கள். இவ்விதம் சில ஆரியர்களின் சித்தாந்தம். இந்த விஷயம் விவரமாகத் தைத்திரிய பிராமணத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சில ஆரியர்கள், தங்கள் தியானத்திற்குச் சூரிய கலைகளை ஒத்தாசையாக எடுத்துக்கொண்டு, சூரியனிருக்கும் ஒவ்வொரு ராசியின் பெயரை அந்த மாதத்துக்குக் கொடுத்தார்கள். அப்பொழுது அந்த மாதங்களுக்கு மேஷம், விருஷபம் என்று மீனம் மாதம் வரை 12 மாதங்களுடைய பெயர் வந்தது. வேதத்தில் சந்திரன் சம்பந்தமான கதைகளைக் காட்டிலும் சூரியன் சம்பந்தமான கதைகள் சாஸ்தி. இதன் விபரம் நன்றாகத் தெரிய வேண்டுமானால், லோகமான்யதிலகரின் "ஆர்க்டிக் ஹோம்" என்கிற புஸ்தகத்தைப்

பார்க்கவும். நம் தென் இந்தியாவுக்குக் குடியேறிவந்த ஆரியர்களில், குடியேறினவர்கள் பெரும்பாலும் சூரியனை உபாசிக்கிறவர்களாக இருந்தபடியினால், தாங்கள் அனுஷ்டித்து வந்த மாதப் பெயர்களைக்கூடவே வைத்துக் கொண்டார்கள். தெலுங்கு, கன்னடம் முதலான தேசங்களில் குடியேறினவர்கள் எல்லாரும் சந்திரனை உபாசித்தபடியினால், அவர்கள் அனுஷ்டிக்கிற மாதங்களுக்கு சாந்திரமான மாதப் பெயர்கள் வழங்கின. சூரிய சந்திரர்களுடைய உபாசனையானது, முதலில் சரீரத்தில் ஞானசம்மந்தமாக இருந்தது. ஆரம்பத்தில் சூரியன், பிறகு சந்திரன். சந்திரனுக்கு வேதத்தில் பிரதானத்தை வர்ணிக்கிற பாகங்களில், சூரியனைவிட வெகு கௌரவம் குறிக்கப்பட்டிருக்கிறது. சூரிய கலைகள் சரீரத்தையும் இந்திரியங்களையும் விருத்தி செய்கின்றன என்றும்; சந்திர கலைகள் மனதை அபிவிருத்தி செய்கின்றன என்றும்; அதிலும் மத்தியான்ன கால சந்திர கலைகள், அதாவது நவமி முதல் பௌர்ணமி வரையில் உள்ள கலைகள், வெகு கௌரவமாயும்; பௌர்ண மாச கலை ஞானத்தைப் பூர்த்திசெய்கிறபடியினால், பூர்ணிமா, பௌர்ணிமா என்றும், வர்ணிக்கப்பட்டது. ஆகையால், ஆயிரம் பூர்ணிமையைப் பார்த்து ஞானத்தைப் பூர்த்தி செய்தால், அவன் ஜன்மம் முடிந்துவிட்டது, பிறகு அடுத்த ஜன்மம் கிடையாது என்றனர். அந்தப் பழைய ஞாபகத்தைக் கொண்டாட, இப்பொழுது சதாபிஷேகமென்று, 80 அல்லது 84 வயது வரை ஆனவர்களுக்கு, ஒரு சடங்கு செய்கிறார்கள். மந்திர சாஸ்திரங்களில் நவமி முதல் பௌர்ணமி வரை, மேல்ஞான உபதேசம் பெற்றுக் கொள்ளுகிறவர்களின் காலமென்று குறிப்பிட்டிருக்கிறது. பிரதமை முதல் அஷ்டமி வரை, குண்டலினி சக்தியை, மூலாதாரமென்கிற இடத்திலிருந்து மேல் கிளப்புகிற முதல் காலம். இவ்விதமாக நம் முன்னோர்கள், சங்கராசாரியர் முதலானவர்கள் அனுஷ்டித்து வந்த வைதிகசாரத்தை, அவரவர்கள் எழுதிய புஸ்தகங்களில் பார்க்கலாம். இவ்விதமாக ஞானயோகம் சித்தித்தவுடன், நம் ஆரியர்கள், பிறர்களுக்குப் பிரபலஞ்செய்ய வேண்டியது அவர்கள் கடமையானபடியினாலும், அப்படிக்கு உபதேசஞ் செய்யாவிட்டால், அவர்களுக்கு ஈசுவர சாபம் நேரிடுமான படியினாலும், உடனே நம் பரதகண்ட முழுவதும், யாத்திரை செய்ய ஆரம்பித்தார்கள். ஞானத்தை வெளியிடாமல் தாங்களே உபயோகித்தால், அவர்களை ஆரியர்களின் கூட்டத்திலிருந்து விலக்குகிறது முண்டு. யாத்திரை செய்கிறது முன்காலத்தில் கால் நடையாக இருந்ததினாலும், நதிகளை வர்ஷா காலங்களில் தாண்டுகிறது சிரமமாக இருந்தபடியினாலும், மழை காலங்களில் ஓரிடத்திலேயே இருக்கலாமென்று ஒரு சபையில் தீர்மானஞ் செய்தார்கள். அதாவது, ஒரு வருஷத்தில்

இரண்டு மாதங்கள் யாத்திரை கிடையாது. இது நடந்தது பஞ்சாப் பிரதேசங்களில் வாஸஞ்செய்த காலமாக இருக்கலாம். பிறகு தெற்குத் தேசங்களில் குடியேறும்பொழுது, மழை நாலு மாதம் வரையிருந்தது. அப்பொழுது, நாலு மாதங்கள் ஓரிடத்தில் தாமஸிக்கலாமென்று சட்டஞ்செய்தார்கள். அதைச் சில ஸந்நியாசிகள் சாதுர்மாஸிய மென்று, நாலு மாதம் ஓரிடத்தில் வஸித்து வந்தார்கள். காலக்கிரமத்தில், இப்பொழுது வந்திருகிற சந்நியாசிகள் வேஷமாத்திரமாக இருகிறபடியினால், நாலு மாதங்கள் நாலுபக்ஷங்களாகக்குறைந்து, அதாவது இரண்டு மாதமாக ஆகி, அதை ஒரு சடங்காக அனுஷ்டித்து வருகிறார்கள். முன்காலத்தில் ஞானத்தை விருத்தி செய்து வந்த ஆரியர்கள், புஷ்யநக்ஷத்திரம் கூடிய பௌணர்ணிமை, அதாவது தைமாதம் பூசத்தில், நதிகளில் ஜலம் குறைந்து, வழிகளெல்லாம் யாத்திரை செய்யச் சுலபமாகவிருக்குமானதினால், அன்று, யாத்திரையில் நடத்த முடியாத அக்கினி காரியங்களை நிறுத்திவிட்டு, தங்களைக் காட்டிலும் ஞானம் கர்மங்களில் குறைந்தவர்களை அநுக்கிரகிக்க யாத்திரை ஆரம்பிப்பார்கள். அந்த யாத்திரை ஆறுமாதம் வரை நடந்து, பிறகு மழை காலம் ஆரம்பித்ததும், ஒரு கிராமத்திலோ பட்டணத்திலோ, ஆறுமாதம் வரை தங்குவார்கள். யாத்திரை காலங்களில், போன இடங்களில் பல வித்துவான்களைச் சந்தித்து, அவர்களுடன் யதார்த்த விஷயந்தெரியச் சபைகள்கூடி வாக்குவாதம் முதலானவை செய்யுங்கால், ஏதாவது அந்நியர்களை அவமானம், கௌரவக் குறைவு முதலானவை செய்த பாவங்கள் தெரிந்தோ, தெரியாமலோ, ஏற்பட்டிருந்தால், அவற்றை விலக்க, ஒரு பிராயச்சித்தம் செய்துகொண்டு, உடனே சிராவண பௌர்ணிமையில், அடுத்த யாத்திரையில் ஞான அபிவிருத்தியும் முன் சொன்ன குறைவுகளும் வாராமலிருக்கவும், அநுஷ்டானத்தை ஆரம்பிப்பார்கள். பிறகு ஆறுமாதமானவுடன், தைமாதம் பௌர்ணமியில், திரும்பவும் எல்லாவற்றையும் கட்டி வைத்துவிட்டு, யாத்திரை ஆரம்பிப்பார்கள். இப்பொழுது நம் ஆரியர்கள் ஆவணி மாதத்தில் ஆரம்பித்துத் தைமாதம் வரை ஒரு கிரியைகளும் நடத்தாததினால், தைமாதச் சடங்கு அடியோடு நின்றுவிட்டது. ஆனாலும், ஆவணிமாதஞ்செய்கிற உபாகர்மத்தில் சங்கல்பஞ் செய்யும்பொழுது, தை மாதஞ் செய்யவேண்டிய சடங்கைச் செய்யாததினால் உண்டான பாபத்திற்குப் பிராயச்சித்தஞ் செய்கிறேனென்று, சங்கல்பஞ் செய்கிறார்கள். அந்தத் தை மாதச் சடங்கு செய்தால், உடனே ஓரிடத்தில் மூன்று ராத்திரிக்கு மேல் தங்கக்கூடாது. இப்படி அநுஷ்டானஞ்செய்து வந்ததினால், முன் காலத்து ஆரியர்கள், வீடு முதலானவற்றில் அபிமான மற்றவர்களாயும், வெகு வித்துவான்களை யாத்திரிசையில் சந்தித்து விவாதம் முத

லானவற்றால் ஞான முதிர்ச்சி யடைந்து, எல்லா சாஸ்திரங்களிலும் சிறந்தவர்களாயு மிருந்தார்கள் என்கிற விஷயத்துக்கு, அவர்கள் எழுதியுள்ள சுவடிகளே சாக்ஷிபாக இருக்கின்றன. பிறகு இதை ஒரு சடங்காக நடத்திவரும்பொழுது, (அப்படியே எல்லா ஸம்ஸ்காரங்களும் அர்த்தமில்லாத சடங்குகள் ஆகிவிட்டன) அபிப்பிராய பேதமுண்டாகி, அதில் சிலர், முதல் உபநயநஞ் செய்த சிறு பையன்கள் மாத்திரம் சிராவணத்தை அநுஷ்டிக்க வேண்டு மென்றும்; சிலர் எல்லாருக்கும் பொது என்றும்; பிறகு அந்தத் தினத்தில், கிரகணம் வந்தால் கூடாதென்றும், அந்தச் சடங்கை ஒருமாதத்திற்கு முன்னமேயோ அல்லது பின்னேயோ செய்யலா மென்றும் விவாதப்பட்டு, உபாகர்ம விஷயமாகச் சுமார் 100 புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். இவ்விதமாக விவாதம் ஏற்பட்டு, சுமார் 500 வருஷங்க ளிருக்கலா மென்று, அவர்கள் எழுதிய கிரந்தங்களிலிருந்து யூகிக்கலாம். ஆகையால், சிராவணம், ஞானாப்பியாசஞ் செய்யக் குறிப்பிட்ட ஒரு முக்கிய காலம். இவ்விதமாகச் சுமார் ஆறுமாத காலம் ஓரிடத்திலும், பிறகு, ஆறுமாத காலம் ஸஞ்சாரத்திலும் கழிப்பது, வெகு காலம் நடந்துவந்த படியினால், கிரந்தங்களில் யாத்திரா காலங்களுக்கு உத்திராயண மென்றும், இருப்புக் காலங்களுக்கு தக்ஷிணாயண மென்றும் பல கதைகளுடன் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-Stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

"இந்து நேசன்"

வாரப்பதிப்பு - சந்தா விவரம்.

1-வருஷத்திற்கு	...	ரூ.	6	0	0
6-மாதத்திற்கு	...	,,	3	8	0
3-மாதத்திற்கு	...	,,	1	12	0

மலாய், மோரிஸ், நேட்டால், முதலிய வெளி நாடுகளுக்கு.

1-வருஷத்திற்கு	...	,,	10	8	0
தனிப்பிரதி	...	,,	0	2	0

For Particulars apply to:

THE MANAGER, THE "HINDU NESAN"

65, Armenian Street, MADRAS.

பத்திராதிபரின் சுற்றுப் பிரயாணம்

சென்ற ஆடி மாதம் முதல்தேதி சென்னையை விட்டுப் புறப்பட்டவன், ஆவணி மாதம் முதல் தேதி யன்றுதான் திரும்பிவந்து சேர்ந்தேன். இப்படி ஒரு மாத காலமாக நான் சுற்றுப் பிரயாணம் செய்து, கண்டு கேட்ட விஷயங்களில், பஞ்சாமிர்தம் வாசகர்களுக்கு ருசிகரமாயிருக்கக்கூடிய சிலசிலவற்றைப் பற்றி எழுத உத்தேசிக்கிறேன். வாசகர்களில் பலர், நான் பார்த்த ஊர்களைத் தாமும் பார்த்திருக்கலாம்; அந்தக் காட்சிகளைப்பற்றி என் மனத்தில் எழுந்த எண்ணங்களிலும் மேலான எண்ணங்கள், அவர்கள் மனங்களில் உதித்திருக்கலாம்; ஆயினும், சிலரேனும் பார்த்திரார் என்பது உறுதி; ஆகையால், நான் எழுதுவது முழுதும் வீணாகாதென்று நம்புகிறேன்.

முதலில் நான் மைசூருக்குப் போனேன். மைசூர் ராஜ்யத்தில் இதற்குமுன் பிரயாணஞ் செய்து, பங்களூர் மைசூர் நந்திதுருக்கம் ஸ்ரீரங்கபட்டணம் சிவசமுத்திரம் கன்னம்பாடி தும்கூர் ஷிமோகா ஹளேவீடு வேலூர் சிரவண பௌகோளா முதலிய இடங்களையும், ஆங்காங்குள்ள அற்புதக் காட்சிகளையும், நான் பார்த்ததுண்டு. பதினைந்து ஆண்டுகளுக்குமுன், முதல் முதல் நான் பார்த்த மைசூருக்கும், இப்பொழுதுள்ள மைசூருக்கும், வித்தியாசமுண்டு. அதற்குக் காரணம், இப்பொழுது மைசூர் அரசராய் விளங்கும் ஸ்ரீ கிருஷ்ணராஜேந்திர உடையார் மகாராஜா, தன் தலைநகரை அலங்கரிப்பதில் எடுத்துவரும் சிரத்தை என்றே சொல்லவேண்டும். அரமனைச் சொத்திலும் வருமானத்திலுமிருந்து, அளவிறந்த பணத்தை இதன் பொருட்டு அவர் செலவழித்து வருகிறாராம். தசரதசக்கரவர்த்தி அயோத்தியை ஆண்டுவந்ததைப்பற்றி, சந்திரன் நக்ஷத்திரங்களை ஆளுவதுபோலும், சூரியன் உலகத்தை ரக்ஷிப்பது போலும் என்று வான்மீகியும்;

> "வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
> செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்"

என்று கம்பரும், கூறியிருக்கின்றனர். ஸ்ரீகிருஷ்ணராஜேந்திரர் மைசூர் நகரத்தை அலங்கரித்து வருவதையோ, குபேர சம்பத்துள்ள ஒரு நாயகன், தன் பிரிய நாயகியின் வடிவத்தையும் இயற்கை வனப்பையும் பார்த்துப் பார்த்து மோகித்து, இன்னும்,

அவை அதிகம் சோபிக்கும்படி, ஆடையாபரணாதிகளால் அவளை அழகு செய்து வருவதற்கே ஒப்பிடலாம். இவ்வண்ணம் பதினேந்து ஆண்டுகளாக இவ்வரசர் செய்துவரும் முயற்சிகளே, முதலில் நான் பார்த்த மைசூருக்கும் இப்பொழுது நாளுக்கு நாள் மேல்மேலும் சிறந்துவருகிற மைசூருக்கு முள்ள வித்தியாசத்தின் காரணம். "அரசன் எப்படி அப்படியே குடி" என்பர். பங்களூருக்கும் மைசூருக்கும் இடையேயுள்ள மத்தூர் என்னும் ரெயில்வே ஸ்டேஷனில் காலைப் போசனத்தை விரும்பியபோது, அறுசுவையும் இளஞ்சூடும் நறுமணமும் கூடிய பலவகைக் கறிகளைத் தனித்தனியே வெவ்வேறு பாத்திரங்களில் பெய்து, தூய வெள்ளிய அன்னமும், நெய் தயிர் முதலியனவும், ஊறுகாயும், அவ்வாறே வெவ்வேருக அமைத்து, எல்லாவற்றையும் ஒரு பெரிய தாம்பாளத்தின் மேல் வைத்து, இலையினல் மூடி, பிறகு ஒரு சுத்தமான கட்டியான பெரிய வெள்ளைத் துணியினல் சேர்த்துக்கட்டி, ஒரு கூசாவில் குடி தண்ணீரோடு, நானிருந்த வண்டிக்குக் கொண்டுவந்து உதவிய நேர்த்தியையும் பணிக்கையையும் பார்த்தவுடன், மைசூர் ராஜ்யத்தில் பிரயாணஞ் செய்வோரின் சுக சௌகரியங்களை, இராசாங்க உத்தியோகஸ்தர்களும் பிறரும் எவ்வளவு கவலையோடு கவனித்துவருகின்றனர் என்பது துலங்கிற்று. இந்தியப் பிரயாணிகளும் இத்தனை ஆசார உபசாரங்களோடு சுசியான உணவு பெறுவதை, நான் வேறெந்த ரெயில்வேயிலும் கண்டதேயில்லை. மற்றொரு சிறு செய்தியையும் இங்கே கூறுவது பொருந்தும். நாட்டுப்புறத்து நகரங்களில்போல, பெங்களூரிலும் மைசூரிலும், சாதாரண "ஜட்கா" வண்டிகளே நடைபெற்று வருகின்றன. இந்த வண்டிகளின் விமரிசையை அதிகம் கூறவேண்டுவதில்லை: உள்ளே உட்காருவோர்பாடு அரிகண்டம் யமகண்டம் பாடுவோர் பாடேயாம்; குதிரைகளோ,

> "முன்னே சடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
> பின்னே இருந்து இரண்டு பேர் தள்ள * * *
> மாதம் போம் காதவழி."

இந்தக் கஷ்டத்தை ஒருவாறு நீக்க நினைந்து, மைசூர் மகாராஜா, 'ரப்பர் டயர்' போட்ட, சவாரிக்குச் சௌகரியமான 'டாங்கா' வண்டிகளைச் சொந்த பணத்திலிருந்து செய்வித்து, அடங்கிய விலைக்கு (ஒரு வண்டியின் விலை ரூ. 200 என்று கேள்வி) ஏழை வண்டிக்காரர்களுக்கு விற்று, தவணைப்படி கிரயத்தை வசூலிக்க ஏற்படுத்தியிருக்கின்றனராம். இவ்வளவு அற்பமான, ஆனல் பல ஜனங்களுக்குச் சௌகரிய சாதகமான ஒரு விஷயத்தையும், தன் மகோன்னத ஸ்தானத்திலிருந்து கவனித்து, அதற்கேற்ற உபாயத்தை நாடும் அரசர், தன் தலைநகரை மனோரதப்படி அலங்கரிப்பது அதிசயமன்றே.

நான் இதுவரை பார்த்த பட்டணங்களில் எதுவுமே, அழகில் மைசூருக்கு ஈடில்லை என்று திடமாய்ச் சொல்லுவேன். இராஜ புதன ஸம்ஸ்தானங்களில் ஜயபுரம் போன்ற சில நகரங்கள், இதனினும் அழகு வாய்ந்துள்ளன என்று கேள்வி; ஆனால், நான் கண்டதில்லை. அங்கும் கூட, சாமுண்டி மலையிலே, லளிதாத்திரி என்னும் சிகரத்தின் மீதிருந்து காணும் காட்சியும், மைசூர்ப் புதிய அரமனைக்கு எதிரா யுள்ள "மீர்ஸா பார்க்" முதலிய சில பூங்காவனங்களின் வனப்பும், இருக்குமோ என்பது சந்தேகம்.

ரங்கோன் முதலிய சில நகரங்களில், வீதிகளுக்கு, ஒன்று வது வீதி, இரண்டாவது வீதி, மூன்றாவது வீதி, என்று கணிதப் பெயர்களே இட்டிருக்கின்றார்களாம். மைசூரிலோ, ஒவ்வொரு வீதி, சந்து, குறுக்குவழி, பூந்தோட்டம், வெளியிடம், தனியிடம், சேர்ந்த இடம், எல்லாவற்றிற்கும், வைஸ்ராய்கள், மகாராஜாவின் பந்துக்கள், அவருக்குப் பிரியமானவர்களின் பெயர்களே இடப் பட்டிருக்கின்றன. சாமுண்டி மலையின் அடிவாரத்தில் செல்லும் ஓர் அழகிய பாதைக்கு, "அசுவஸ்தநாராயணர் குதிரைப் பாதை" என்ற பெயர் இட்டிருப்பதைப் பார்த்தவுடன், 35 ஆண்டுகளுக்கு முன் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜில் என்னுடன் சகபாடியா யிருந்து, பின்பு மைசூர் ராஜ்யத்தில் 'இஞ்சினீர்' வேலை பார்த்து மகாராஜாவின் நன்மதிப்பைப் பெற்று, இப்பொழுது 'பென்ஷன்' பெற்றிருக்கும் அசுவஸ்த நாராயணையரின் பெயரே அது என்பதை, நான் நினைக்கவில்லை. இவ்வாறு பல பெயர்களைப் பார்த்து வருகையில், என் மனத்தில் திடீரென ஒரு சந்தேகம் உதித்தது: கிருஷ்ணராஜேந்திரர், நடுப்பிராயத்தினர், திடகாத்திரர்; இன்னும் முப்பது, நாற்பது ஆண்டுகள் ஆளக்கூடும்; இனிமேல் தனக்குப் பிரியமான உத்தியோகஸ்தர்களையும், மைசூருக்கு வரும் வைஸ்ராய்களையும், இவ்வாறு கௌரவம் செய்ய விரும்பினால், என்ன செய்வார்? அவருக்குப் பிந்திவரும் எதிர் கால அரசர்கள் என்ன செய்வர்? இதற்குமுன், இந்த வீதிகள் வழிகள் முதலியன என்ன பெயர்களால் வழங்கி வந்தன? இந்தப்பெயர்களை மாற்றும் உரிமை பின்வருவோருக் குண்டோ? இவ்வண்ணம் தலைமுறைதோறும் பெயர்களைமாற்றத்தொடங்கினால், சரித்திரங்களிலும் தஸ்தாவேஜுகளிலும் குழப்பம் உண்டாகாதோ? இவ்விதச் சந்தேகம் என்மனத்தில் முதலில் உதித்தது, மைசூரில் அன்று. சென்னையிலே, "ப்ளாக்டவுன்" என்றிருந்ததை "ஜார்ஜ் டவுன் என்று மாற்றி, இப்பால் "காந்திநகர்" என்று மாற்ற முயன்றபோது, முதலில் பிறந்தது. சென்னையிலே, குஜிலியின் முக்கில், ஒரு வீதிக்கு 'ஈவனிங் பெஜார்" என்றும், அடுத்த வீதிக்கு "நீவிங் பெஜார்" என்றும் பெயரிருந்தது. இதை நான் முதலில் கவனித்தபோது, உண்மை

எவ்வர் றிருப்பினும், ராஜதானி நகரத்திலே ஒரு வீதிக்கு 'தீவிங் பெஜார் ரோடு' (அதாவது, திருட்டுக் கடைத்தெரு) என்றிருப்பது, நகர வாசிகளுக்கேனும் போலிஸாருக்கேனும் கௌரவம் தருவதன்று என்று நினைத்து, அப்பொழுது முனிஸிபல் கமிஷனராயிருந்த என் நண்பர் மலோனி துரைக்கு அதைப்பற்றி எழுத, அவர், "தீவிங் பெஜார்" என்ற பெயரை "குஜிலி பெஜார்" என்று (அல்லது, 'ஈவனிங் பெஜார்' என்றோ?) மாற்றினர். அப்பொழுதும், இந்தச் சந்தேகம் பிறந்தது. இது நிற்க.



மைசூர்—ஜகன்மோகன அரண்மனை

இந்த முறை மைசூரில் இருக்கும்பொழுது, முன்பு பார்த்துள்ள ஸ்ரீரங்கபட்டணத்தைப் பின்னும் இருமுறை சென்று பார்த்

ததுமன்றி, (திவான் பகதூர் ஸ்ரீ. L. A. கோவிந்தராகவையரவர்கள் பார்க்கும்படி எனக்குக் கூறிய) 'சோமநாதபுரம்' என்னும் பழைய ஊர்ப் பாழ்ங்கோயிலையும் சென்று பார்த்தேன். அவ்வூர் மைசூரிலிருந்து (மோட்டார் வழிக்கு) 30½ மைல் தூரம். காலை 7 மணிக்குப் புறப்பட்டுச் சென்றவன் முற்பகல் 2 மணிக்குத் திரும்பி வந்தேன். கோயிலின் கற்பணிச் சிற்பவேலை வெகு அழகாயிருக்கிறது; ஆனால், பேளூர், ஹளேபீடு கோயில்களைப் பார்த்தவர், இதில் விசேஷமானதொன்றுமில்லை என்றெண்ணலாம்; எனினும், இந்தியர்களுக்குள் ஸ்தபதிகளைவிடச் சிற்பிகளே பெருமதிக்கப்பட்டனர், சிற்பமே (விசித்திரக் கற்பணியே) அதிகம் கொண்டாடப்பட்டது என்னும் கொள்கையை, இதுவும் விளக்குகின்றது.

மைசூர் ராஜ்யத்தை இப்பொழுது ஆண்டுவரும் வம்சத்தார், ஆங்கிலேயருக்கு மிகக் கடமைப்பட்டுள்ளவர் என்பதைப் பலர் அறிந்திருப்பர். ஸ்ரீ கிருஷ்ணராஜேந்திரர், ஐரோப்பியர்களிடத்தில் விசேஷ பக்தியும் விசுவாசமும் சிரத்தையும் உள்ளவராம். பல வாண்டுகளாகப் பல லக்ஷக் கணக்கான பொருளைச் செலவழித்துக் கட்டிக்கொண்டுவரும் புதிய அரமனை, ஐரோப்பிய அதிதிகளுக்கென்றே கட்டப்படுகிறதாம். மைசூரிலே, சர்வ கலாசாலையும், மகாராஜா காலேஜும் தவிர, சில ஹைஸ்கூல்களும், மாணவிகள் மிகச் சிலர் (ஐந்தாறு பேர் என்பர்!) ஆயினும், பெண்களுக்கென்று தனியாக மகாராணி காலேஜும், இருக்கின்றன. இவையன்றி, மகாராஜாவின் அரமனைகளும், அவருடன் பிறந்த ராஜகுமாரிகளின் அரமனைகளும், டிவிஷன் உத்தியோகஸ்தர் ஆபீசுகளும், நியாயஸ்தலங்கள் முதலியனவும் இருக்கின்றன. இரசிக சிகாமணியான அரசரின் தலை நகரில், சங்கீதம் சிற்பம் ஓவியம் முதலிய கலைகளுக்கும் குறைவில்லை. பட்டணமோ, அமராவதி போல் இலங்குகின்றது; இராப்பட்டால், எங்கும் ஒரே எலக்ட்ரிக் ஜோதிமயந்தான். இவ்வளவிருந்தும், மூளைப்ரவர்த்தியின் முழக்கமும் சுதந்திர தாகத்தினுண்டாகும் விக்கல் ஓசையும், அரிதென்றே சொல்ல வேண்டும். மைசூர் ராஜ்யத்தின் தலைநகரத்தின் கதியே இப்படியானல், இதர சுதேச மன்னர்களின் இருப்பிடங்களைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இதனல்தான், சுயராஜ்யத்தை நாடும் தேச பக்த தீரர்களின் மனமும், சுதேச ராஜ்யங்களைப்பற்றி நினைக்கவே, மலைத்து ஏங்குகின்றது. என்று, எப்படி, இந்தப் பெரு முடிச்சு அவிழுமோ, எவரே அறிவர்?

(தொடரும்)

ஐரிஷ் கவி-நாவலர்

பாட்ரிக் மாக்கில்

என்பவரின் சுய சரிதை

ஸ்ரீமதி C. N. நல்லமுத்தம்மாள், M.A., L.T., லண்டன்.

முகவுரை.—எங்கள் பள்ளிக்கூடத்தில் புதன்கிழமை இராத்திரிகளில் மாணுக்கர் ஐக்கிய (Students' Union) சங்கம் கூடுவது வழக்கம். அதில் சில சமயங்களில், இத்தேசத்திலும் பிற தேசங்களிலும் பேர்போன மகான்களை அழைத்து, அவரவர்களுக்கிசைந்த விஷயங்களைக் குறித்துப் பேசச் சொல்லுவார்கள். இந்நாட்டு மந்திரிகள், ஜன சட்ட சபை அங்கத்தினர், மற்றும் கல்வி கேள்விகளில் தேர்ந்த நிபுணர்கள், வந்து பேசியிருக்கிறார்கள். பின் வரும் சரித்திரம் சொன்ன பாட்ரிக் மாக்கில் என்பவர், அயர்லாந்து தேசத்தவர், இளம் பிராயத்திலே கவிகளும் புஸ்தகங்களும் எழுதியவர், "தன்னுடைய சரித்திரத்தையே" சொல்லப் போகிறார் என்று பள்ளிக்கூட விளம்பரத்தில் வாசித்தேன். 'தன்னுடைய கதையா? இதென்ன விபரீதம்! கேட்கலாம்' என்று ஆவலாயிருந்தேன். நாங்கள் மத்தியானம் சாப்பிடுகிற இடத்தில் என் சிநேகிதிகள் சிலருடன் பேசிக்கொண்டிருந்த பொழுது, யார் யார் அன்று சங்கக் கூடத்திற்குப் போகிறார்கள் என்று, ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டோம். அதில் ஒருத்தி, (ஆங்கிலப் பெண்) "நான் போகிற தில்லை. அந்த மாக்கிலுக்கு ஒரு கதை தான் தெரியும். அதைத் திரும்பத் திரும்பச் சொல்லுவார்." என்று அலட்சியமாய்ச் சொன்னாள், "நீ கேட்டிருக்கிறாயா, அந்தக் கதையை," என்றேன், "இல்லை. நான் இதைப்பற்றிக் கேள்விப்பட்டேன்" என்று கடுகடுத்துப் பதில் சொன்னாள். நான் கொஞ்சம் சலனமடைந்து, "எனக்கு எதொரு விஷயமும், அயர்லாந்தைக் குறித்தது என்றால், பிடிக்கும்; நான் கட்டாயம் அவர் பேசுவதைக் கேட்கப்போகிறேன்' என்றேன். இப்படி என் பிடிவாதத்தைச் செலுத்தியதற்காக, நான் இன்றும் சந்தோஷப் படுகிறேன்.

பாட்ரிக் மாக்கில், இளம்பிராய முள்ளவர்; நடுத்தரமான உயரம்; மெல்லிய உடம்பு, பெருத்த தலை; கண்கள் இரண்டும், குறுகுறு வென்று புத்தி நுட்பம் பொலிந்து விளங்கின. பரிதாபகரமானது, கல்லையும் கரைக்கும்படி யுள்ளது அவர் முகம். அவர்

பேச்சுநடை மிகவும் சுகமானது; உள்ளர்த்தம் வைத்தும், விகடமாய்ப் பேசியும், தன் துக்ககரமான சரித்திரத்தை, எல்லாரும் சிரித்துக்கொண்டே கேட்கும்படியாய், அவ்வளவு சாதுர்யமாய்ப் பேசினர்.

அவர் சரித்திரத்தைக் கேட்டவுடனே, என் தமக்கை குழந்தைகளின் ஞாபகம் வந்தது. அவர்கள் என்னை அடிக்கடி கதை சொல்லச் சொல்லி, நச்சுப்படுத்துவார்கள். சில சமயங்களில் குணம் வந்தபோது பெரியோர் சரிதைகளையும், மற்றப்போது கட்டுக்கதைகளையும், அலட்சியமாய்ச் சொல்லுவேன். குழந்தைகளில் ஒருவன், நான் ஆரம்பிக்கும் பொழுதெல்லாம், "இதென்ன நிஜக் கதையா, பொய்க் கதையா?" என்று, என்னை உறுதிமொழி கொடுக்கச் சொல்லுவான். அவனுக்கு, இந்த மகான் சரித்திரம், நிஜக் கதையை அனுப்பவேண்டுமென்று அவாமேலிட்டு, எழுதினேன். என் சிநேகிதி அதைப் பார்த்துவிட்டு, இதைக் கட்டாயம் பஞ்சாமிர்தத்துக்கு அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தினள். அவள் மூலமாய்த் தான், இது உலகப் பார்வைக்கு வருகிறது.

பாட்ரிக் மாக்கிலின் சுயசரிதை.

முப்பது வருஷங்களுக்கு முன், அயர்லாந்தில், டானேகல் (Donegal) என்னும் கிராமத்தில், ஒரு கிறிஸ்மஸ் தின சாயங்காலத்தில் நான் பிறந்தேன். கிறிஸ்மஸ்தின சாயங்காலத்தில் பிறப்பதென்றால், சாமான்யமா? அபூர்வ ஆத்மாக்களல்லவோ, அன்று அந்தியில் பிறப்பார்கள். ஸர் ஆர்தர் கானன்டாயில் (Sir Arthur Conan Doyle), ஸர் ஆலிவர் லாட்ஜ் (Sir Oliver Lodge), அன்று பிறந்தவர்கள், இறந்தவர்களுடன் நாள்தோறும் பேசுகிறார்களல்லவா? 'கிறிஸ்மஸ்தின மாலையில் பிறக்கும் குழந்தைகள், பிறந்தவுடனே தங்கள் தாய்மார் முகத்தை எறட்டுக் குறிப்பாய்ப் பார்த்து, கலகல வென்று சிரிப்பார்கள்' என்று, எங்கள் டானேகல்லில் சொல்லுவதுண்டு. நான் பிறந்தவுடனேயோ, ஓயாமல், வீறிட்டு அழுதேனும். நான் செய்ததுதான் சரி என்று, எனக்குப் பின் அனுபவங்களால், தோன்றுகிறது.

எங்கள் டானேகல்லில் பெரிய வீடுகள் கிடையாது. எங்கள் வீடு, இரண்டு அறையுள்ள ஒரு சிறு குடிசை. "நனை சுவர்க் கூரைக் கனைகுரற் பல்லி" என்பது, அதற்கு மிகவும் பொருந்தும். வீட்டிற்குப் பின்னால் ஒரு சிறு கொல்லையுண்டு. அதில் ஏதோ ஆடு மாடுகள் மேயும்படியான இடமிருந்தது. புல் என்னமோ, இருந்தது வாஸ்தவந்தான்; ஆனால், மாடுகளோ? என் நினைப்பில், ஏதோ ஒரு பசு மேய்ந்ததைக் கண்டால் போல் தான் ஞாபகம்.

என் தாயார் ஒரு கர்நாடக மனுஷி. குட்டித் தேவதைகளிலும், பிசாசுகளிலும் அவளுக்குப் பூரண நம்பிக்கை. குட்டித் தேவதை

களை (Fairies) "சிறு ஜனங்கள்" (Little Folks) என்று கூப்பிடுவாள். அவள், பால் கடைந்து வெண்ணெய் எடுக்கும்போதெல்லாம், முதல் முதல் சேர்ந்து வரும் வெண்ணெயை, வெகு பயபத்திரமாய் எடுத்து, தெருவாசல் நிலைப்படிக்கு முன் வைப்பாள். குட்டித் தேவதை, அவ்வெண்ணெயைக் கட்டாயம் தினந்தோறும் வந்து சாப்பிட்டுப் போவது நிச்சயம். அந்தக் குட்டித்தேவதை யார் தெரியுமா?

டானேகல்லில் நாங்கள் தினசரி சாப்பிடுவது உருளைக் கிழங்கு. எங்கள் டானேகல்லில் ஒரு வர்த்தக னுண்டு. அவனிடமிருந்துதான் என் தகப்பனர் உருளைக் கிழங்கு வாங்குவது வழக்கம். ஒரு சாக்கு உருளைக்கிழங்குக்கு, 12 அல்லது 16 ஷில்லிங்கு (ரூபா) கொடுக்கவேண்டும், ஒரு ஷில்லிங்குக்கு மூன்று பென்சு வீதம் வட்டி வாங்குவான்.

"பேராசைக்காரன் குப்பன் செட்டி—அவன்
பிர்ம்மாதிகளிடத்தும் வாங்குவான் வட்டி."

வெகு சிக்கிரத்தில், வட்டி முதலாகி வாழ் குடும்பம் பாழாகி, சட்டி எடுத்துச் சந்தியில் நிற்பவர் எத்தனையோ பேர் உண்டு. ஆகையால், எங்கள் நாட்டினர், இங்கிலாந்து அமெரிக்கா முதலிய அந்நிய நாடுகளுக்குப் பிழைக்கச் சென்றது. ஓர் ஆச்சரியமா? அந்த வர்த்தகன் மரித்தபோது, பாங்கில் ஒரு கோடி பவுன் வைத்துவிட்டுப் போனன்.

டானேகல்லில், பெண்கள், அநேகமாய் மேல் ஜோடு பின்னிப் பிழைப்பார்கள். அவர்களுக்கு ஒரு வாரக்கூலி $7\frac{1}{2}$ பென்சு தான். அவர்கள் பின்னிய மேல் ஜோடுகளோ, 14 அல்லது 16 ஷில்லிங்குக்குக் கடைகளில் விலைப்போகும்.

நான் சிறு பையனயிருந்த பொழுது, என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினர்கள். எங்கள் டானேகல் பள்ளிக்கூடம், ஒரு சிறு குடிசை. அதில் படித்த பையன்கள், ஏதோ பன்னிரண்டு பேர் இருக்கும். என் பள்ளிப் படிப்பைப்பற்றி எனக்கு ஒன்றும் ஞாபகமில்லை; ஆனல், ஒரு விஷயம் மாத்திரம் என் மனதில் நன்ருய்ப் பதிந்திருக்கிறது: எங்கள் பள்ளிக்கூடத்துச் சுவரில் கோலை யெடுத்துத் தாறினல் பட்டை யடித்ததுபோல், தடித்த கறுப்பு எழுத்துக்களில், ஒரு நீதி எழுதியிருந்தது. அந்த நீதியினுடைய தாத்பாரியம்; "பொன் வெள்ளி முதலிய தனத்தை விடக் கல்வியே சிறந்தது," என்பதுதான்.

நான் ஒரு மனிதனனேன்—பத்து வயதில்! பூலோகத்தில் போய்ப் பிழைக்கும் வழி தேடும்படி, எங்கள் தயார் என்னை அனுப்பினள். எங்கள் ஊர்ச் சிறுவர்கள், சாதாரணமாய், வட அயர்லாந்துக்குச் சென்று, அங்கே இருக்கும் பெருங் கழனி

களில், ஆறு மாதத்திற்கோ, அல்லது சில வருஷங்களுக்கோ, வேலை செய்வதாக அடிமை முறி எழுதிக் கொடுத்து, வேலையில் அமர்வது சகஜம். அதற்காக என்னையும் அனுப்பினார்கள். புறப்படுவதற்குமுன், எனக்கு, நான் பிறந்தது முதல் கண்டிராத புது பூட்ஸ் வாங்கிப் போட்டு, எனக்கிருந்த சராய், சட்டையையும் போட்டு, எங்கள் தாயார் என்னை வழி யனுப்பினாள். நான் போய்ச் சேரவேண்டிய இடத்திற்கும், எங்கள் டானேகல்லுக்கும் அறுபது மைல் தூரம் இருக்கும். எத்தனை காதமானாலும் நடந்துதான் திருவார்கள எங்கள் ஊரார். ரயில் வண்டி யிருந்தது; ஆனால் செலவோ?

சிவிமினுக்கிய தலையையும், புதிய பூட்ஸையும் பார்த்துப் பரமானந்தப் பட்டுக்கொண்டு, பெருமையாய் நடந்தேன். பத்து நிமிஷந்தான் நீடித்தது என்னுடைய சுவர்க்க போகம். 'பரம்பரை ஆண்டியோ, பஞ்சத்திற் காண்டியோ'? பூட்ஸைக் கழற்றிக் கையில் தூக்கிக்கொண்டு நடந்தேன். களைத்துத் தவித்து, வடக்கே ஒரு சந்தை கூடுமிடத்தை அடைந்தேன். நான் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு, சுமார் ஆறு அடி ஐந்து அங்குலம் உயரமுள்ள ஒரு பெருங் குடியானவன் வந்து, என்னை உற்றுப் பார்த்தான்.

"நீ யார்?" என்றான்.

"நான் வேலைதேடி வந்திருக்கிறேன்" என்றேன்.

"சரி என்னிடத்தில் வேலைக்கு அமருவாயா?" என்றான்.

"இஷ்டந்தான்; கூலி என்ன?" என்றேன்,

உடனே அவன் என்னைப் பிடித்து, என் கழுத்து, முதுகு, விலா, முதலிய அவயவங்களை அமுக்கிப் பார்த்தான். பிறகு, "என்ன கேட்கிறாய்?" என்றான்,

நான், "ஆறு மாசத்திற்கு $2\frac{1}{2}$ப் பவுன்," என்றேன். அவன் 'இல்லை' யென்று, குறைத்துச் சொன்னான். $1\frac{1}{4}$ மணிநேரம் பேரம் பண்ணினோம். கடைசியாய், 1 பவுன், 14 ஷில்லிங்குக்கு இசைந்தேன். அவன் பின்னால் சென்றேன்.

என்னுடைய எஜமானன் வீடு, கொஞ்ச தூரத்தில், நாட்டுப்புறவாடையிலிருந்தது. வீட்டிற்குள் ஒரு வயது முதிர்ந்த தள்ளாத கிழவி, வேக வைத்த உருளைக் கிழங்குகளை உரித்துக் கொண்டிருந்தாள். அவள் குனிந்த தலை நிமிராமல், என் எஜமானனை, "என்ன, ஆள் பிடித்துக்கொண்டு வந்தாயா?" என்றாள்.

"உம், ஆள் பிடித்து வந்தேன்" என்று, அலட்சியமாய் என்னைச் சுட்டிக்காட்டினான்.

அந்தக் கிழவி, உடனே என்னை, 'இங்கே வாடா, போய்ப் படுக்கையை"—என்று, என்னமோ சொன்னாள். எனக்கு

விளங்கவில்லை. "ஐயோ, எனக்குப் பசி காதை அடைக்கிறதே" என்றேன். "ஆகா! வந்ததற்குள், பசியா? நீ என்ன வேலை செய்தாய், சாப்பாடு பெறுவதற்கு?" என்று, ஒரு வார்த்தை தான் காதில் விழுந்தது. உடனே ஒரு அறையின் மூலையிலிருந்த படுக்கையில் போய்ப் படுத்து, ஒரு நிமிஷத்திற்குள் கண் அயர்ந்து விட்டேன். ஆகா! அந்த ஆனந்த நித்திரை இன்னும் எனக்கு வரப்போகிறதா! ஆனால், என்னுடைய சுகம் நீடிக்க வில்லை. சில நிமிஷங்களில், என் காதினால் பிடித்து இழுக்கப்பட்டேன். என் எஜமானன், "என்ன ஒய்யாரம் உனக்கு, இந்தப் படுக்கையில் படுக்க!" என்றான். நான், "ஐயா, கிழவி அம்மாள் என்னைத் தூங்கச் சொன்னார்களே!" என்றேன்.

'ஓகோ, இதுவா உன் படுக்கை? உன்னுடையது அதற்கடியில்" என்று, உறுமினர்.

அந்தக் குடியானவன் வீட்டில், காலை மாலை இரண்டு பொழுதும், உருளைக்கிழங்கு வேக வைத்துப் பன்றிகளுக்குப் போடுவது தான் என்னுடைய வேலை. அங்கு இருந்த வரையில், என்னுடைய ஆகாரமும் அதே உருளைக்கிழங்கு தான். பன்றிகளுக்கு வேக வைப்பதில் நல்ல உருளைக்கிழங்குகள் தான், என் பங்கு. என் எஜமானனும், அவர் தாயாரும், சாயங்காலங்களில் தேயிலைக் கஷாயம் (தேத்தண்ணீர்) சாப்பிடுவார்கள். அது அபூர்வ பான மாதலால், கேவலம் வேலைக்காரர்கள் சாப்பிடக் கட்டுமா?

நான் இங்கு சில நாளிருந்தேன். ஏதோ என் எஜமானன் விபரீதமாய்த் தனி வாசம் செய்வதுபோல் தோன்றிற்று. ஒருவரும் அவர் வீட்டிற்கு வருவதில்லை. அண்டை அயலார் அந்தப் பக்கம் போகும் பொழுது, முகத்தைச் சுளித்துப் பல்லை நெறித்துக் கோபத்துடன் சபித்துச் செல்லுவார்கள். இதனுடைய மர்மம் புரிய வில்லை.

மாலைப் பொழுதில் ஒரு நாள், நான் கழனிகளின் வரப்பின் வழியாகத் திரும்பி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தேன். எனக்கு எதிரே, திடீரென்று, கோபக்குறியோடு, சில முரட்டையாட்கள் வந்து நின்றார்கள். என்னைத் தடுத்து, தங்கள் கை முஷ்டிகளைக் குலுக்கிக் காண்பித்து, "அடே, நீ உன் எஜமானன் வீட்டைவிட்டு உடனே ஓடாவிட்டால், இதோ ஒரு குழி தோண்டி, உன்னை இப்படியே குண்டு கட்டாய்ப் புதைத்து விடுவோம், தெரியுமா? ஜாக்கிரதை!" என்று சீறிவிட்டு, மேல் நடந்தார்கள். என் எஜமானன், பாய்க்காட்டு (Boycott) அல்லது சமூகப் பிரஷ்டை செய்யப்பட்ட குடியானவன் ஒருவன் என்று, எனக்குப் பிறகு தெரிய வந்தது.

நாங்கள் ஆங்கிலேய காருண்ய அரசாட்சியின் கீழ் இருந்த பொழுது, எத்தனையோ சிறந்த தொழில்கள் கற்றுக்கொண்டோம். விஸ்கி (Whisky) என்னும் சாராயம் வடிக்கிறது, அவைகளில் ஒன்று. எங்கள் தேசத்தார் ஸ்வராஜ்ய விரதம் பூண்டு உழைத்த பொழுது, அநேக கெடுதல்களோடு, இந்தக் கொடிய மதுபான வியாபாரத்தையும் அடியோடு தொலைக்கவேண்டு மென்று, கங்கணம் கட்டிக் கொண்டார்கள். என்னுடைய எஜமானர், இந்த விஸ்கி வியாபாரம் செய்யுங் கூட்டத்தைச் சேர்ந்தவர்.

நான், அந்தக் கால தூதர்களின் கொடூர பயமுறுத்தல்களைக் கேட்டு நடுநடுங்கி, என்ன வந்தாலும், உயிர் தப்பி ஓடுவதே மேல் என்று தீர்மானித்து, வீடு சென்றேன். என் எஜமானனிடம், "எனக்கு இனி உம்மிடம் வேலை செய்வது இஷ்ட மில்லை. என் சம்பளத்தைக் கொடுத்து அனுப்பும்" என்றேன். "ஆகா! அது அசாத்தியம். உன் ஒப்பந்த நாள் இன்னும் முடியவில்லை. இருந்துதான் தீரவேண்டும்" என்றார். அவர் தாயார், எங்கே தெரியாமல் ஓடி விடுகிறேனோ வென்று, என் மாற்றுச் சராய் சட்டை முதலிய துணிகளை எடுத்து ஒளித்து வைத்தாள். என்ன செய்வது! சம்பளமே போனாலும், உடைகளை எப்படி விடுவது. அன்றுமுதல், கிழவி எப்பொழுது கண்ணயர்வாள் என்று, சமயம் பார்த்திருந்தேன். துணிகளை அப்பப்போது தேட லானேன்.

ஒருநாள் திடீரென்று கிழவி பரலோகப் பிராப்தி யானாள். என் எஜமானன், "நீ, இவளைப் பார்த்துக்கொள். நான் அடுத்த கிராமத்திற்குப் போய், என் சகோதரியை அழைத்து வருகிறேன்." என்று சொல்லிச் சென்றார். அக்கம் பக்கம், யாரு மில்லை. வீடுகளு மில்லை. வெட்டவெளி. வீட்டிலோ கிழவி. விழித்த விழி விழித்தால்போல், சவமாய்க் கிடக்கிறாள். அவள் பக்கத்தி லல்லவோ என்னைக் காவல் வைத்துப் போனார், என் எஜமானர்? எனக்கு அதை விட்டு நகரத் தைரிய மில்லை. கிழவி பார்த்துக்கொண்டே இருந்தாள்; அவள் கண்கள் என்னையே குறிப்பாய்ப் பார்த்தன. 'ஐயோ! இதுதானே சமயம், நாம் நம் துணிகளைத் தேடி எடுத்துக் கொண்டு ஓட்ட மெடுப்பதற்கு' என்று நினைத்தேன். ஆனால் கிழவியினுடைய பார்வை என்னையே தொடர்ந்தது. திடீரென்று எனக்குப் பொறுக்க முடியவில்லை ஆனந்தம். ஆகா! நான் வெகு நாளாய்த் தேடிய பொருள், என் மாற்றுச் சராய், கிழவி படுக்கையின் ஓரத்தில் வெளியே நீட்டிக்கொண்டு தெரிந்தது. 'ஆகா! அகப்பட்டு விட்டது கடைசியாக' என்று, என் பயத்தையும் மறந்து, அதை இழுத்தேன். என்ன கஷ்டம்! கிழவியும் கூடவே வந்தாள். எப்படியோ சமாளித்தேன்; என் சராயும் சட்டையும் கிடைத்தன. மூட்டை கட்டவேண்டுமே? கிழவியினுடைய துணி

ஒன்று தொங்கிற்று. ஒரு பக்கத்தில் 'கிழவி தான் இறந்துவிட்டாளே. அவளுக்கு ஏதுக்கு இது?' என்று நினைத்து, அதைக் கொண்டு, கிழவியைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே, என் உடைகளை ஒரு மூட்டை கட்டினேன். பிறகு எடுத்தேன், ஒரே ஓட்டம், முன் பின் பாராமல். திரும்பிப் பார்த்தால், மரித்தவருடைய பிசாசு, எனக்கு முன்னால் ஓடி வந்து என்னை மடக்கும் என்று, எங்கள் தாயார் சொல்வ துண்டு.

எவ்வளவு தூரம் ஓடினே னென்று எனக்கே தெரியாது. அந்திப் பொழுதாயிற்று. பனியால் நனைந்து பசியால் உலர்ந்து, எதிரே நின்ற வைக்கோல் போரின்மேல் ஏறிப்படுத்தது தான் தாமசம்; கண் அயர்ந்துவிட்டேன். சூரிய வெப்பம் தாக்க, கண்களை மெள்ளத் திறந்தேன். யாரோ கூப்பிட்ட சப்தம் கேட்டது. என் எதிரே, நான் அது வரையிலும் பாராத அவ்வளவு அழகு வாய்ந்த, ஒரு பெண் நின்றுகொண்டு, என்னை இறங்கி வரும்படி வேண்டினாள். "நீ யார், இங்கே என்ன செய்கிறாய்?" என்று கேட்டாள். "நான் வேலை தேடித் திரிகிறேன்' என்றேன். 'இவ்வளவு இளம் பிராயத்திலா வேலைக்குத் திண்டாடுகிறாய்?' என்றாள். பச்சாத்தாபத்துடன், "உன் வயதென்ன?" என்றாள். (கேவலம் நம்மைக் குழந்தை என்று, ஓர் அழகிய ஸ்திரீ மதித்தனளே என்று, எனக்கு உள்ளுக்குள்ளே கோபமும் வெட்கமும் மேலிட்டது). 'வருகிற டிசெம்பரில், பதினொன்று நிரம்பும்' என்று, இழுத்துத் தட்டித் தடுமாறிச் சொன்னேன். அப் பெண் மிகவும் துணிகரம் உள்ளவள்! என்னைத் திடீரென்று கட்டியணைத்து முத்தமிட்டாள்! பாதக மில்லை. அச் சிறுமிக்கு, சுமார், குறைந்தது இருபத்தேழு வயதிருக்கும்.

என்னை அவள் தகப்பனார் வீட்டிற்குக் கூட்டிச் சென்றாள். அந்த வீட்டில் மிகவும் சந்தோஷமாய் வேலை செய்து காலங்கழித்தேன். அங்குதான் என் படிப்பும் கொஞ்சம் விர்த்தியாயிற்று. என் சம்பளத்தைப் புஸ்தகங்களிலேயே செலவழித்தேன். புஸ்தகங்கள் என்றால், எனக்குக் கொஞ்சம் பைத்தியம். நான்கு வருஷங்கள், இவ்விதமாகச் சென்றன.

எங்கள் நாட்டினர், வருஷா வருஷம், ஸ்காத்லாந்து தேசத்து உருளைக்கிழங்குக் கழனிகளில் வேலை செய்வதற்காக, மந்தை மந்தையாய்ப் போவார்கள். அறுப்புக் காலங்களில் நல்ல கூலி கிடைக்கும். உழைப்பு என்னமோ, சாமான்ய மில்லை. நல்ல ஜீவனம் கிடைக்கு மென்று, நானும் இம்மாதிரியான ஒரு கூட்டத்தோடு சென்றேன். உருளைக் கிழங்குக் கழனிகளில், பெண்கள் முழங்காலிட்டு நகர்ந்து நகர்ந்து, புருஷர்கள் கெல்லிப்போடும் கிழங்குகளைப் பொறுக்கி, பக்கத்திலிருக்கும் பெருங்கூடைகளில்

போடுவார்கள். ஆகா ! அப் பெண்களின் பிழைப்பை என்னென்று சொல்லுவேன் ! உருளைக் கிழங்குகளில் வெட்டிய வேர்க்கட்டைகள் நீட்டி நீட்டி குத்திக்கொண்டு நிற்கும்; நிலமோ, சேறுஞ் சகதியுமாய்க் குழம்பிக்கொண் டிருக்கும். இதோடு, தாங்க முடியாத குளிர். சில வேலைகளில், இந்தப் பெண்கள் வயல்களில் மேல்ஜோடு இல்லாமல் முழங்கால்களைத் தேய்த்து நகர்ந்து போகும் பொழுது, அவர்கள் கால்கள், மண்ணிலும், கிழங்கின் கட்டை வேர்களிலும் உராய்ந்து, சதை பெயர்ந்து, இரத்தம் ஓடும். வயிற்றின் கொடுமை, இக் கஷ்டங்களைச் சர்வ சாதாரணமாய் நினைப்பார்கள்! என் பங்கு வேலை மிகவும் சுலபம்; கூடைகளில் நிரம்பிய கிழங்குகளை வண்டிகளில் கொண்டுபோய்க் கொட்டுவதுதான். இதற்கு, வாரத்திற்கு 10 ஷில்லிங் கூலி கிடைக்கும்.

இக் கழனிகளில் வேலை செய்பவர்கள் இரவில் தங்குமிடம், மிகவும் கேடானது; கழனிக்கு அடுத்தாற்போல், சில மாட்டுக் கொட்டகைகளும் பன்றிக்கிடாப்புக்களும், சில கூரையில்லாமலும், சில குட்டிச் சுவராயும், பாழடைந்து நிற்கும். அவைகளில், பகலில், மாடும் பன்றியும் வாசம்; இரவில், அவைகளைத் துரத்தி விட்டு, மனிதர்கள் தூங்குவார்கள். இத் தொழுவங்களில், ஆண் பெண் அடங்கலும் தங்கும். பெண்கள் புருஷர்கள் இருக்குமிடங்களுக்கூடே குறுக்குத் தடுப்புக்கிடையாது. ஆகா! கேவலம், அந்த துக்ககரமான, மிருகத்தனமான, நரக வாழ்வை, அதன் கொடுமையை, ஆபாசத்தை, என்னென்று சொல்லுவேன் !

எனக்கு இங்கே கொடுத்த கூலியில் மிச்சம் பிடித்து, சுமார் எட்டுப் பவுனுவது சேர்க்கலாம் என்று இருந்தேன். ஏனென்றால், அதைக்கொண்டு, நான் அதுவரையும் எழுதியவற்றை ஒரு புஸ்தகமாக வெளியிடலா மென்ற அவா விருந்தது. ஒருநாள் நாங்களிருக்குமிடத்திற்கு, ஒரு சூதாடி வந்தான். அவன் ஆடுவதையும் பணம் சம்பாதிப்பதையும் பார்த்தேன். 'ஓகோ, இதுதான் நல்ல வழி, எளிதில் பணம் சம்பாதிப்பதற்கு. என்ன புத்தியீனம், இத்தனை நாள் வீணே கஷ்டப்பட்டோம்!' என்றெண்ணி, நானும் அவனுடன் விளையாடினேன். முதல் இரண்டு இராத்திரி நான் முழுவதும் ஜெயித்தேன். மூன்றும் நாளோ, நான் ஜெயித்ததெல்லாம் தோற்றதல்லாமல், நான் அதுவரையும் செட்டுப்பிடித்து வாயைக்கட்டி வயிற்றைக்கட்டிச் சேர்த்துவைத்த ஆஸ்தி முழுவதையும், பறிகொடுத்தேன். ஓட்டாண்டியாகி, ஜேப்பில் இரண்டு பென்சுடன், அக்கழனியைவிட்டு வெளியேறினேன். பசி, பிராணன் போயிற்று. வழியில் ஒரு பலசரக்குக் கடை இருந்தது. அங்கே போய், "ஐயா ஒரு 'மனிதனுக்கு' ஏதாவது வேலை அகப்படுமா ?" என்று கேட்டேன்.

"மனிதனு? எங்கே அவன்?" என்று அதட்டினான்.

"நான் தான்" என்றேன்.

"சீ, சீ, நீயாவது மனிதனுவது! பெரியோரைப்பற்றிப் பேசும்பொழுது மரியாதையாய்ப் பேசக் கற்றுக்கொள்" என்று சீறினான். அவனிடம் ஒரு பென்சுக்கு பிஸ்கோத்து வாங்கி, மேல் நடந்தேன். பிஸ்கோத்தை முறித்து வாயிற் போட்டால், அது இருந்த பசியையும் கிளப்பிவிட்டது. யாரோ ஒரு மகான் சொல்லியிருக்கிறார்: நல்ல சாப்பாட்டின் இலட்சணம் என்னவென்றால், சாப்பிட்டுங்கூட, கொஞ்சம் பசியிருக்கவேண்டும் என்று. உண்டவுடன், இன்னும் அதிகமாய்ப் பசியைக் கிளப்புகிற உணவு, அவருக்குத் தெரியாது போலும்!

நான் 'கிளாஸ்கோ' (Glasgow) பட்டணத்தை நாடிச் சென்றேன். அந்தச் சாலையில் எனக்கு முன்னால், ஆறடிக்குமேல் உயரமுள்ள ஒரு கப்பல் மாலுமி, 'பீயர்' (Beer) மதுபானத்தின் மகிமைகளைப் புகழ்ந்து ஒரு பாட்டாய்ப் பாடிக்கொண்டு, வெகு குதூகலத்துடன் நகைத்து, நடந்துகொண்டிருந்தான். என்னைப் பார்த்ததும், "தம்பி! எங்கே போகிறாய்?" என்றான். நான், 'ஏதாவது வேலை அகப்படுமா என்று பார்க்கப் போகிறேன்" என்றேன்.

"இதோ, இதைத் தின்னு," என்று, ஒரு துண்டு சுல்தானு ரொட்டி (Sultana Cake) யைக் கொடுத்தான். நான் அதை ஆவலுடன் வாங்கித் தின்று, மிகவும் ருசியாயிருப்பதைக் கண்டு, 'இதை எங்கே வாங்கினாய்?' என்றேன். "எனக்குக் கிடைத்தது, தம்பி" என்றான், பெருமையுடன். "எப்படி?" என்றேன். "ஓ! அதை லவட்டினேன்," என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டே நடந்தோம் கொஞ்ச தூரம். எங்கள் எதிராக, ஒருவன், கௌரவ புருஷன்போல, முறைப்பான கழுத்துப்பட்டையும், (Collar) பளிச்சென்ற கழுத்துடையும், அணிந்துகொண்டு வந்தான். என்னுடைய புதுமாலுமிச் சிநேகிதன் மோல்ஸ்கின்ரூ போய், "தயவு செய்து கொஞ்சம் புகையிலை தருவீரா?" என்று கேட்டான். அவன் தாமசமன்றியில், "அதற்கென்ன, தடையில்லாமல், இதோ!" என்று, தன் டப்பியை எடுத்துக் கொடுத்தான். மோல்ஸ்கின்ரூ, தன் புகையிலைக் குழாயை எடுத்து, புகையிலையை அதில் அமுக்கினான். அம்மாதிரி, அவ்வளவு புகையிலை பிடித்த குழாயை, நான் அது வரையிலும் கண்டதில்லை. "வந்ததெல்லாம் கொள்ளும் மகாராஜன் கப்பலென்று" போடப் போடச் சென்று கொண்டேயிருந்தது. வெறும் டப்பியைத் திருப்பிக்கொடுத்து வந்தனமளித்துவிட்டு, மேல் நடந்தோம். பிறகு தெரிய வந்தது, குழாயின் மர்மம்: அதன் அடியில்

ஒரு பெரிய ஓட்டை; போட்ட புகையிலை யெல்லாம், மோர்ல்ஸ்கின் ஜேவினுடைய ஆழ்ந்த குழிக்கையில் பத்திரமாய் விழுந்தது.

(இன்னும் வரும்.)

இந்திய தேசியக் கல்வி

ஸ்ரீயுத லர்லா லஜபதிராய்

இந்தியாவில் தேசியக்கல்வி—இராசாங்கத்தின் வேலை.

லகம் எங்கும் அறிவாளர் ஒப்பியுள்ள தேசியக் கல்வியின் அடிப்படைக் கொள்கைகளை அடக்கிக் கொண்டிருப்பதால், பிஷ்ஷரின் சொற்பொழிவுகளிலிருந்து இவ்வளவு எடுத்துக் காட்டவேண்டியதாயிற்று. வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு விதமான போதனை முறைகள் நடைபெறலாம்; ஆனால், அவற்றின் அஸ்திபார மெல்லாம் ஒன்றுதான். இங்கிலாந்துக்கும் நமக்குமுள்ள சம்பந்தத்தினல், மற்ற நாட்டு மேதாவிகளின் அபிப்பிராயங்களைக் காட்டிலும் பிஷ்ஷரின் அபிப்பிராயங்கள், இந்தியர்களாகிய நமக்கு முக்கியமானவை. பிரிட்டிஷ் சக்ராதிபத்தியத்துக்கெல்லாம் கல்விப்பயிற்சித் தலைவரான இவர், தன் மரியாதையோடு முன்னேற்றம் அடைய விரும்பும் ஜனசமூகங்களுக் கெல்லாம் பொதுவான கோட்பாடுகள், தத்துவங்கள், இன்னவை யென்று எடுத்தோதியிருக்கிறார். இந்தியாவில் வாழும் இந்தியர்களாகும் நமக்கோ, கல்விப்பயிற்சி விஷயத்தில் இன்னும் தற்சுதந்திரம் ஏற்படவில்லை. கல்விப்பயிற்சி விஷயத்தில், இந்திய மாகாணங்களின் மந்திரிகளுக்கு அதிகாரம் ஏற்பட்ட பின்புகூட, முடிவாய்த் தீர்மானிக்கும் அதிகாரம் பிரிட்டிஷ் மந்திரிகள் கையில்தா னிருக்கும். ஆகையால், இந்தியாவில் கல்வி யபிவிருத்தியானது, இன்னும் நெடுங் காலத்துக்கு, இந்தியாவின் வரவு செலவுகளைக் கையாண்டு, அரசியல் முறையை வரையறுத்து நடாத்தும் பிரிட்டிஷ் மேலதிகாரிகளின் நல்லெண்ணத்தையும் தயவையுமே பொறுத்ததாகும்.

எனவே, கல்விப் பயிற்சி முறைகளையும் ஏற்பாடுகளையும் ஆலோசித்து முடிவு செய்வதில், மற்றவர் அபிப்பிராயங்களை விட, கல்வியிலாகா பிரிட்டிஷ் மந்திரி (பிஷ்ஷர்)யின் அபிப்பிராயமே நாம் பெருமதித்தற் குரியது. இங்கிலாந்தில் அநுஷ்டிக்கப்படும் முறைகளே நமக்குச் சிறந்தனவாகும்; அவைகளை அடிப்படையாகவும் முன் மாதிரியாகவும் கொண்டு, இந்தியாவில் கல்வியை அபிவிருத்தி செய்ய முயலுவதே உத்தமமாகு மென்பது, என் துணிவு. இதனால், பிரிட்டிஷார் கல்வி போதனை முறைகளைக் குருட்டுத்தனமாய்ப் பின்பற்ற வேண்டும் என்றாவது; அமெரிக்க ஐக்கிய மகாணங்கள், ஜப்பான் முதலிய தேசங்களில் கல்விப் பயிற்சி விஷயமாகச் செய்யப்படும் முயற்சிகளைக் கவனித்து, நாம் பலனடையக் கூடாது என்றாவது, நான் கூற வில்லை. இவ்விஷயத்தில், மொத்தத்தில், பிரிட்டிஷாரிட மிருந்து அதிகம் கற்றுக் கொள்ளலாம் என்றுதான் கூறுகிறேன்.

இவ்வாறு பிரித்தனை முன் மாதிரியாகக் கொண்டு நாம் நடப்பதில், இதுவரை கல்விப் பயிற்சி விஷயத்தில் பிரிட்டிஷார் செய்து பார்த்த பரீக்ஷைகளை எல்லாம் நாமும் செய்து பார்த்து, அப்படிப்பட்ட முயற்சிகளில் பணத்தையும் காலத்தையும் அவர்கள் பாழாக்கினது போல நாமும் பாழாக்கவேண்டு மென்பது கட்டாய மில்லை. ஒரு நாட்டாரின் அபிவிருத்தி, இதுவரை முன்னேற்றம் அடைந்துள்ள பிறநாட்டாரின் அடிச்சுவட்டின் வழியே தான் செல்லவேண்டும் என்பது, முழு மூடத்தனமும் அறியாமையும் ஆகும். (முன்னே நடப்பவன் ஓரிடத்தில் இடறி விழுந்தால், அது பின்னால் வருவோனுக்குத் தீ வர்த்தி பிடித்தது போல் ஆகும் அன்றோ?) முன்னவர் பரீக்ஷார்த்தமாய்ச் செய்து பார்த்த தவறுகளி னின்றும் விலகி, பின்னவர் ஏன் எச்சரிக்கையாய் ஒழுகக் கூடாது? அப்படிச் செய்யாவிடில், சரித்திரத்தினால் என்ன பயன்? ஆதலால், சுதந்திரத்தைச் சென்றடையும் மார்க்கத்தில் பிறர் விழுந்த படுகுழிகளில் நாமும் விழாதபடி, நம்மைக் காத்துக் கொள்வதே தகுதி.

இதனால், 'நமக்கு நெடுநாளைக்கு முன்னரே பிரயாணம் புறப்பட்ட நாட்டார் இப்பொழுது அடைந்துள்ள பெருநிலையை நாமும் அடைய, அவர்கள் படிப்படியாய் விருத்தி யடைந்தவாறு நாம் செய்ய வேண்டாம்; நாம் மட்டும், ஒரே பாய்ச்சலில் அந்நிலையை அடைந்து விடலாம்' என்பதும் இல்லை. நமக்கு வேண்டுவது என்னவெனில்: உலகம் ஒப்பிய பொதுவான கோட்பாடுகளை அறிந்து கொண்டு, நமக்கு விசேஷமான அவசியங்களையும் கவனித்து, நாம் இப்பொழுதுள்ள நிலைமைக்கும், நமக்குள்ள உபகரணங்கள் சாதனங்களுக்கும் ஏற்றவாறு, எல்லா வகையிலும் நமக்கு அநுகூலமா

கும் ஒரு கல்விப் பயிற்சி முறையைப் புத்திசாலித்தனமாய் அமைத்துக் கொள்வதே யாம்.

தேசியக்கல்விப் பயிற்சி சம்பந்தமாக, நாகரிக உலகமெங்கும் ஒப்பிய பொதுக் கோட்பாடுகள், பின்வருவன என்கலாம்.

(1) ஒரு நாட்டார் மிகுந்த லாபத்தை உறுதியாய் அடைவதற்கும், தமக்கு நஷ்டம் வாராமல் உறுதியாய்க் காத்து விலக்குவதற்கும், தேசியக் கல்வியே ஏற்ற கருவியா யிருப்பதால், நாட்டின் க்ஷேமத்துக்கு, சைநிய பலம் எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வளவு, தேசியக் கல்வியும் இன்றி யமையாததாகும்.

ஐரோப்பிய மகாயுத்தத்தின் படிப்பினைகளில், போர் வீரனுக்குக் கல்விப் பயிற்சி அவசியம் என்பது துலங்கியதே, என் அபிப்பிராயத்தில் அதிமுக்கியமான படிப்பினை. யுத்தத்திலே, வீரமும் தைரியமும் என்றுமே முக்கியம்தான்; ஆனால், அவைகளையும்விட மேலாக, ஒரு நாட்டின்கதி, அந்நாட்டுப் படையாட்களின் புத்தியையும் வினைத்திறனையும் பொறுத்ததாகி விட்டது. இக் காலத்தில், பள்ளிக்கூடங்களில் நிகழும் (கல்விப்) போராட்டமே யுத்த முடிவுகளைத் தீர்மானிக்கின்றது. சைநியத்தின் பெருந்தொகை முக்கியமே; ஆனால், படைவீரரின் புத்தியும் சாதுரியமும் வினைத்திறனும் கட்டுப்பாடும் அதி முக்கியமான அம்சங்கள். இதுவன்றி, ஒரு நாட்டாரின் சாமர்த்தியம், அவர்கள் போர்வன்மை மட்டுமன்று; பொருளாதார விஷயங்களிலும், கைத்தொழில்கள் வாணிகம் முதலிய விஷயங்களிலும், அவர்களுடைய திறமையைப் பொறுத்திருக்கின்றது.

பொன்னும் வெள்ளியும் இருந்தால் மட்டும், பொருளாதாரம் கைத்தொழில் வாணிப விஷயங்களில் திறமை வந்து விடாது; இக் காலத்திலே, போரில் வெற்றி பெறுவதற்கு இன்றியமையாத ஆயுதங்கள், வெடி குண்டுகள், கப்பல்கள், நீர்க்கீழ் நாவாய்கள், ஆகாய விமானங்கள், பீரங்கி தோட்டாக்கள், உணவுப் பொருள்கள், ஆசுபத்திரி அவசியங்கள், முதலிய பலவேறு சாதனங்களாக அந்தப் பொன்னையும் வெள்ளியையும் மாற்றிக் கையாளும் யுக்தியும் சாமர்த்தியமும் மூளைவலியும் இருந்தாலன்றிப் பயனில்லை. ஆகவே, வெளிப் பகையின் பயமின்றி நாட்டைக் காப்பதே இராசாங்கத்தின் முதற் கடமை என்றால், தற்காலத்தில் அவ்வாறு காப்பது, நாட்டு ஜனங்கள் எல்லாரும் கல்விப் பயிற்சி யுடையவரா யிருந்தால்தான் முடியும்.

கூலிக்கு வேலை செய்வோரும் எழுதப் படிக்கத் தெரியாதோருமான படையாட்கள் கூடிய சாசுவத சைநியத்தால் பலனில்லை என்பதையும், பிரிட்டிஷ் ஜனங்களால் மாத்திரம் இந்தியாவைக் காக்க முடியாது என்பதையும், நவ நாகரிக யுத்த முறைக்

குரிய ஆயுதங்கள் இதர சாதனங்கள் எல்லாவற்றிற்கும், இந்தியர்கள், பிரிட்டிஷார் கையைமட்டும் எதிர் பார்த்தல் கூடா தென்பதையும் ஐரோப்பிய யுத்தம் ருசுப்படுத்திவிட்டது. இதை முன்னுகவே எதிர் பார்த்து, பிரிட்டிஷ் துரைத்தனத்தார், பின்நேரப் போகும் சண்டைக்குச் சந்நத்தராக இந்தியரை வைத்திருந்தால், யுத்தம் வந்தபோது, தங்கள் பகைவரை வெகு சுலபமாய் விரைவாய் அவர்கள் நசுக்கியிருக்கலாம். ஆதலால், இந்தியாவின் எதிர் கால க்ஷேமத்துக்கு இந்தியர் எல்லோரும் தற்காலத்தில் மிகச் சிறந்த முறைப்படி கல்வி பயிலுவது இன்றியமையாததாகும்; பிரிட்டிஷ் சக்ராதிபத்தியத்தின் க்ஷேமத்தின் பொருட்டும்,இந்திய ஜனங்களை இயன்றமட்டும் பயிற்றித் தேற்றுதல் அவசியமாகும். இதுகாறும் செய்தது போல, இந்தியர்கள் பயன்படாது வீணே கழியும்படி விட்டிருத்தல், கொடுங் குற்றமாகும்.

ஜனங்கள் எல்லோரையும் சாதாரணமாய்ப் படிப்பித்தல் துரைத்தனத்தின் கடமை; துரைத்தன வருமானத்தில், அதுவே முதற் செலவாக விருக்கவேண்டும். அப்படிக்கின்றி, செல்வர் தேசாபிமானிகள் தர்மிஷ்டர்களின் உதவியினுல் தேசியக் கல்வியைப் பரப்ப முயலுதல், பயனற்றதாகும்; அம் முயற்சி கை கூடாது. அன்றியும், அப்படி முயலுவது, பொதுஜன தேசியக் கல்விப் பயிற்சியானது துரைத்தனத்தாரின் கடமை என்பதை, நாம் மறந்துவிடச் செய்யும்.

தேசிய முறையில் கல்வி போதனையைக் கட்டாயமாக்கி, நாட்டாருக்காகத் துரைத்தனத்தார் தங்கள் செலவில், தங்கள் பராமரிப்பில், அதை நடத்தவேண்டும். நாட்டார் வேறு, துரைத்தனத்தார் வேறு என்று இந்தியாவில் இருப்பதால், கொஞ்ச காலத்துக்கேனும், இந்தக் கடமை, நாட்டாரின் சொந்த முயற்சிகளைச் சார்ந்திருத்தல் அவசியமாகும். என் அபிப்பிராயத்தில் இதற்கு மருந்து என்ன வெனில், நாம் எல்லோரும் ஏகோபித்துழைத்து, துரைத்தனத்தையே தேசிய வழியில் திருப்பி, இராசாங்கத்தாரை நாட்டாரின் காரியஸ்தர்கள் ஆக்கி விடுவது தான். இந்த உழைப்போடு கூட, நாடெங்கும் தேசியக் கல்வியைப் பரப்பி, நமது நாட்டின் வளமூலங்களை வளர்த்து விருத்தி செய்யும்படி, துரைத்தனத்தாரைத் தூண்டிக்கொண்டே யிருக்கவேண்டும். தேசியக்கல்வி, தேசத்தாராலேயே அளிக்கப்படவேண்டும்; துரைத்தனத்தார், நாட்டாரின் உண்மைப் பிரதிநிதிகளா யிருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர்கள் அக் கல்வியை அளிக்கும்படி செய்யவேண்டும்; நாட்டார் இதை உணர்ந்தறிய வேண்டும்.

(2) ஆரம்பக் கல்வியை மாத்திரம் ஏற்பாடு செய்வதுதான் துரைத்தனத்தார் கடமை என்னும் பழைய எண்ணமும், இப்பொ

முதி போய் விட்டது. ஆரம்பக் கல்வியோடு துரைத்தனக் கடமை முடிந்துவிட வில்லை; பொருளாதாரம் கைத்தொழில் வாணிகம் முதலிய துறைகளில் நாடு செழித்தோங் கும்படி ஜனங்களை அந்தந்தத் துறைகளில் பயிற்றுவித்தலும், நாட்டை முன்னேற்ற வழிகளில் மேல்நடாத்தும் புத்திக் கூர்மையும் வினைத்திறனுமுள்ள ஜன நாயகர்கள் ஏற்படும்படி உயர்தரக் கல்விப்பயிற்சியைப் புகட்டுதலும், துரைத்தனத்தார் கடமைகளே என்று, உலகம் எங்கும் ஒப்புக் கொள்ளப்படுகிறது.

(3) கல்விப் பயிற்சி என்றால், எழுதி வாசித்துக் கணக்குப் பார்க்கவும், கொஞ்சம் ஏட்டுப் படிப்பும், சொல்லிக்கொடுப்பது மாத்திர மல்ல. குழந்தைப் பருவ முதல், வேண்டுமாயின் உணவும் கொடுத்துப் போஷித்து வளர்த்து, வாலிபர்கள் திடகாத்திர சுக சரீர முள்ளவர்களாகும்படி செய்வதும் அதில் அடங்கி, துரைத்தனத்தாரின் கடமைகளே யாகும்.

(4) சுருங்கச் சொல்லின், குழந்தையைப் பேணி வளர்த்துக் கல்வி பயிற்றி அறிவும் விவேகமும் சாமர்த்தியமு முள்ள மனிதனாகும்படித் துணைநின் றுதவுவது, துரைத்தனத்தின் கடமை. அந்தக் கடமையைத் துரைத்தனத்தார் நிறைவேற்றும்படி செய்ய வேண்டும். இனி மேல் இந்தக் கடமை, பெற்றோரின் இஷ்டத்தையும் சக்தியையும் பொறுத்த தாகாது.

மனிதரின் சித்த விருத்தி பிரவர்த்திகளை வளர்த்து விருத்தி செய்வதைக் காட்டினும், அடக்கி வேலி கோலுவதே துரைத்தனங்களின் சுபாவமானதால், ஒரு நாட்டாரின் கல்விப் பயிற்சியைத் துரைத்தனத்தாரின் பொறுப்பாக்குவது நல்லதன்று என்பது, சில பேரறிவாளர்களின் கொள்கை. நாட்டை ஆளுபவர் ஒரு தனி வர்க்கத்தாராய் இருக்குமட்டும், தம் சொற்படி நடக்கும் வினைவல்லோரை அல்லாமல், சுயேச்சையாய் நடக்கும் மனத்திடமுள்ளவர்களைக் கலாசாலைகளில் பயிற்றிவிட, அவர்கள் விரும்பாரென்பது மெய்தான். ஆனால், நம்முடைய நோக்கமோ பொது ஜன நாயகமாகும்; பிரிட்டிஷ் சக்கராதிபத்தியத்தாரும், நாளா வட்டத்திலே பொறுப்பான குடியரசை இந்தியாவிலே ஸ்தாபிக்க ஒத்துக்கொண்டிருக்கின்றனர்; ஆதலால், அப்படிப்பட்ட குடியரசு ஏற்படு மட்டும், துரைத்தனத்தாருடைய கல்வி போதனை முறைகளை நாம் விழிப்புடன் கவனித்துக்கொண் டிருக்க வேண்டுமாயினும், நாம் சுவாதீனம் பெற்றபின், கல்வி போதனை முறைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் நம் கைக்கு வந்து விடும்; அப்பொழுது இப்படிப்பட்ட பயத்துக்கு இடமிராது.

கல்விப் பயிற்சி விஷயத்தில் துரைத்தனத்தாரே முக்கிய பொறுப்பாளிகள், அவர்களா லியன்ற மட்டும் அவர்களே கல்வி

புகட்ட வேண்டும் என்பது மெய்யாயினும், ஜனங்களிற் சிலரின் பிரத்தியேக முயற்சியே யின்றி, தேசியக் கல்வி சித்தி பெறுது. துரைத்தனத்தார் செய்யாது விட்ட குறைகளையும், அவர்கள் முயற்சியில் அரை குறையாய் உள்ளவற்றையும், ஜனங்களின் சொந்த முயற்சிகளைக் கொண்டே நிரப்பிக்கொள்ள வேண்டும். ஆனல், அதற்கிது துணையாக ஏற்பட வேண்டுமே யன்றி, அதற்கு மாற்ருக இது, என்ற பேச்சே கூடாது; அன்றியும், நாட்டிலே, சராசரி யென்று சொல்லத் தக்க அறிவு நிலைமைக்குப் பிற்பட்டுக் காணும் வகுப்பினர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கும், இப்படிப்பட்ட சொந்த முயற்சி ஏற்றதாகும். * * *

இந்தியா முழுமைக்கும் பொதுவான தேசியக் கல்விப் பயிற்சி முறையை இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு சங்கத்தாரே தீர்மானிக்க வேண்டும்; அந்தந்த மாகாணங்களுக்கும் சிற்றெல்லைகளுக்கும் விசேஷமான அம்சங்களை, ஆங்காங்குள்ளவர் தீர்மானித்துக் கொள்ளலாம். மேற் கூறிய இந்தியப் பொதுச் சங்கத்தின் அங்கத்தினர் பெரும்பாலார் இந்தியர்களாகவே இருக்கவேண்டும்; அவர்கள் தீர்மானிக்கும்முறைகளைத் துரைத் தனத்தார் கையேற்று, தங்களா லியன்றமட்டும் நிறைவேற்ற வேண்டும். இந்தியா முழுதுக்கும் பொதுவானஒருகல்விப்பயிற்சிமுறையை ஏற்படுத்தி, தங்களாலியன்றமட்டும் இந்தியா துரைத்தனத்தார் அதற்குப் பொருளுதவவேண்டும்; போதாக்குறைக்கு, மாகாணத் துரைத்தனங்களும், ஸ்தல ஸ்தாபனங்களும் பொருளுதவவேண்டும். நமது அவசியங்களில் முதலாவது, அதிகப் பள்ளிக்கூடங்களும் உபாத்தியாயர்களும். இரண்டாவது நல்ல பள்ளிக் கூடங்களும், தம் நிலைமையிற் திருப்தியுள்ள நல்ல உபாத்தியாயர்களும். மூன்றுவது, வியாபாரமுறைகளையும், அயல் நாட்டுப்பாஷைகளையும் போதிக்கும் தொழிற் கல்விச் சாலைகள். நான்காவது, உயர்தரத் தொழிற் கல்வியும், இயந்திரப் பயிற்சியும் புகட்டும் ஸ்தாபனங்கள். ஐந்தாவது, படிப்பைவிட்டு வேலைசெய்து பிழைப்பவர்கள் தங்கள் அறிவையும் திறமையையும் விருத்தி செய்துகொள்ளக் கூடிய பள்ளிக்கூடங்கள். ஆருவது, இன்னும் ஏராளமான ஹை ஸ்கூல்களும், யூனிவெர்ஸிடிகளும். இவை யெல்லாவற்றையும் உடனே ஏற்படுத்தி விட வேண்டுமென்று நான் சொல்ல வில்லை; ஆனல், இன்னும் கொஞ்ச காலத்துக்கேனும், கல்விப் பயிற்சியில் நாம் செலவிடக் கூடிய பணத்தின் பெரும் பகுதியை, தேசிய (ஆரம்பக்) கல்வியை நாடெங்கும் பரப்புவதில் செலவழிக்க வேண்டும்.

இந்த விஷயத்தில் நம்முடைய முக்கியமாக,

(1) அக்ஷர ஞானத்தைப் பரப்புவதிலும்,

(2) எழுதப் படிக்கத் தெரிந்தவரும், வேலைத் திறமை யுள்ளவரும், மனிதராகப் பிறந்து ஜன சமூகத்தின் அங்கத்தினராகத் தாம் இருப்பதினால் தமக்குள்ள சுதந்தரங்களை உணர்ந்தவர்களுமான தொழிலாளிகளைப் பயிற்றி விடுவதிலும்,

(3) போதன முறைகளிற் பயின்ற உபாத்தியாயர்களின் தொகையை மிகப் பெருக்கி, கூடியமட்டில் அவர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுப்பதிலுமே, தேசிய முயற்சியில் முதற் பத்து வருஷங்களைச் செலவழிக்க வேண்டுமென்று, என் புத்திக்குத் தோன்றுகிறது. தேசத்தின் சுரங்கங்களையும் நில வளங்களையும் கைத் தொழில்களையும் வளர்த்துப் பெருக்குவதற்கு வேண்டிய அளவு, ஏற்ற பல இடங்களில்,உயர்தரக் கைத் தொழிற் கலாசாலைகளையும், பயிர்த்தொழிற் கலாசாலைகளையும் ஏற்படுத்தி நடத்துவது, துரைத்தனத்தின் கடமையாகும்; அவ் வத்துறைகளில் மேதையரான இந்தியர்களைக் கொண்டே, இக் கல்விச் சாலைகளை நடத்துவது துரைத்தனத்தின் நோக்கமா யிருக்கவேண்டும்; அப்படிச் செய்வது உடனே முடியாவிட்டால், இந்தியர்கள் அயல் நாடுகளுக்குச் சென்றும், வேறு விதமாயும்,தக்க பயிற்சி அடைந்த பின், துரைத்தனத்தார் அவர்களையே தருவித்துக் கொள்ள வேண்டும்.

பிஷ்ஷர் கூறியபடி, தேசியக் கல்வியானது வாணிபத்தைப் போல முதலுக்குத் தக்க லாபத்தைத் தருவது மாத்திர மன்றி, பலவித நஷ்டங்கள் வாராமல் காத்து விலக்கும் காப்பு முறையாகவும் இருத்தலால், வரி திறைகளினால் நமக்குக் கிடைக்கும் பணத்தோடு நின்று விடாமல், கடன்பட்டுக் கூடக் கல்விப் பயிற்சியை வளர்த்துப் பரப்புவது தவறாகாது. இருப்புப் பாதைகளுக்காகவும், நாட்டின் காப்பு முறைக்காகவும், 'இம்பீரியல்' யுத்த நிதிக்காகவும், கடன் வாங்குவது க்ரமமாகுமானால், தேசியக் கல்வியின் பொருட்டும், நாட்டுக்கு முக்கியமான கைத்தொழில்களை வளர்ப்பதின் பொருட்டும், ஏன் அதே மாதிரி கடன் வாங்கக்கூடாது? இந்தச் சந்தர்ப்பத்தில், பிஷ்ஷர், தன் சொற் பொழிவொன்றிற் கூறும் ஒரு நியாயத்தை எடுத்துக் காட்டுவது பொருந்தும்: "ஒரு தொழில் அல்லது வியாபார முயற்சியில் செலவிட்ட பணத்தின் முழுப்பயனையும் அடையும் பொருட்டு, இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் அதே முயற்சியிற் செலவிடுவது சில சமயங்களில் அவசியமாகு மன்றோ? இது, சொந்தக் காரியத்துக்குப் போலவே, ஒரு நாட்டின் காரியத்துக்கும் பொருந்தும்."

இருப்புப் பாதைகளிலும், நீர்ப் பாசனக் கால்வாய்களிலும், எல்லைப்புறக் காப்பு முறைகளிலும், இதுவரை இந்தியாவில் செலவிட்டுள்ள பணத்தின் முழுப் பயனையும் பெறும் பொருட்டு, ஜனங்

களின் அறிவையும், புதிய பண்டங்களை ஆக்கிக் குவிக்கும் சக்தியையும், தம்மைக் காக்கவும் பிறரைத் தாக்கவும் வேண்டிய சக்தியையும், கைத்தொழில் வியாபாரத் துறைகளில் பிறநாட்டாருக்குச் சமமாயிருந்து போட்டி போடும் சக்தியையும், பேணி வளர்ப்பது அவசியமாகும். நாட்டாரின் அறிவையும் வேலைத் திறமையையும் உடல் வலியையும், சம்பாத்திய சக்தியையும் அதிகப்படுத்துவது, இருப்புப் பாதைகளையும், கால்வாய்களையும், கோட்டை கொத்தளங்களையும் பெருக்குவதைக் காட்டிலும் அதி முக்கியம் என்னலாம். இதைப்பற்றி நினைக்கும் பொழுது, இந்தியாவில் சுவரின்றிச் சித்திர மெழுதத் தொடங்கி விட்டதாக, எனக்குச் சில சமயங்களில் தோன்றுகிறது. 'சில வேலைகளைத் துரைத்தனத்தார் தான் செய்யக்கூடும்; துரைத்தனத்தார் செய்தே தீரவேண்டும்; அந்தக் கடமையை நிறைவேற்றப் பணம் போதாவிட்டால், கடன் பட்டேனும் செய்யவேண்டும். போதுமான உபாத்தியாயர்களைப் பழக்கி, ஜனங்கள் எல்லோருக்கும் ஆரம்பக் கல்வியைப் புகட்டி, தொழிற் கல்விப் பயிற்சியையும் நாடெங்கும் பரப்புதல், இப்படிப்பட்ட வேலைகளாம். இந்த விஷயத்தில் தாமதம் செய்தால் நாட்டுக்கே அபாயம் நேரிடும் என்பதுதான், என்னுடைய வாதம்.

இந்தக் கடமைகளைத் துரைத்தனம் சரிவரச் செலுத்த, ஜனங்களின் சொந்தச் செலவில் ஸ்தாபிக்கப்பட்ட கலாசாலைகள், கல்விக் கழகங்கள் எல்லாம், தாம் தாமே பரீக்ஷைகள் நடத்திப் பட்டங்கள் கொடுக்கும் சர்வ கலாசாலைகளாக வளரவேண்டும். புராதன பாஷைகள், சரித்திரம், தர்க்கம், மனோ தத்துவ சாஸ்திரம், வேதாந்தம், ஜன சமூக சாஸ்திரம், இவைகளைப் பற்றிய ஆராய்ச்சிகளை, இந்தக் கலாசாலைகளே நடத்தவேண்டும். துரைத்தனச் செலவில் நடைபெறும் கல்லூரிகளும் சர்வ கலாசாலைகளும், முக்கியமாய் விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியிலும் ஆராய்ச்சியிலும் ஊன்றி உழைத்து, நாட்டின் செல்வப் பெருக்கையே நாடி முயல வேண்டும். இப்படிக் கூறுவதனால், முன்னே சொன்னவற்றுக்கும் ராஜாங்கத்துக்கும் சம்பந்தமில்லை என்பதில்லை. நாட்டிலு எந்த வகுப்பினருக்கும், எந்த நபருக்கும் திறமையை அ படுத்தும் பயிற்சி விஷயங்கள் எல்லாம், நாட்டுக்குப் பொது விஷயங்கள் தாம். ஆனால், நான் முன் கூறியபடி கல்வி பயிற் வேலையைப் பங்கிட்டு, துரைத்தன முயற்சியாலும் ஜனங்ச பிரத்தியேக முயற்சியாலும் தனித்தனியாக நிறைவேற் தான், நமது பொருளும் முயற்சியும் வீண் போகாது தக் கிடைக்கக்கூடிய வழி என்று தோன்றுகிறது.

(தொடரும்)

இவர்
கிருஷ்ண
அளவளாவி,
தைக் கோருவதுண்டு,

காலஞ்சென்ற

இந்தியப் பெருமக்கள் இருவர்

1. Dr. ஸர் ராமகிருஷ்ணபந்தார்க்கர் M.A., LL.D., PH.D., C. I. E., &c.

அறிவிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கிய ஆதி காலத்து ஹிந்துக்கள், அரிய பெரிய நூல்கள் பலவற்றை வடமொழியில் ஆக்கிக் குவித்தனர். கால வேற்றுமையினாலும், அயலார் ஆதிக்கத்தினாலும், அவற்றிற் பல இறந்தொழிந்தன; மிகுந்தவற்றையும் அவர் சந்ததியார் மறந்திழிந்தனர். ஆங்கிலரின் ஆட்சி வேரூன்றின பிறகு, ஐரோப்பிய மேதாவிகள் அந் நூல்களை வெளிக் கிளப்பி, உலகத்துக்கும் இந்தியர்க்கும் அவற்றை அறிமுகஞ் செய்வித்து, ஸம்ஸ்கிருத பண்டித சிகாமணிகளா யிலங்கலாயினர். "நம்பியான் வார்த்ததே தீர்த்தம்" என்பதுபோல, ஐரோப்பியர்சொல்லும் அர்த்தங்களும் வியாக்கியானங்களுமே சிறந்து வழங்கலாயின. பிறகு இந்தியரும் தமது முன்னோர் விட்டுப்போன பழைய நூல்களைப் பயில்வாராயினர். அவ்வாறு பயின்று தேர்ந்து, தன் வட மொழிப் புலமையாலும் ஆராய்ச்சித் திறமையாலும், ஐரோப்பிய மேதையர் உட்பட, உலகத்தார் எல்லோராலும் சிறந்த பண்டிதர் என ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தியர்களில், ஸர். ராமகிருஷ்ண பந்தார்க்கரே முதல்வராவர். இக் காலத்திலே பள்ளிக்கூடங்களில் வடமொழி பயிலும் வித்தியார்த்திகள் எல்லோரும், இவ ரியற்றி யுள்ள முதலாவது இரண்டாவது வாசக புஸ்தகங்களை அறிவர்.

ஆனால் இவர், கேவலம், ஸம்ஸ்கிருதம் மாத்திரம் படித்தவரல்லர். அந்த மொழியிலும் ஆங்கிலத்திலும் சேர்ந்து M.A. பரீக்ஷையில் தேறிப் பட்டம் பெற்றார். அப்பால் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் ஆசிரியராயிருந்து மிகப் பல மாணவர்களைப் பயிற்றியதுமன்றி, பம்பாய் யூனிவெர்ஸிற்றியின் பரிபாலனத்திலும் உழைத்து, வைஸ்சான்ஸலராகவும் விளங்கினார். துரைத்தனத்தாரும் மேல்நாட்டுக் கல்விக் கழகங்கள் சிலவும், இவரது புலமையையும் பேரறிவையும் மெய்ச்சி, இவருக்குக் கௌரவப்பட்டங்கள் அளித்தன.

பெண் கல்வி விஷயத்தில் இவருக்கிருந்த சிரத்தைக்கு அறிகுறியாக, இவர் பேரத்திகளில் அறுவர் இன்று பம்பாய் யூனிவெர்ஸிற்றியில் பி. ஏ. பட்டதாரிகளா யிலங்குவதைக் கூறுதல் பொருந்தும்; ஆசாரச் சீர்திருத்த விஷயத்திலோ, வைதவ்யம் அடைந்த தன் மகளை இவர் புனர் விவாசம் செய்து கொடுத்ததைக் கூறலாம். சிசு விவாகம் ஒருவித நரபலிதான் என்று இவர் கூறுவதுண்டாம். சாதிபேதம், தீண்டாமை விஷயங்களிலும், இவ்வாறே முற்போக்கான கொள்களை யுடையவர் இவர். "சத்தியமும் அன்பும் நல்லொழுக்கமுமே ஆசாரச் சீர்திருத்தங்களின் அஸ்திவாரமா யிருக்க வேண்டும். உன் மனச் சாக்ஷி எதை நியாயமாக நினைக்கிறதோ, அதைத் தைரியத்தோடு, பின் விளைவை மதியாமல், செய் " என்று ஒரு பிரசங்கத்தில் கூறினர்; அவ் வண்ணமே தன் வாழ்க்கையில் தீரமாய் நடந்து காட்டினர்.



Dr. ஸர். ராமகிருஷ்ண பந்தர்க்கர்.

பம்பாய் பிரார்த்தனை ஸமாஜத்தின் மூல புருஷர்களில் இவர் முக்கியமானவர். மகாதேவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோக்கலே முதலிய பெரியோர், இவருடன் அடிக்கடி அளவளாவி, தம் பிரவர்த்திகளில் இவரது அபிப்பிராயத்தைக் கோருவதுண்டு,

"மகரிஷி"ப் பட்டத்துக்கேற்ற இந்த மகான், 24—8—1925 அன்று, தன் 88-வது வயதில் தேக வியோகமானார். இவர் இயற்றியுள்ள நூல்களை யன்றி, பூனா நகரத்திலுள்ள "பங்சார்க்கர் இன்ஸ்டிட்யூட்" இவர் புலமைக்கும் ஆராய்ச்சித் திறமைக்கும் ஓர் அரும் பெரும் ஞாபகச் சின்னமாக இலங்குகின்றது நவ நாக ரிகத்தை யொட்டிய தீய வழக்கங்கள் எதுவுமே இவருக் கில்லை என்றும்; மரணகால பரியந்தம், தினந்தோறும் தவறாது, இவர் சரீரப் பயிற்சி செய்து வந்தனர் என்றும்; ஆழ்ந்த தெய்வ பக்தி யின் பலனாக, எதற்கும் நிலை கலங்காத நெஞ்சத்தினராய் இவர் வாழ்ந்து வந்தனர் என்றும்; இவைதாம், இவர் சீவிய காலத்தின் நீட்சிக்குக் காரணங்கள் என்றும், கூறுவர். இப் பெரியோரின் வாழ்க்கை, இந்திய இளைஞருக்கு மிகச் சிறந்த முன் மாதிரியாகும்.

CXLVII



2. திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை,
C.I.E., I.S.O., M.A., B.L., LL.B., &c.

தமிழ் மக்களுக்கு இவரைப்பற்றி அதிகம் கூற வேண்டுவ தில்லை. மேல் நாட்டுக் கல்விப் பயிற்சி பெற்றுச் சிறப் பெய்திய தமிழ்ப் பெருமக்களில், இவர், மிகச் சிறந்த ஒருவராவர். வட மொழி, தென் மொழிகளில் மாத்திர மன்றி, கிரீக், லத்தீன், ப்ரெஞ்சு, ஜெர்மன், இங்கிலிஷ் முதலிய மேல் நாட்டு மொழிகளி லும் புலமை வாய்ந்தவர். இவரது கடமைப்பற்றும், தன்னடக்க

மும், ஒய்வொழிவின்றி உழைக்கும் குணமும், தற்காலத்திலே வியந்து பாராட்டுதற்குரியன. இவரும் முதற்கண் ஆசிரியரா யிருந்து, பின்னர் இராசாங்கப் பெரும்பதவிகளி லுழைத்துச் சீரும் சிறப்பு மெய்தி, முடிவில் சென்னைச் சட்ட சபைத்தலைவராய் விளங் கினர். சோதிட கணிதத்தில் மிகத் தேர்ந்தவர். பெரிய குடும்பி. ஆழ்ந்த சமயப்பற் றுள்ளவர். தென்னாட்டுக் கோர் திலகம்போல் திகழ்ந்த இவர், இவ்வளவு சீக்கிரம் இறந்து விடுவ ரென்று, எவரும் எதிர்பார்த்திரார். நம் நாட்டின் அதிர்ஷ்டக் குறைவே, பலதுறைக ளில் பேரறிவாளராயிருந்த இன்னார், திடீரென இவ்வாறு உயிர் நீங்கியது. துரைத்தனத் தொல்லை தொலைந்து, இலக்கிய ஆராய்ச் சித் துறைகளில் சில்லாண்டுகளேனும் தன் மனமும் தன் நாடும் உகப்ப, இவர் இனிது கழிப்பா ரென்று, பலர் எதிர்பார்த்திருந் தனர். தெய்வம் மற்றொன்று நினைத்தது!

பிரிட்டிஷாரின் பொறுப்பு

கீழே குறித்திருப்பது, இந்தியா சட்ட சபை (Legislative Assembly) யில் (8-9-1925) நடந்த வாக்குவாதத்தின் ஒரு துணுக்கு:—

ஸர் சார்ல்ஸ் இன்ஸ்— * * படித்த புத்திசாலிகளுக்கு மாத்திர மல்ல, பொது ஜனங்களின் எந்தப் பகுதிக்கும் மாத்திரமல்ல, இந்திய ஜனங்கள் எல்லாருக்கும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தாரே பொறுப் பாளிகள். இந்த உரிமையை அவர்கள் விட்டுக்கொடுக்க முடியாது.

கனம் ரங்காசாரியார்— அதை விட்டுக் கொடுக்கும்படி பாராளு மன்றத்தை நாங்கள் வேண்டிக் கொள்ளக் கூடாதா?

ஸர் சா. இன்ஸ்—கூடாது: ஏன் என்றால், நூறுக்கு மேலான வருஷங்களுக்குமுன், தற்செயலாக, பிரிட்டிஷ் துரைத்தனத்தார். இந்தியாவுக்குப் பொறுப்பாளிகளாயினர்.

ஒருவர்—ஆம், இந்தியாவைத் திருடிக்கொண்டார்கள்!

ஸர் சா. இன்ஸ்—இந்த நூறு வருஷங்களுக்கு மேலாக, இது வரை என்றுமே நீங்கள் அடையாத பெரும்பேற்றை, உங்களுக்கு (இந்தியர்களுக்கு)நாங்கள் (பிரிட்டிஷார்கள்) கொடுத்திருக்கிறோம்.

ஒருவர்—ஆம், ரத்தத்தை உறிஞ்சிச் சக்கையாக்கிவிட்டீர்கள்!

(சிரிப்பு).

ஸரஸ்வதி பூஜை

26—9—1925

நீர் அரும்பி நிலத்தரும்பி நெடுவிசும்பு நிலைஅரும்பி,
பார் அரும்பு பலஉயிரும் பசிதாகம் துயில்அரும்பி,
இனம் பெருகு விழைவரும்பி, எழுந்து வளர்ந் திறப்பதனால்
சின பெரிய எனவின்றிச் சிவனெலாம் ஒன்றாயும்;
தறுகண் உரு எழில் வலியில் தனின் மிக்க பல இருந்தும்,
பொறிகளுக்குட் பொலிவிழிபோல், பூதலத்தில் எதன்
பொலிவால்,
ஒரு மனிசன் உயர்ந்தோங்கி உயிரனைத்தும் ஒடுக்கிடும்? அத்
திருமதியின் உருவாய தெய்வமயப் பெருஞ் சோதி!
வாளாலும் தீயாலும் மானிடரை வதைத் தொடுக்கிக்
கோளாய புகழ்குவிக்கும் கொற்றவரின் சீர்த்தியெலாம்,
கதிரவன்முன் உடுகணம்போற் கழிய, அழியாது வளர்
மதுரகவி மறுவில்புகழ் வரம் அருளும் வாகீசாய்!
மிக்க அழகுடையவரும், மிளிர் முருக்க மலரின், முகத்(து)
எக்கலை இலா திழிவை எய்துவர்? அக் கலைமகளே!
வேதாவின் நாவில் ஒளிர் கோதாய்! நின்விரிசோதிப்
பாதார விந்தமலர் பணிந்தொரு சொல் பகருவல் கேள்:

இற்றை நாள் உன்னை ஏத்திடுவார் பலர்
பிற்றை நாள் தொட்டுன் மாமியைப் பேணி,
ஒற்றை ஆண்டுனை மறந்து ஒழுகுவரால்:
மற்றை எவரையும் மதியா மதியினை
எற்றும் அருள்வாய் எனக்கு.

—அமுதகவி

பலதுறைப் பொறுக்குமணிகள்

பத்திரிகை ஆராய்ச்சி

(366-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

I. மதவிஷயக் குறிப்புக்கள்

10. ஆங்கிலப் பெண் பிராமணத்தியானது.—பண்டிதர் ச்யாம சங்கரர் என்னும் பிராமண வாலிபர், 1913-ம் ஆண்டில், லண்டன் நகரத்திலே, பாரிஸ்டர் பரீக்ஷைக்கு வாசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் ஒரு விருந்துக் கச்சேரியில் அவர் பாடினார். அந்தக் கச்சேரிக்கு வந்திருந்த வந்தா கான்ஸ்டன்ஸ் மாரல் என்ற ஆங்கிலப் பெண், பியானோ வாசிப்பதில் கைதேர்ந்தவள், பண்டிதர் மீது மோகங் கொண்டாள். இருவரும் சங்கீதப் பிரியர்களானதால், ஐரோப்பிய யுத்தம் நடந்த காலத்தில், போர் முனையில் காயங்கள் அடைந்து சிகிச்சையிலிருந்த இந்தியப் படையாட்களை, அவர்கள் அடிக்கடி பாடியும் பியானோ வாசித்தும் உற்சாகப் படுத்தி, பேருதவி செய்து வந்தனர். 1915-ம் ஆண்டில் பாரிஸ்டராகி, இந்தியாவுக்குத் திரும்பி வந்து, பண்டிட் சங்கரர், ஜலோவார் சம்ஸ்தானத்தில் மந்திரியானார். அப்பொழுது யுத்தத்தினால் கடற்பிரயாணம் அபாயகரமாயிருந்ததையும் பொருட்படுத்தாமல், மிஸ் மாரலும், ஹிராண்டிற்குள் ஜலோவார் வந்து சேர்ந்தாள். அப்பால் மூன்று வருஷகாலம் சங்கடப்பட்டு முயன்று, முடிவில், அவள், வைதிக முறைப்படி ஹிந்து மதத்தைச் சேர்ந்து, ஜலோவார் அரசரே தகப்பனார் ஸ்தானத்திலிருந்து தாரை வார்த்துக் கொடுக்க, பண்டிட் சங்கரரை அக்னி சாக்ஷியாய் மணம் புரிந்து கொண்டாள். தம்பதிகள் இருவரும் வெகு சந்தோஷமாய் வாழ்ந்து வந்தது மன்றி, தன் ஒழுக்க சீலத்தாலும் அன்பினாலும், அவள், தன் கணவன் குடும்பத்தார் பந்துக்கள் எல்லாரும் தன்னையும் குடும்பத்தில் ஒருத்தியாக ஏற்றுக்கொண்டு நேசிக்கும்படி செய்துவிட்டாள். இந்த மாதத்தில் நோயுற்று அவள் கல்கத்தா ஆசுபத்திரியில் இறந்தபோது, வேதவித்துக்களான பிராமணரே அவள் பிரேதத்தைத் தூக்கிச் சென்று, வைதிக முறையில் அபரகிரியைகளை நடத்தித் தகனஞ் செய்தனராம். "Amor vincit omnia" "அன்பு அனைத்தையும் வெல்லும்" என்னும் முதுரைக்கு, ஏற்ற சான்றாகும் இது.

II. கல்வி விஷயக் குறிப்புக்கள்

10. "பெண் கல்வி"—கல்வி போதனை முறையும், படிப்பிக்கும் பாடங்களும், ஆண்களுக்கும் பெண்களுக்கும் வித்தியாசமாக விருக்கவேண்டும் என்பர் பலர். சென்னையில் கல்வியிலாகா மந்திரியாகும் ஸர் A. P. பாத்ரோ இப்படி நினைப்பவர். இதை யொட்டிச் சில மாறுதல்கள் ஏற்படுத்தப் போவதாகவும் கூறியிருக்கிறார். இதைப் பற்றித் திரவிசாரித்து முடிவு செய்தற்கென்றே, இங்கிலாந்தி லுள்ள கல்விச் சங்கத்தார், ஒரு கமிற்றி ஏற்படுத்தி

னர். கல்வி போதனை முறைகளிற் கைவல்ல மேதாவியர் பல பண்டிதர்களும் பண்டிதைகளும் கூடிய அச் சங்கத்தார், இன்னும் பல பேரறிவாளர்களின் அபிப்பிராயங்களையும் அறிந்து கொண்டனர். இவ்வாறு சிலவாண்டுகளாக ஆராய்ச்சி செய்ததின் பலனை, தமது அறிக்கைப் பத்திரத்தில் வெளியிட்டிருக்கின்றனர்* அந்த ரிப்போர்ட்டு ஏறத்தாழ 200 பக்கங்கள் கொண்டது. அவர்கள் முடிவில் நிர்மானித்த சித்தாந்தத்தைக் கீழே சுருக்கிக் கூறியிருக்கிறோம்:—

"இருபாலாருக்கும் கல்விபயிற்றும் முறைகளைச் சீர்திருத்தம் செய்வதற்கு ஆதாரமாக, ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள வித்தியாசங்கள் இன்னவென்று தெளிவாய்த்தீர்மானமாய்ச் சொல்லக்கூடியது ஒன்றுமில்லை என்பதுதான், எங்கள் விசாரணையின் பலனாகத் தெரிய வந்தது. பிள்ளைகளுக்கும் பெண்களுக்குமுள்ள மனோபாவ வேற்றுமைகளைப் பற்றிப் பொதுப்படச் சொல்லும் மழமழப்புப் பேச்சுகள் பலவற்றை நாங்கள் கேட்க நேர்ந்தது; உண்மை யென்று நாங்கள் முழு நிச்சயத்துடன் ஒப்புக்கொள்ளக் கூடியது அவற்றுள் ஒன்றுமே யில்லை யென்று சொல்லலாம். சாதாரணமாய் ஒரு பையனுக்கும் ஒரு பெண்ணுக்குமுள்ள வித்தியாசத்தை விட அதிகமான வித்தியாசத்தை, ஒரு பையனுக்கும் மற்றொரு பையனுக்குமிடைக் காணலாமென்றும்; அதே மாதிரி, இரு பெண்கள், பையன்களுக்கும் தமக்குமுள்ள வித்தியாசத்துக்கு மேலாய், தமக்குள்ளேயே வேற்றுமைப் பட்டுக் காண்பதுண்டு என்றும், பலர் தம் சாக்ஷியங்களில் வற்புறுத்திக் கூறினர். தவிரவும், ஏதோ ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டு, அதில் ஆண் குழந்தைகள் பெண் குழந்தைகளைக் காட்டிலும் சமர்த்தர் என்று ஒருவர் சாக்ஷியம் கூறியபின், அதே விஷயத்தைப்பற்றி மற்றொருவர் நேர் விரோதமாய்ப் பெண்களை உயர்த்திச் சாக்ஷியம் சொல்வதையும், நாங்கள் அடிக்கடி கேட்க நேர்ந்தது. ஆண் மக்களும் பெண் மக்களும் இவ்வுலகில் தோன்றிப் பல நூற்றாண்டுகளாயின; ஆனால் இன்னும் ஆண் சுபாவத்தைப் பெண்ணும், பெண் சுபாவத்தை ஆணும் நன்கறிந்த பாடில்லை; தத்தம் பாலாரின் இயல்பே ஒருவருக்கும் தெரியாதென்று சொல்லலாம்; இருபாலாரின் தாரதம்மியங்களையும் பாரபக்ஷமின்றித் தேர்ந்தறியக்கூடிய மூன்றாம் பாலார் இவ்வுலகத்தில் இல்லை. மனோ பாவ சாஸ்திரப் பயிற்சி முற்றிப் பெருகியபின், இவ் விஷயத்தைப்பற்றி ஒருவேளை, ருசுவான உருப்பட்ட சித்தாந்தங்கள் சிலவற்றை ஸ்தாபிக்கலாம். அதுவரை, இருபாலாரும் ஒரே இயல்பினர் என்று கொள்ளாது, வேற்றுமைப் பட்டவர் என்றும் விஸ்தரிக்காது, அவர்களுக்குள்ள ஒற்றுமை வேற்றுமைகள் தாமே வெளிவந்து புலப்படும்படி, நாம் ஒரு புறம் ஒதுங்கி விடுவதே உத்தமம். எல்லாக் குழந்தைகளும் பயிலக் கூடிய விஷயங்கள் பலவாயும், அவற்றுள் சிலவற்றை அவரவர் தம் இஷ்டப்படி தெரிந்தெடுத்துக் கொள்வதென்றும், அவ்விஷயத்தில் குழந்தைகளுக்குப் புத்திமதி சொல்ல வேண்டிய சுதந்திரம் உபாத்தியாயர்களுக்கு உண்டென்றும், ஏற்பாடு செய்வதே நலமென்று, எங்களுக்குத் தோன்றுகிறது. இந்த சந்தர்ப்பத்தில், பெண்களுக் கொரு விதம், பிள்ளைகளுக் கொருவிதமா

* Report of the Consultative Committee on Differentiation of the Curriculum for Boys and Girls respectively in Secondary schools, appointed by the Board of Education, England, published by H. M. Stationery Office—1923.

கப் பாடமுறையைக் கட்டாயமாக நிர்ணயிப்பது அனர்த்தமாய்த்தான் முடியும். இருபாலாரிலும் ஒவ்வொரு குழந்தையும் தன் உபாத்தியாயரின் மேற்பார்வையின்கீழ்த் தனக்கு இஷ்டமான விஷயங்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டு, தன் சுய ஞானத்தை விருத்தி செய்துகொள்ள இடமிருக்கும்படி, ஆண், பெண் குழந்தைகள் எல்லாருக்கும் கட்டாயமாய்க் கற்றுக்கொடுக்கும் பாட விஷயங்களைக் கூடியவரையில் குறைக்க வேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை".

—ரா.

V. சில்லறைக் கலம்பகம்

36. உலகத்திலே மிகப் பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடி —ஐரோப்பாவில், பிரான்ஸ் தேசத்திலே, 4500 அடி உயரமுள்ள ஸாலேவ் என்னும் மலையின் உச்சியில், நக்ஷத்திர கணிதசாலை ஒன்று ஏற்பாடாகிறது. குன்றின் உயரம் அதிக மில்லை ஆயினும், நாலுபக்கமும் வேறு தடங்கல்களின்றி, வெட்ட வெளியான பிரதேசத்தோடு, வானசாஸ்திர ஆராய்ச்சிக்கு அநுகூலமானபடி ஸாலேவ் தனித்திருப்பதால், அதன் சிகரத்தில் கட்டப்படுகிறது. இந்த ஆப்ஸர்வேடரியில் 105 அங்குலம் (8¾ அடி) குறுக்களவுள்ளதும், உலகத்திலே மிகப் பெரிதுமான தூரதிருஷ்டிக் கண்ணாடி (டெலஸ்கோப்) செய்து வைக்கப்படும். 5–6 அடி குறுக்களவுள்ள வேறு பல டெலஸ்கோப்புக்களும் இருக்கும். நக்ஷத்திரங்களைக் கவனித்தற்கு வேண்டிய வேறெல்லாச் சௌகரிய சாதனங்களும், கவனித்தறிந்ததை மற்ற இடங்களுக்கு உடனே தெரியப்படுத்த ஓர் 'ஒயர்லெஸ்' ஸ்டேஷனும், அங்கு ஸ்தாபிக்கப்படும். உத்தேசப்படி வேலை நிறைவேற, மொத்தம் 12½ லக்ஷம் பவுன் செலவாகும். இவ்வளவு பெரும் பொருளைச் செலவிட்டு ஒரு நக்ஷத்திர கணிதசாலையை ஏற்படுத்தி, அதைத் தான் குடிப்புகுந்து வாழ்ந்துவரும் பிரான்ஸ் தேசத்துக்கு இனமாக அளிப்பவர், கோடீசுவரப் பிரபுவான ஸ்ரீமான் அஸ்ஸான் டைடா என்னும் ஓர் ஹிந்துவே. அவர் மனைவியார், அமெரிக்காவிலே வின்வினுட்டியிலே கோடீசுரப் பிரபுவான வாலேஸ்–ஷில்லிட்டோ என்பவரின் மகள் மேரி என்பவள். டைடா எஞ்சினீர்; கலைஞர். தம்பதிகள் இருவரும் கட்டடத்தை நேரில் கண்காணித்து வருகின்றனர்.

37. விவாகச் சந்தை—மதுபானி என்னும் ஊருக்கடுத்த ஸௌராட் என்னும் இடத்திலே, ஆண்டுதோறும் ஒரு விவாகச் சந்தை ('ஸ்டுவேர்ட் மேளம்'–'Stuart Mela' என்று இதற்குப் பெயர்) நடக்கிறதாம். இவ்விடம், ஒரு சிவன் கோயிலின் பக்கத்துள்ள பெரிய தோட்டம். முந்நூறு வருஷங்களுக்குமுன் முதலில் ஏற்பட்ட இந்தச் சந்தை, ஆண்டுதோறும் நடந்து வருகிறது; இவ்வாண்டிலும் நடந்தது. ஆயிரக்கணக்கான பிராமணர்கள் அதில் வந்து கூடி, தங்கள் புத்திரர்கள் புத்திரிகளுக்கு விவாகங்களைப் பேசி முடித்து நடத்துகின்றனர். சந்தை, ஒரே நாளன்று, சில நாள்களாக நடக்கும்.

38. சென்னை மாகாணத்தின் கப்பல் வியாபாரம்—1913–14 ம் வருஷத்தில் (1913 ஏப்ரில் முதல் 1914 மார்ச்சு மாதம் முடிய) நம்ம மாகாணத்தின் கப்பல் வியாபாரம், மொத்தம் 58 கோடி ரூபா விலைமதிப்புள்ளதாயிருந்தது; 1924–25 ம் வருஷ வியாபாரத்தின் மதிப்போ, ஏறத்தாழ 95½ கோடி ரூபாவாகும். இவ்வாண்டில் காற்றும் மழையும் கப்பல்களின்

போக்கு வரவுக்குச் சௌகரியமாயிருந்தன. அந்நிய நாட்டு வியாபாரத்தில், இறக்குமதிகள்-20 கோடி ரூபா மதிப்பு; ஏற்றுமதிகள்—41 கோடி ரூபா மதிப்பு; உள்நாட்டு வியாபாரத்தில், இறக்குமதிகள்—20½ கோடி ரூபா மதிப்பு; ஏற்றுமதிகள்-11 கோடி ரூபா மதிப்பு; சொந்தச் சரக்குக்கள்—3 கோடி; —ஆக மொத்தம் 95½ கோடி ரூபா மதிப்பு.

39. **மின்சார சக்தியின் விநோதம்**—220 மைல் தொலையிலிருந்து, 'டெலபோன்' மூலமாகப் பிரதிபலிக்கப்பட்ட 'போட்டக்ராப்' படம் ஒன்று, இங்கிலாந்தில் ஒரு பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.

40. **அரசர்களின் "சம்பளம்"**—சர்க்கார் உத்தியோகஸ்தர்களைப் போலவே, மெய்யாகவோ பேருக்குமட்டுமோ நாடுகளை ஆண்டு வரும் முடி மன்னர்களும், தங்கள் தங்கள் சொந்தச் செலவுக் கென்று, நாட்டின் மொத்த வருமானத்திலிருந்து, ஆண்டுதோறும் "சம்பளம்" பெறுகின்றனர். அப்படிச் சில அதிபதிகள் பெறும் பணத்தொகைகள் டாலர் கணக்கில் (ஒரு டாலர்—சுமார் 3 ரூபா) கீழே காட்டப்பட்டிருக்கின்றன :—

ஸயாம் நாட்டு அரசர்—	டாலர் 3,500,000
இத்தலி ,, ,,	3,200,000
இங்கிலாந்து (5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தி)	2,900,000
ஜப்பான் சக்கரவர்த்தி	2,250,000
ஸ்பெயின் நாட்டு மன்னர்	1,775,000
டேன்மார்க் ,, ,,	300,000
நார்வே ,, ,,	244,000

எங்கள்
அயர்லாந்து வாழ்க்கை ஞாபகங்கள்

ஸ்ரீ. T. ஆதிநாராயண செட்டியார், பாரிஸ்டர், M.L.C., சேலம்
(அவர் மனைவியாரின் உதவிபெற்று எழுதியது)

(222-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

நான்காவது அதிகாரம்

மூன்றரை சகாப்தங்கள் இங்கிலாந்து அயர்லாந்தை ஆண்டதின் பலனாக, அயர்லாந்தின் நிலைமை எவ்வளவு தாழ்ந்த ஸ்திதியை அடைந்திருந்த தென்று யாரும் கேட்கக்கூடும். இவ் விடைக்குப் பதில் நாம் சொல்வதைக் காட்டிலும், எட்டாவது ஹென்றி (Henry VIII) அரசன் காலத்திய சர்க்கார் தஸ்தாவேஜி ஒன்றிலிருந்து, சில வார்த்தைகளைக் குறிப்பிடுவது உசிதமாகும்.

"அயர்லாந்தில் தற்சமயம் அறுபதுக்கு மேற்பட்ட சில்லறை தேசிய (Irish) ராஜ்யங்க ளிருந்து வருகின்றன. சிலர் ராஜாக்க ளென்றும், சிலர் சிற்றரசர்க ளென்றும், வேறு சிலர் பிரபுக்கள் என்றும், தங்களைத் தாங்களே அழைத்துக் கொள்ளுகிறார்கள். இவர்கள் ஒரே ஒரு சட்ட முறையைத்தான் மதிக்கிறார்கள் : அதாவது, தன்னைக் காட்டிலும் வலிவான சத்துருவைக் கண்டால், அவனுக்கு கீழ்ப்படிய வேண்டு மென்பதே. அவர்களறிந்த தர்ம நியாயம் ஒன்று : அதாவது புஜபலமும் பட்டாக்கத்தியுமே. அவர்கள் இஷ்டப்படி ஒருவருடன் ஒருவர் சண்டை போட்டுக் கொள்ளவோ, அல்லது சமாதானத்திற்கு வரவோ, சுயேச்சாதிகாரம் பெற்றவர்களாக நினைக்கிறார்கள். இவ்வரசர்களுக்குள் தகப்பனுக்குப் பிறகு பிள்ளை பட்டத்துக்கு வருகிறதென்ற நியாயம் ஏற்படாமல், எவனுக்கு வலிவிருக்கிறதோ அவன்தான் ராஜாவாகிறான். ஆங்கில அரசாங்கத்திற்கு உட்பட்ட பிரதேச மென்று ஒருவாறு சொல்லக்கூடிய பாகத்தில், முப்பது பிரபுக்கள் (Chieftains) இருக்கிறார்கள். இவர்களும் தேசிய சிற்றரசர்களைப் போலவே மேல் அதிகாரி ஒருவர் உண்டென்று நினைக்காமல்,சுயேச்சாதிகாரமாக ஒருவருடன் ஒருவர் சண்டை செய்வதும் சமாதானம் ஏற்படுத்துவதுமாக இருந்து வருகிறார்கள். கத்தி பலத்துக்குத்தான் இவர்கள் உள்பட்டவர்கள். மற்றொன்றையும் இவர்கள் மதிப்பதே யில்லை. ராஜ்யத்தி லுள்ள கச்சேரிகளுக்காவது அவைகளிட உத்திரவுகளுக்காவது, இந்த 90 சிறு ராஜ்யங்களுக்குள் பிரவேச மில்லை. நீதிபதிகளுடைய கட்டளைகளுக்கு, கோட்டை நகரங்களாகிய (Walled Towns) சில முக்கிய பட்டினங்களுக் குள்ளேதான் அமுல் நடந்து வருகிறது. தேசிய சிற்றரசர்களைப்போல் ஆங்கில பிரபுக்களும் ஏன் இங்கிலாந்து தேசத்தின் மன்னரை மதிக்க வில்லையென்றால், இவர்களுக்கு ஆபத்து நேரிடும் காலங்களில் இங்கிலாந்து தேசத்து மன்னர் இவர்களைக் காப்பாற்ற சக்தியில்லாமல் போனதேயாகும்... பாமர பிரஜைகளின் கஷ்டங்களைப் பற்றி விவரிப்பது சாத்தியமே யில்லை. கொள்ளைக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய பறி (Booty)ஒரு பக்கம், நியாயமாக மேல்அதிகாரிக்கு (chieftains) கொடுக்கவேண்டிய தொகை ஒரு பக்கம்; சைநியங்கள் தங்கள் கிராமங்கள் வழியாகச் சென்றால் அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய சாப்பாடு வகையரா செலவுகள் ஒரு பக்கம், இவ்வண்ணம் பலவாறாக ஜனங்கள் பீடிக்கப்பட்டு வருகிறார்கள்..."

அக்காலத்துக் கவிகளிலொருவராகிய பாண்டேரஸ் (Panderus) என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சில வார்த்தைகளிலிருந்து அயர்லாந்தின் யோசமான நிலைமை இவ்வாறென்று ஊகிக்க முடியும்.

அயர்லாந்தின் ஆஸ்தான தேவதையாகிய செயிண்ட் பிரிஜிட் (St. Bridgit) ஒரு கந்தர்வனைப் பார்த்துக் கேட்கிறான் : 'உலகில் எந்த தேசத்திலிருந்து அதிக ஜனங்கள் நரகத்துக்கு வருகிறார்கள்?' கந்தர்வன் —"அயர்லாந்தே. ஏனெனில் அந்த தேசத்தைப் போல் எந்த தேசத்திலும் இவ்வளவு அநியாயம், அநீதி, ஹிம்சை, அதர்மம், அமைதியின்மை, கொலை பாதகங்கள், களவு, நாசம், கொள்ளை, இவ்வளவு நீண்ட காலமாக நடந்தேறிவரவில்லை. ஆகையால்தான்

அயர்லாந்திலிருந்து (மானிட) ஆத்மாக்கள், பனிக்கட்டி மழையைப்போல், நரகத்தில் வந்து குவிகின்றன.

மேல்கண்ட இரண்டு அத்தாக்ஷிகளைக் காட்டிலும் அயர்லாந்தின் ஆட்சி முறையைப் பற்றி வேறு வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால், அயர்லாந்தின் ஆங்கில ராஜ்யமானது "அராஜ்ய" மென்றே உறுதியாய்ச் சொல்லக்கூடும். இந்த கேவலமான ஸ்திதியிலிருந்து மீட்டுவதற்கு ஆங்கில அரசர்கள் பிரயத்தினம் செய்தார்களேயானால், அதற்கு ஒரே ஒரு காரணமிருந்தது: அதாவது, இங்கிலாந்தின் சொந்த நிலைமையைப் பாதுகாக்க அயர்லாந்தை அடக்கி ஆளவேண்டியது அத்தியாவசியமாக ஏற்பட்டது. எட்டாவது ஹென்றி (Henry VIII) காலத்தில் அயர்லாந்தை வசப்படுத்தத் தீவிரமான பிரயத்தினங்கள் செய்யப்பட்ட போதிலும், இந்த அரசன் நாளில் மதக் கோட்பாடு பெருத்த மாறுதலை யடைந்தபடியால், பழைய கோட்பாட்டை (Catholic Faith) உயிரைக் காட்டிலும் சிரேஷ்டமாகப் பாவித்து வந்த அயர்லாந்து தேசத்தினரின் மனதைக் கவர்தல் சாத்திய மில்லாமல் போயிற்று. இந்த அரசன் காலத்தில், கத்தோலிக் ஆலயங்கள், மடங்கள், இதர மத ஸ்தாபனங்களின் ஏராளமான சொத்துக்களைப் பறி முதல் செய்வித்து, அந்தச் சொத்துக்களை அரசன் இஷ்டப்படி வினியோகம் செய்த காரணமாக, ஜனங்களின் மனக் கொதிப்பு பெருகிற்றென்றே சொல்ல இடமுண்டு.

கொஞ்ச காலத்திற்குப் பிறகு கத்தோலிக் மதத்தைத் தழுவின அரசியாகிய ராணி மேரி இங்கிலாந்தின் சிங்காதனம் ஏறிய போது, அயர்லாந்து தேசத்தின் கத்தோலிக் ஜனங்களுக்கு ஒரு புது நம்பிக்கையும் உத்சாகமும் உண்டான போதிலும், கூடிய சீக்கிரத்தில் ராணி யவர்களுக்குத் தன் கையில் அகப்பட்ட அதிகாரத்தை விட்டுக் கொடுக்கவோ, அல்லது, மதஸ்தாபனங்கள், தேவாலயங்களிலிருந்து பறிக்கப்பட்ட சொத்துக்களை அந்த ஸ்தாபனங்களுக்குத் திருப்பிக் கொடுக்கவோ, உத்தேச மில்லை யென்று, தெரிந்து கொண்டார்கள்.

இவ்வாறு அயர்லாந்தை நேசத்தால் சுவாதீனம் செய்துக் கொள்ள சக்தியற்றவர்களாயும், படை யெடுத்துச் சென்று ஜனங்களை ஹிம்சித்துக் கொள்ளை யடிப்பதினால் அயர்லாந்தை சுவாதீனம் செய்துகொள்ள முடியாதென்று தெரிந்து கொண்டும், ஆங்கிலேயர்கள் அத் தேசத்தை அடக்கி ஆளப் புது முறையைக் கைப் பிடித்தார்கள். அதாவது, தேசத்தின் பெரும்பாகங்களைப் பறி முதலாக்கி (Confiscate), இங்கிலாந்தின் ஆட்சிக்கு அனுகூலமாயிருந்தவர்களுக்கு சுவாதீனம் ஏற்படுத்துவதே. இம் முறைதான் அயர்லாந்தின் பிற்காலத்திய துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் முக்கிய

காரணமாக ஏற்பட்டது. இதை முதல் முதல் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தவள் மேரி அரசியே. இந்த முறையின் முதல் பலன் என்னவென்றால், சாஸ்வதமாக இருந்து வந்த சுதேசிகளுக்கும் (Native Irish) புதிதாகக் குடியேறிய (English Colonists) ஆங்கிலர்களுக்கும் கோரமான ஓயாத சண்டைகள் ஏற்பட்டதேயாகும். இந்தச் சண்டைகளில் நடந்த அநீதிகளுக்கும் குரூரச் செய்கைகளுக்கும் அளவேயில்லை. காட்டு மராண்டிகள் (savages) கூட இம்மாதிரி நடந்து கொண்டிருக்க மாட்டார்களென்றால், அதிகம் சொல்லத் தேவையில்லை. மத்திய கவர்ன்மெண்டு (Central Government) இதைப்பற்றிய கூக்குரலுக்குச் செவிகொடுத்தவர்களல்ல.

ஏன் இந்த விஷயத்தைப்பற்றி விஸ்தாரமாகச் சொல்லவேண்டுமென்றால், இங்கிலாந்தினிடத்தில் அயர்லாந்துக்கு ஏற்பட்ட மனக் கசப்பு விரோதம் முதலியவைகளுக்கு முக்கிய காரணம், நிலங்களைத் தேசத்து ஜனங்களிடமிருந்து பிடுங்கி அன்னியர்களுக்கு கொடுத்ததேயாகும். அயர்லாந்தில் முக்கியமாகக் கைத்தொழில்கள் விசேஷ விர்த்தியை யடைந்திருக்க வில்லை. சாகுபடியையே ஜனங்கள் ஜீவனோபாயத்திற்காக நம்பியிருந்தார்கள். நிலத்தைப் பறிமுதல் செய்த பிறகு, சொந்தப் பண்ணையாட்கள் கூலியாட்களாகி, புது யஜமானர்களுக்கு இஷ்டமில்லாவிடில் அனாதைகளாகத் துரத்திவிடக்கூடிய ஸ்திதிக்குப் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் வந்துவிட்டார்கள். கில்கென்னியின் கத்தோலிக் பிஷப், இவர்கள் கஷ்டத்தைப் பின் வருமாறு வர்ணித்திருக்கிறார்:

"நிரபராதிகளான பரம ஏழை ஜனங்கள், பெருத்தகுடும்பிகள், அனேக நூற்றாண்டுகளாக அனுபவித்து வந்த நிலங்களினின்று வெளியே துரத்தப் படுகிறார்கள். இவர்களுக்கு கிருஷியைத் தவிர வேறு தொழில் எதுவும் தெரியாது. இவர்களிட ஆஸ்தியெல்லாம் கால் நடைகளே. படிப்பே தெரியாதவர்கள். உலகில் இவர்களுக்கு ஒரு சகாயமுமில்லை. ஆனால், கடவுள் கிருபையால் சரீர ஆரோக்கியமும் தேக வலிவும், இன்ப துன்ப உணர்ச்சியும் உண்டு. இப்பேர்ப்பட்டவர்களை, தங்களிட பிதுரார்ஜித பூமியிலிருந்து அகாரணமாக விரட்டுவது (ராஜாங்கத்திற்கு) அபாயம் தாக்கூடியது. ஏனென்றால், வேறே எந்த விதத்திலும் நியாயம் கிடைக்காதென்று அறிந்து கொண்டார்களேயானால், இவர்கள் கை நகங்களாலும் கால்களாலும்கூட யுத்தம் செய்து, எதிரிகளைப் பற்களால் கடித்துக் கிழித்து விடவும் துணிந்து விடுவார்கள்"

அயர்லாந்தின் பின்காலத்துச் சரித்திரத்தை விளக்குவதற்காக, இந்த பிஷப்பின் வார்த்தைகளை இங்கு எடுத்துக்கூறும் அவசியம் ஏற்பட்டது.

கத்தோலிக் மதத்தைச் சேர்ந்த அரசியின் ஆள்கையில் அரசியல் முறை இம்மாதிரி இருந்தால், மேரி அரசிக்குப் பிறகு ஆங்கில சிங்காதனத்தை அலங்கரித்த பிராடஸ்டண்டு அரசி காலத்தில்

அயர்லாந்து தேசத்தினர் இன்னும் அதிக துன்பங்களுக்கு ஆளானர்களென்பது ஆச்சரியமா? இந்த அரசியின் ஆளுகையில்தான் இரண்டு குழப்பங்கள் நேர்ந்தன. சுதேசப் போர் வீரரான ஷேன் ஓ நீல் (Shane O'Neil) என்பவர், அதிக சாமர்த்தியத்துடன் ஆங்கில கவர்ன்மெண்டையும் படைகளையும் எதிர்த்துப் பிறகு மாண்டார். இந்த நீண்டகாலச் சண்டையின் பலனாக, தேசமானது பெரும்பாலும் நாசமடைந்தது. அக்காலத்துச் சரித்திரங்களை வாசித்தால், இப்போதுகூட வாசிப்பவர்களுக்கு நடுக்கமுண்டாகாமலிராது என்பது திண்ணம்...யுத்தத்தைக் காட்டிலும் பஞ்சம் ஜனங்களை நாசமாக்கிவிட்டது. அனேக பிராந்தியங்களில் ஒரு பசுவின் குரலையாவது, அல்லது நிலத்தை உழுபவன் சப்தத்தையாவது, கேட்பது அரிதாகிவிட்டது...காடுகளில் மரங்களுக்குப் பின்னிருந்தோ, அல்லது வேறு ஒளிந்திருக்கக்கூடிய இடங்களிலிருந்தோ, ஜனங்கள் கைகளால் ஊர்ந்துகொண்டு வருகிறார்கள்: காரணம் என்னவெனில், பசியினால் தேகம் மெலிந்து, உடலைத் தூக்கக் கால்களுக்கு சக்தியில்லை யென்பதே. நடை பிணங்களாகக் காணப்பட்டார்கள். அதிருஷ்ட வசத்தால் ஏதாவது சவங்களகப்பட்டால், அவைதான் அவர்களுக்கு மேலான விருந்துச் சாப்பாடு. சில சமயங்களில் புதைக்கப்பட்டிருந்த பிணங்களையும் தோண்டியெடுத்துப் புசித்தார்கள். எங்கேயாவது புல் அல்லது கீரை (water-cresses) அகப்பட்டால், அதைச் சாப்பிட ஒருவர் மேல் ஒருவர் விழுந்து போட்டி போட்டுச் சென்றார்கள். நிலவளம், குடிவளம், நீர்வளம் மிகுந்த ஒரு பிரதேசமானது இவ்வளவு சுவல்ப காலத்திற்குள் இந்த கதியை யடைந்துவிட்டது!

கவர்ன்மெண்டார் இதற்கு என்ன பரிகாரத்தைத் தேடினர்கள்? இன்னும் ஏராளமான பிரதேசங்களை சுதேசிகளிடமிருந்து கைப்பற்றி, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு சுவாதீனம் செய்தார்கள். ராலே (Raleigh) என்பவர் ஒருவருக்கே நாற்பத்திரண்டாயிரம் ஏக்கரா பூமி அளிக்கப்பட்டது. இப்படி அளிக்கப்பட்ட பூமிகளுக்கு, சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய தீர்வை, ஏகராவுக்கு வருஷத்திற்கு ஒரு அணுவுக்கும் கம்மியாகவே இருந்தது! இம்மாதிரி ஏராளமான நிலங்களை, இங்கிலாந்தில் வசித்து வந்து அயர்லாந்தை எட்டிக்கூடப் பார்க்காத சில பிரபுக்களுக்குக் கொடுத்து வந்ததைக்கவனித்தால், தேசத்தில் பஞ்சம் பெருகிவந்தது ஆச்சரியமா?

கஷ்டங்கள் இவ்வாறு சகிக்க முடியாமல் போனதின் பலனாக மறுபடியும் குழப்பம் (Rebellion) ஏற்பட்டது. ஹியூ ஓநீல் (Hugh O' Neil, the Earl of Tyrone) என்பவர் இந்தக் கலகத்துக்குத் தலைமை வஹித்து, ஆங்கில கவர்ன்மெண்டுக்குப் பெருத்த தோல்வியை விளைவித்தார். இந்த சம்பவத்திற்குப் பிறகு தேசிய

கட்சியானது சற்று வலுத்து, ஆங்கிலேயக் குடியேற்றக்காரர்களுக்கு அனேக கொடுமையான கோரமான சம்பவங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டன. கடைசியாக, ஹியூ ஒநீலுடன் சமாதானம் செய்யப்பட்டது. அதே சமயத்தில் எலிஜபெத் ராணியும் பரலோகப் பிராப்தியடைந்தார். இந்த அரசியின் ஆட்சியை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டியதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு; அதென்னவெனில், இவர் நாளில் தான் புகழ்பெற்ற சர்வ கலாசாலை (University of Dublin) டப்ளின் பிரதான நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. கோல்ட்ஸ்மித், பர்க்கு, ஷெரிடன், இப்பேர்ப்பட்ட கவி சிரேஷ்டர்களும், கல்விமான்களும் இந்த ஸ்தாபனத்திற்கு ஆபரணங்களாக உலகத்தில் விளங்கி வரலாயினர். இப்போதும், முதல் சொல்லிய இருவர்களின் உருவச்சிலைகள், இச் சர்வ கலாசாலையின் வாயிலின் இருபக்கங்களையும் அலங்கரிக்கின்றன. சமீப காலத்தில் பிரசுரமான ஒரு புஸ்தகத்திலிருந்து அடியில் கண்ட சில வார்த்தைகளை இங்கு எடுத்துக் காட்ட விரும்புகிறோம். அவை, எலிஜபெத் அரசியின் கடைசி (35-வது வருஷ) நாள்களில் அயர்லாந்தின் துக்ககரமான சரித்திரத்தின் (பின்) நிலைமையை நிர்ணயிப்பவையாக ஏற்படுகிறது. அக்காலத்து ஆட்சி முறைதான் அயர்லாந்து தேசத்தில் அதற்குப் பிந்தி ஏற்பட்ட துன்பங்களுக்கெல்லாம் காரணமாக யிருந்தது. இங்கிலாந்து ஜனங்கள் இவ்வரசியின் காலத்தை "ராமராஜ்யமாக"க் கொண்டாடுகிறார்கள். ஆகையால் ஒரு தேசத்திற்கு ராமராஜ்யமென்பது மற்றொரு தேசத்திற்கு "ராவண ராஜ்யமாக" ஏற்படக்கூடும் என்பது, இதிலிருந்து தெளிவாக ஏற்படும்.

அடுத்த அரசிலும் நிலப் பறிமுதல்கள் நடந்தேறின. அயர்லாந்தில் புராதனகாலம் முதல், அமுலிலிருந்து வந்த கிராம சமுதாய நிலஉரிமை (Ganelkind) யும் இன்னும் சில புராதன உரிமைகளும் சட்டத்திற்கு ஒவ்வாதவை யென (ஆங்கில) நீதி ஸ்தலங்களால் ஏற்பட்டது.

"சட்ட முறைப்படி கவர்ன்மெண்டு" என்னும் வார்த்தைகளே ஹாசியத்திற்கு இடமாயிற்று. உதாரணமாக ஜூரிகளைக் கொண்டு குற்றத்தை விசாரித்தல் என்பது உலகத்தில் சரியான வழியென்று பாவிக்கப்பட்டு வந்த போதிலும், சர்க்கார் இஷ்டப்படி தீர்ப்புச் சொல்லாத ஜூரிக் கூட்டத்தாருக்கு (ஒவ்வொருவருக்கும்) நானூறு பவுன் அபராதம் விதித்தும், மற்றும் ஒரு சந்தர்ப்பத்தில் சர்க்காருக்கு இஷ்டமில்லாத தீர்ப்பைச் சொல்லிய ஜூரி மெம்பர்களுடைய நாக்குகளில் சூடு போட்டுத் துவாரங்கள் செய்தார்களென்றால், ஜனங்களுக்கு, நியாய வரம்புக்கு உட்பட்டு ஆளும் முறை

யில் நம்பிக்கையில்லாமல் போவது, ஒரு ஆச்சரியமல்ல. அயர்லாந்தின் சுவாதீனமும் செல்வாக்கும் அனேகமாக முற்றிலும் மாண்டது.

இங்கிலாந்தில் முதலாவது சார்ல்ஸ் (Charles I) பட்டத்திற்கு வந்தவுடன், அவருக்கு அக்காலத்திலிருந்த பணமுடையை உத்தேசித்து, அனேக பொய் ஆசைகளை ஜனங்களுக்குக் காட்டி, ஜனங்களை ஏமாற்றி வேண்டிய பணம் சம்பாதித்தார். பணம் சம்பாதித்த முறையைக் காட்டிலும் வினியோகித்த முறை இன்னும் விசேஷம். அந்தப் பணத்தைக் கொண்டு புதிதாக பட்டாளங்களைச் சேகரித்து, ஆங்கிலேயர்களையும் ஸ்கோத்லாந்து தேசத்தினையும் துன்பப்படுத்த முயன்றார்! இவர் ஆட்சியை அயர்லாந்து தேசம் ஞாபகம் வைத்திருக்க மற்றொரு காரணமுமுண்டு. அதாவது, அயர்லாந்தில் அதுகாறும் செழிப்பாய் நடந்து வந்த கம்பள (Woollen Trade) வியாபாரத்தை, தன் சொந்த தேசமாகிய ஆங்கில நாட்டின் லாபத்திற்காக நசுக்கிவிட்டதே யாம்.

இவர் நாளில் (1641) மறுபடியும் ஒரு பெருத்த குழப்பக் கலகம் ஏற்பட்டது. இதின் பலனை இரு தேசங்களுக்கும் தீராத் விரோதமும் மதச் சண்டைகளும் நேரிட்டன. இந்தக் கலகத்துக்குப் பின் எட்டு வருஷ காலம் வரையில், அயர்லாந்தில் ஏற்பட்டிருந்த அராஜ நிலைமையை வர்ணிப்பது சாத்திய மில்லை.

இந்த ஸ்திதியில், கிராம்வெல் (Oliver Cromwell) அயர்லாந்தின்மேல் படை யெடுத்துச் சென்றார். இவர் செயல்களைக் குறித்து மெக்காலே முதலிய ஆங்கில சரித்திர கர்த்தாக்கள் புகழ்ந்தும், அயர்லாந்தின் தேசியசரித்திரக்காரர்கள் அதிகமாகக் கண்டித்தும், எழுதி யிருக்கிறார்கள். சுருக்கமாக எழுதப்படும் இந்த வியாசத்தில், நாம் இவைகளை விஸ்தாரமாக எடுத்துரைக்க இடமில்லை. போர் புரியக்கூடிய கத்தோலிக் மதத்தைச் சார்ந்தவர்களை ஆயிரக்கணக்கான அன்னிய நாடுகளுக்குக் குடியேறும்படி கிராம்வெல் செய்தா ரென்பதையும், பறி முதல் புதிதாகச் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஏகரா நிலங்களைத் தன்னுடன் போர் செய்த சகாக்களுக்கும், இந்த நிலங்களை சுவல்ப விலைக்கு வாங்கிச் சமயம் பார்த்துப் பெருத்த விலைகளுக்கு விற்று வியாபாரமாக நடத்தி வந்தவர்களுக்கும் கொடுத்தார் என்பதையும், இது மாத்திரமல்லாமல்; அயர்லாந்தில் பல பாகங்களில் வசித்து வந்த அனேக பிரபுக்களை நிர்ப்பந்தமாக (அயர்லாந்தின்) மேல் பாகத்திற்கு ஷாணன் நதிக்கு அப்பால்—போய்க் குடி யேறும்படி ஹிம்சித்தார் என்பதையும், மறுக்க முடியாது. கார்டின ரென்னும் (Gardiner) சரித்திர கர்த்தா, பின் வருமாறு இதைப்பற்றி எழுதி யிருக்கிறார். "தற்சமயம் அயர்லாந்தில் ஏற்படுத்திய திட்டத்திற்கு மானிட சரித்திரத்தில் வேறு உதாரணங்கள் எடுத்து உரைக்க முடி-

யாது. ஒரு நாட்டில், நாலு மாகாணங்களிருந்தால், மூன்று மாகாணங்களி லிருந்த ஜனங்களை யெல்லாம் மற்ற ஒரு மாகாணத்தின் எல்லைக்குள் வசிக்க வேணுமாய் நிர்ப்பந்திப்பதும், மூன்று மாகாணங்களை அயல் நாட்டு ஜனங்களைக்கொண்டு நிரப்புவது என்பதும், நியாயமாகாது. 1-6-1654 தேதிக்குள்ளாக எல்லா ஐரிஷ்காரர்களும் "ஷானன்" நதிக்கு அப்புறம் போய் விட வேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் 'மேற்கு இந்தியா தீவுகளி"லுள்ள (West Indies) புகையிலைத் தோட்டங்களுக்கு நிர்ப்பந்தக் கூலியாட்களாக அனுப்பப்பட்டார்கள். தேவ பக்தியைப் பாராட்டி வந்த இந்தக் கிராம்வெல் போர் வீரனின் இன்னொரு செய்கையையும் சரித்திரம் எளிதில் மறக்காது. இவர் படைகளில் சேர்ந்தவர்களுக்கெல்லாம் அரிவாள்கள் வாங்கிக் கொடுத்து, எங்கெங்கே நிலத்தில் மஹசூலிருந்ததோ அதை யல்லாம் (அறுத்து) நாசமாக்கி, எதிரிகளைப் புல் பூண்டுடன் அழிக்கப் பின் வாங்கவில்லை யென்பதே.

இம் மஹானின் கொரேச் செயல்களுக்குத் தப்பிப் பிழைத்துக் காடுகளிலும் குகைகளிலும் மறைந்திருந்தவர்களை, ஓநாய்களைப் போல் நாசம் செய்யவும் வழி காட்டினர். ஒரு கிரந்தகர்த்தா சுருக்கமாக எழுதியுள்ளபடி :—கிராம் வெல்லின் வெற்றியானது ஒரு தாழ்ந்த நாகரிகத்தின ஸ்தானத்தில் உயர்ந்த ஒரு நாகரிகத்தை ஸ்தாபித்ததாகச் சொல்ல இடமில்லை. ராணுவ பலத்தில் தாழ்ந்த ஒரு கூட்டத்தினரை அநாகரிக முறைகளைக் கையாடி ஜயித்ததாகத் தான் சொல்ல முடியும்."

இரண்டாவது ஜேம்ஸ் (James II) காலத்தில் கத்தோலிக் மதஸ்தினர்களுக்குக் கொஞ்சம் நல்ல கால மென்று சொல்லலாமாகிலும், அதி சீக்கிரத்தில் அவர்கள் அதிரிஷ்டம் மாறுதலை அடைந்துவிட்டது. இந்த ஆட்சியின் முக்கிய அம்சம் என்ன வெனில் ஆங்கிலத் துருப்புகள், (Limerick) லிமரிக் நகரத்தை முற்றிக்கை போட்டபோது, தேசீய போர் வீரராகிய பாட்ரிக் சார்ஸ்பீல்ட் (Patrick Sarsfield) என்பவரின் வீரச்செயல்களேயாம்.

ஆனல் அயர்லாந்தில் ஆங்கில ஆட்சியை ஆணி வேர் ஊன்றி நிலை நிறுத்திய சந்தர்ப்பங்களில் ஒன்றாகிய "பாயின் ஆற்று யுத்தம்" (Battle of the Boyne) கிட்டே நெருங்கிற்று. இந்த யுத்தத்தில் வெற்றியை யடைந்த ஆங்கில அரசனாகிய மூன்றாவது உவில்லியம் (Willian III) என்பவரை அயர்லாந்து தேசத்தினர் ஞாபகத்தில் வைத்திருப்பது, லிமரிக் நகர ஒப்பந்தத்தால் தான் (Treaty of Limerick). நாளைக்கும் இந்த நகரமானது "உடைந்துபோன ஒப்பந்த நகரம்" (The City of

the Violated Treaty) என்றுதான் பாமர ஜனங்களால் கூட அழைக்கப்படுகிறது. இவ்வாறு ஒப்பந்தப்படி நடக்காமல் அயர்லாந்து ஜனங்களை ஏமாற்றும்படி தைரியம் கொடுத்தது, 1692ம் வருஷத்தில் கூட்டி வைக்கப்பட்ட (Irish Parliament) அயர்லாந்து தேசத்தின் பார்லிமெண்டு சபையேயாகும். இந்தச் சபையின் அநி குரூரத்தீர்மானங்களையும் சட்டங்களையும் பற்றி நாம் சற்றுக் கீழே வரைந்திருக்கிறோம்.

மூன்றுவது உவில்லியமும், தன்னுடைய முன்னோர்களைப் போல் பறி முதல் முறையைக் கைப்பற்றி, பத்து லட்சம் ஏக்கர் விஸ்தீர்ணமுள்ள (தேசியர்களின்) நிலங்களைப் பறி முதல் செய்து தன் இஷ்டப்படி வினியோகம் செய்தார். உதாரணமாக, தன் வைப்பாட்டியாக விருந்த ஒரு சீமாட்டிக்கு ஏராளமான நிலத்தைக் கொடுத்தார். இது மாத்திரமன்று. யோக்கியதையைக் கொஞ்சமேனும் கவனிக்காது, வேண்டியவர்களுக்குப் பெரிய உத்தியோகங்களும், அயர்லாந்துக்கு ஒரு நன்மையும் செய்திராதவர்களுக்கு அயர்லாந்தின் வருமானத் தொகையிலிருந்து ஏராளமான பென்ஷன்களும் சாதாரணமாக வழங்கப்பட்டு வந்தன. இக் காலத்து ஆட்சி முறை எவ்வகையானது என்பதற்கு இன்னொரு உதாரணமும் நாம் இங்கு காட்டாமலிருக்க முடியாது: இங்கிலாந்தில் பிரதம மந்திரியாயிருந்த வால்போல் (Walpole) என்பவர், உவில்லியம் உட் (William Wood) என்னும் அமைதேய ஆங்கிலேயனுக்கு அயர்லாந்தில் செலாவணி ஆகவேண்டிய ½ அணு ¼ அணு நாணயங்களை முத்திரையடிக்கும் அதிகாரத்தைக் கொடுத்தார். அவர் இழிவான உலோகத்தை உபயோகப்படுத்தி, அதனால் அடைந்த லாபமாகிய நாற்பதினாயிரம் பவுனை, உட் என்பவர் பாதியும், முதல் ஜார்ஜ் அரசனின் (George I) வைப்பாட்டியாயிருந்த கெண்டால் சீமாட்டி (Duchess of Kendal) பாதியுமாக எடுத்துக் கொள்வதென்று ஏற்பட்டிருந்தால், அயர்லாந்து தேசம் எந்த முறையில் ஆளப்பட்டு வந்ததென்பது எளிதில் தெரிந்து கொள்ளக்கூடியதாயிருக்கும்.

இவ்விதமாக அதிகக் கிளர்ச்சி செய்து ஜனங்களை விழிக்கச் செய்தவர் டீன் ஸ்விப்ட் (Dean Swift) என்பவர். "ட்ரேபியர்ஸ் லெட்டர்ஸ்" (Drapier's Letters) என்று தலையங்கம் கொண்ட அனேக வியாசங்களை அவர் எழுதி, ஆங்கில நாட்டு சாமான்களை வாங்கக் கூடாதென்று வற்புறுத்தினர். "இங்கிலாந்திலிருந்து வரும் எல்லா சாமான்களையும் (நிலக் கரியைத் தவிர) கொளுத்தி விடுங்கள்" என்று போதித்தார். "ஒரு சமூஹத்தாரை அவர்கள் சம்மதமின்றி மற்றொரு சமூஹத்தார் ஆள்வதென்பது அடிமைத்தனமேயாம்" என்று வற்புறுத்தினர். ஹிம்சை வழியை அவர்

போதிக்காமல், ஆத்ம (சுய) கவுரவத்தைக் காப்பாற்றும் பொருட்டு இங்கிலாந்தின் சரக்குகளை வாங்குவதில்லை யென்னும் தீர்மானம் தான் தேவையென்றார். இந்த வியாசங்களை அச்சிட்டவரை அதிகாரிகள் பிராசிகூஷன் செய்தார்கள். ஆனால், கச்சேரியில் அவர் மீது குற்றம் ஏற்படுத்தப்படவில்லை. ஜனங்களுக்கு உணர்ச்சி உண்டாய்விட்டது. உட் என்பவருக்குக் கொடுத்திருந்த உரிமையையும் இழிவான நாணயங்களையும் கவர்ன்மெண்டு ரத்து செய்து விட்டார்கள்.

1703-ம் வருஷத்தில் அயர்லாந்து தேசத்தின் பார்லிமெண்டு சபை இங்கிலாந்து தேசத்தின் பார்லிமெண்டு சபையுடன் ஐக்கியப்படக் கோரி ஒரு தீர்மானம் செய்திருந்த போதிலும், அதை ஆங்கில பார்லிமெண்டு ஏற்றுக் கொள்ளவில்லை. காரணம் :—ஏற்றுக்கொண்டால் அயர்லாந்துக்கு வியாபார விஷயமாக சமமான உரிமைகள் கொடுக்கவேண்டு மென்பதே! அயர்லாந்தின் வியாபாரத்தைப் பல துறைகளில் குறைக்க வேண்டிய ஏற்பாடுகளை இங்கிலாந்து இடைவிடாமல் செய்துவந்தது. 1699-ம் வருஷத்தில் ஆங்கில பார்லிமெண்டின் சட்டப்படி, அயர்லாந்திலிருந்து ஏற்றுமதியாகும் (Wollen) கம்பளங்களை இங்கிலாந்து தேசத்தின் துறைமுகங்களுக்குத் தவிர வேறு இடங்களுக்கு அனுப்பக்கூடாதென்றாயிற்று. இதுவும் போதாமல், அயர்லாந்திலிருந்து (இங்கிலாந்திற்குள்) இறக்குமதியாகும் சரக்குகளுக்கு உயர்ந்த(Excessive duty)இறக்குமதித் தீர்வையும் விதிக்கப்பட்டது. அயர்லாந்திலிருந்து பீங்கான் சாமான் (Glass) ஏற்றுமதி செய்யக்கூடாதென்று இன்னொரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஜனங்கள் இந்த அநீதிகளை சகிக்க முடியாமல், திருட்டுத்தனமாக வெளித் தேசங்களுடன் வியாபாரம் செய்யத் தலைப்பட்டார்கள். அதி சீக்கிரத்தில் இந்தத் திருட்டு வியாபாரம் தேசம் முழுவதும் பரவி, அதை அடக்குவதும் அசாத்தியமாய் விட்டது. லிமரிக் நகரத்து ராஜ ஒப்பந்தத்திற்குப் பிறகு (Treaty of Limerick) சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டு வரையில், அயர்லாந்தில் யுத்தங்களாவது விசேஷமான கலகங்களாவது ஏற்பட்டிருக்கவில்லை யாகிலும், அத் தேசத்து நிலைமை விர்த்தியடையாமல் யோக்கியதையிலும் பொருளாதார நிலைமையிலும் க்ஷீண திசையை யடைந்துவந்த தென்றே சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுமேயாகில், அத்தேசத்தின் ஆட்சி முறையின் குறைகளே இதற்கு முக்கிய காரணமென்று தைரியமாகச் சொல்லக் கூடும். இங்கிலாந்து, அயர்லாந்தை சமத்வமாக நடத்தாதது விந்தையாகாவிடினும், அயர்லாந்து தேசத்து ஜனங்கள் நாகரீக மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல, ஆதலால் அவர்களுக்குச் செய்திருக்கும் வாக்குத் தத்தங்களைக் காப்பாற்ற முயல வேண்டியதில்லை என்ற கருத்து

இங்கிலாந்தின் மனதில் தோன்றியதே, இந்த துர்பாக்கிய நிலைமைக்கு முக்கிய காரணமாகும்.

1692-ம் வருஷத்தில் கூட்டிவைக்கப்பட்ட அயர்லாந்தின் பார்லிமெண்டு சபையில், கத்தோலிக் மதஸ்தர்களை ஒவ்வொரு வழியிலும் ஹிம்சிக்கக் கூடிய கிரிமினல் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இச் சட்டங்களை ஆங்கில பார்லிமெண்டு நிராபேக்ஷணையாக ஊர்ஜிதம் செய்தது.

சட்டப்படி அயர்லாந்திலுள்ள ஒவ்வொரு கத்தோலிக் குரு (Priest) வும் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். விரோத மதமாகிய (Protestant) பிராடஸ்டண்டு மதத்தை அனுசரித்த அரசனுக்கு ராஜபக்திப் பிரமாணம் செய்யவேண்டும். கத்தோலிக் மதத்தைச் சேர்ந்த "பிஷப்" அல்லது "ஆர்ச் பிஷப்" அயர்லாந்தில் எங்கேயாவது தென்பட்டால், அவரை சிரச்சேதம் செய்யவும், பிரேதத்தைப் பிறகு நாலு துண்டுகளாக நறுக்கவும், சட்டம் இடம் கொடுத்தது. இப்பேர்ப்பட்டவர் இருப்பதாகத் தகவல் தெரிவிப்பவருக்கு, ஐம்பது பவுன் சர்க்காரால் இனமாக அளிக்கப்படும். சாதாரண குரு (Priest) எங்கேயாவது அகப்பட்டால், அவருக்குச் சூடு போடுவது சட்ட முறையாகும். இந்தச் சட்டங்களால் அயோக்கியர்களுக்கு ஒரு புதிய உத்தியோகம் ஏற்பாடு செய்ததாக நேர்ந்தது. சர்வ கலாசாலையில் கத்தோலிக் மதத்தைச் சேர்ந்தவன் மாணவனாகச் சேர அனுமதி யில்லை; அம்மதஸ்தர்கள் உபாத்தியாயராக விருக்கலாகாது. அவர் ஒரு பள்ளியையும் நடத்தலாகாது. கண்டு பிடித்துக் கொடுக்கிறவருக்கு, பத்துப் பவுன் சர்க்காரில் இனும். இந்த மதஸ்தினர் தங்கள் பிள்ளைகளை, படிப்புக்காக அன்னிய தேசங்களுக்கு அனுப்பினால், அதுவும் குற்றம்தான்.

(தொடரும்)

மதிப்புரை.

13. பொக்கிஷ பாணி—(படங்களோடு கூடிய ஒரு மாலிகை—வருஷச் சந்தா ரூ. 1—2—0 C. L. S., போஸ்டு பாக்ஸ் 501, சென்னை) அழகாய்த் தெளிவாய் அச்சியற்றிப் பல படங்களுடன் வெளிவரும் இந்தப் பத்திரிகை, இப்பொழுது, முழுதும் சிறுவர்களுக்கே பயன்படுமாறு திகழ்கிறது. விளையாட்டுப் போக்கானவும் அறிவைப் பெருக்கக் கூடியனவுமான வியாசங்களும் கதைகளும் பாட்டுக்களும் விடுகதைகளும் இலேசான தமிழ் நடையில் எழுதப்பட்டு, சித்திரங்களோடு பிரசுரமாகின்றன. விலையும் வெகு சுலபமாயிருக்கிறது. இதுபோன்ற வேறு தமிழ்ப் பத்திரிகையை நாம் கண்டதில்லை.

14. விஜயராகவன்.—(ஒரு துப்பறியும் தமிழ் நாவல். ஸ்ரீமான் T. R. ரெங்கராஜு எழுதியது. ரெங்கராஜு ப்ரதர்ஸ், 50, வாலாஜா ரோடு, சென்னை. விலை ரூ. 1—0—0) இந்த நாவல், தற்காலத்தில் சில ஜனங்கள் உகந்து படிக்கும் "துப்பறியும்" வர்க்கத்தைச் சேர்ந்தது. தமிழ் நடை தெளிவாயிருக்கிறது. துப்பறியும் கதைச் சூழ்ச்சியில், அவ்வளவு சிலாக்கியமாகத் தோற்றவில்லை. ஆனால், தற்காலத்து எலக்ஷன் புரட்டுகளையும், ராஜீயக் குழப்பங்கள் போட்டிகளையும், நாவலர் இதில் புகுத்தி வருணித்திருப்பது ருசிகரமாயிருக்கிறது. சட்ட சபை, நகர பரிபாலன சபைகளுக்கு அபேக்ஷகராகும் நம்மவர் சிலர் இதை வாசிப்பது நலமாகும்.—மா.

15. பெண்மைக் குடித்தனம்—(ஸ்ரீமதி சீதாலக்ஷ்மியம்மாள், "சந்திர விலாஸ்", எட்வர்ட் எலியட் ரோடு, மயிலாப்பூர், சென்னை. விலை. 0—3—0)

இப்ஸன் நாடகங்களிலொன்றை ஸ்ரீமதி சீதாலக்ஷ்மி அம்மாள் இந்தியர் வாழ்க்கைக்குப் பொருந்தும்படி மாற்றி யமைத்துச் சுருக்கி எழுதிய கதை இது. தமிழ் நடை தெளிவாயும், கதைப் போக்கு சாரமாயும் நாடோடி வாழ்க்கையை அநுசரித்ததாயும் உள்ளது; அன்றியும் கதையின் உட்கருத்து எவரும் ஆழ்ந்து ஆராயத் தக்கது. கதா நாயகியாகிய கமலா, சம்பத்தில் வளர்ந்தவள்; உலக விவகாரம் தெரியாதவள்; பேதைமையும் வாஞ்சையும் குடிகொண்ட மனத்தினள்; அவள், தன் சுயபுத்தியை நம்பி ஒரு காரியம் செய்யப்போக, அது அவமானமும் ஆபத்துமாக வந்து முடிகிறது; அந்த சமயத்தில், அவளைப் பகுத்தறிவில்லாதவள் என்றும், குழந்தைகளை வளர்க்கத் தகாதவள் என்றும் கணவன் இடித்துச் சொன்னதை எல்லாம் அவள் மெய்தான் என்று ஒப்புக்கொண்டு, அந்த ஆபத்து நீங்கியபின், நடந்ததை மறந்துவிடும்படி கணவன் வேண்டிய தொன்றையும் பொருட்படுத்தாமல், வெறிகொண்டவள் போலாகி, கொண்டவனையும் குழந்தைகளையும் விட்டு, சித்தவிருத்தியைத் தேடி, தனியே புறப்பட்டுப் போகிறாளே, இது நடக்கக் கூடியதா, நியாயமா, என்ற கேள்வி, கதையைப் படிப்பவர் ஒவ்வொருவர் மனத்திலும் தோன்றும். எவருக்கும் தன்மானமே மற்றகுணங்களுக்கு அடிப்படையாவது ; அந்த அஸ்திபாரமே அதிர்ந்து, அதன் மேற்கட்டிய மனக் கோட்டையெல்லாம் கணப்பொழுதில் இடிந்து விழுந்து விட்டால்; உரோஷமுள்ள பெண் ஒருத்தி, என்ன தான் செய்யமாட்டாள்? கமலாவுக்கு இனிச் சுகம் கிடையாது; அவள் மனத்திருள் நீங்கியதே யொழிய அவள் வாழ்க்கைக்கு விடிவு காலம் சட்டென ஏற்படாது. நடக்கக் கற்ற குழந்தை தவிழக் கற்றதாம் தாயார் செய்த தவம் என்பது போல, புருஷருக்கு வாழ்க்கைத் துணையாய்க் குடித்தனத்தை வகிக்க வேண்டிய ஸ்திரீகளைப் "பேதை" யராகவும் "பாவை" யராகவும் வளர்த்து விடும் ஜனசமூகம் செய்த தவப்பலனே, இக்கதை நிகழ்ச்சி. இதன் சாரத்தை எல்லாரும் படித்தறிவது நலமாகும்.

—ரா.

மாதர் பகுதி

ஹிந்து ஸ்திரீகள்

(311 ம் பக்கத் தொடர்ச்சி — ஓர் இந்திய ஸ்திரீ எழுதியது.)

எந்தத் தேசத்தில் எப்படிப்பட்ட நாகரிகமும் படிப்பும் ஏற்பட்டு, அதினால் ஸ்திரீகள் உயர்வை அடைந்திருந்தாலும், இந்திய ஸ்திரீகள் படிப்பொன்றுந் தெரியாமல் அறியாமையாகிய இருளில் மூழ்கி யிருந்தாலும், கற்பில் சிறந்தவர்களா யிருந்து வருகிறார்கள். வேதங்களெல்லாந் தெரிந்து சிறுஞ் சிறப்புமா யிருந்த அந்த காளிலிருந்து இந்த நாள் வரையில், கர்ண பரம்பரையாய்க் கற்பைப் பற்றிப் போதித்து, ஸ்திரீகளுக்குக் கற்புத்தான் சிறந்த ஆபரணம் என்று சொல்லி அவர்களை வளர்க்கிறதினால், மற்றெந்த விஷயத்தில் ஸ்திரீகள் மௌட்டியமா யிருந்தாலும், கற்புடனிருப்பது மட்டும் வளர்ந்துகொண்டே வருகிறது. இந்திய ஸ்திரீகள் மனதில் இப்படிப்பட்ட நல்ல குணம் பரம்பரையாய் ஏற்பட்டு வருவதனால், கணவன் எப்படிப்பட்ட துஷ்டனாயிருந்தாலும், அவனாலுண்டாகும் துன்பங்களைப் பூமா தேவிக்குச் சமானமாய்ப் பொறுத்துக்கொண்டு கீழ்ப்படிந்து நடப்பது வழக்கமாகி விட்டது. இதனால் சில புருஷர்கள் ஸ்திரீகளை அடிமைகள் போல நினைத்துக் கேவலமாய் நடத்துகிறார்கள். எல்லாந் தெரிந்து நன்றாய்ப் படித்து, ஸ்திரீகள் எல்லாரையுஞ் சீர்திருத்தி நல்ல வழிக்குக் கொண்டுவர வேணு மென்று சொல்லும் புருஷர்களில் சிலருமே, இந்தமாதிரி கெட்ட விதமாய் நடந்து வெளிக்குமட்டுந் தெரியாமல் வேஷம் போடுகிறார்கள். பகிரங்கமாய் கெட்ட நடத்தையுடனிருந்து, நானிப் படித்தானிருப்பேன் என்று சொல்கிறவர்களை விட, இப்படிப்பட்டவர்கள் கேவல மென்றே சொல்லவேண்டியிருக்கிறது. ஸ்திரீகளுக்குப் புருஷர்களைப்போல் படிப்பில்லாததினால் தான், இப்படி எல்லாம் கேவலமான ஸ்திதியில் வைத்திருக்கிறார்கள் என்று நினைத்து, நல்லெண்ணமும் ஸ்திரீகள் மேலிரக்கமு முள்ள சிலர், பெண்கள் படிப்பும் பெண்கள் பள்ளிக்கூடமும் ஏற்படுத்தினர். இதனால், கொஞ்சப் படிப்பினுள்ள ஸ்திரீகளுக்குத் தங்கள் புருஷர்கள் தங்களை மதிக்கவில்லை என்ற உணர்ச்சி ஏற்பட்டு, தங்கள் பெண்களேனும் நன்றாய்ப் படித்திருந்தால், அவர்

கள் தங்கள் கணவருடன் சந்தோஷமாயிருக்க முடியுமென்று தோன்றி, பதினாறு வயது வரையும் கலியாணம் பண்ணும விருந்து படிக்கவைக்கச் சம்மதித்தார்கள். வர வர, ஸ்கூல் படிப்பு மாத்திரமன்றிக் காலேஜில் படிப்பதும் ஏற்பட்டது, ஸ்திரீகள் காலேஜூம் ஏற்பட்டது. இப்பொழுது காலேஜில் சகல ஜாதிப் பெண்களும், உயர்ந்த சாதியிலிருந்து தாழ்ந்த சாதி வரையில், கலியாணமானவர்கள் கலியாண மாகாதவர்கள், எல்லாரும் படித்து வருகிறார்கள். புருஷர்கள் படிப்பது போலவே பெண்களும் படித்துப் பட்டமும் பெறுகிறார்கள். இப்பொழுது கொஞ்சக் காலமாய்த்தான் புருஷர்களைப் போல் பெண்களுக்கும் புத்தியிருக்கு என்றுணர்ந்து, புருஷர்கள் பெண்களை மதித்து மரியாதையாய் நடத்துகிறார்கள். கெட்ட நடத்தையுள்ளவனுக்குக் கூட, தனக்குச் சரிசமானமான படிப்புள்ள ஒரு பெண்டாட்டி யிருப்பதினால், தன் மானத்தைக் காத்துக்கொண்டு, கண்ணியதை யுடனிருக்க வேணு மென்ற உணர்ச்சி வருகிறது. மேலும் ஒரு பெண்ணுக்கு நன்றாய்ப் படிப்புத் தெரிந்திருந்தால், அவள திர்ஷ்டம் நல்லதாயிருந்து கணவன் சம்பாதித்துக்கொண்டிருந்தால், இருவரும் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

இனிப் பாலிய விதவைகளைப்பற்றிச் சிறிது பேசுவோம். அவளுக்குத் தாய் தகப்பனிருந்து பணக்காராயுமிருந்தால், அவள் கதி ஒரு விதத்தில் கஷ்டமில்லாம லிருக்கிறது. முன்னாளிலிருந்து இந்த நாள் வரைக்கும், பெண்கள் விதவைகளாய் விட்டால், அவர்கள் கதி நிர்க்கதியாய்த்தா னிருந்தது. பணமுள்ள விதவைகள் கூட, சதா வேலை செய்வதொன்றைத் தவிர வேறொன்றும் கிடையாது. பணமுமில்லாமல் கைம் பெண்ணுமாய்விட்டால், யார் கிழாவது வேலை செய்தும், ஆரார் என்ன என்ன விதத்தில் துன்பப்படுத்தினாலும் சகித்துக்கொண்டும், அரும் பாடுபட்டு வயிறு வளர்க்க வேண்டியதைத் தவிர, வேறு கதி கிடையாது. இப்பொழுதோ, பாலியத்தில் விதவைகளாய்ப் போனவர்களுக்கென்று பள்ளிக்கூடம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அதில் அனேகம் விதவைகள் படிப்பு, தையல், சித்திரம் முதலியன படித்து வருகிறார்கள். பணக்காரப் பெண் விதவையாய் விட்டால் கூட, இந்தப் பள்ளிக்கூடத்தில் வந்து படித்து, உலகத்துக்கோ, அல்லது தன்னைச் சேர்ந்தவர்களுக்கோ, தன்னால் கூடிய நன்மைகள் செய்தும், தன் புத்தியின் விர்த்தியைத் தேடிக்கொண்டும் காலத்தைக் கழிக்கிறாள். ஏழை விதவைப் பெண்கள், இந்தப் பள்ளிக்கூடத்தில் படித்து, நர்சுகளாயிருந்து, தம் காலத்தையும் வீணில் செலவிடாமல் தமக்குத் தாமே சம்பாதித்தும், பிறருக்குச் சிகிச்சை செய்தும் வருகிறார்கள். படிப்பில் கெட்டிக்காரிகளா

யிருக்கப்பட்டவர்கள், காலேஜில் படித்து வாத்திச்சிகளாயிருந்து வருகிறார்கள். படிப்பில் ஆசையில்லாமல் வாழவேணு மென்ற எண்ணமுள்ள பாலிய விதவைகள், முன்போல் விபசாரம் பண்ணித் திருட்டுத் தனமாய் நடக்க விடாமல், மானத்துடன் வாழும் படி, விதவா விவாகம் ஏற்படுத்தி, கலியாணத்தி லிஷ்டமுள்ள, பால்ய விதவைகளைக் கலியாணம் பண்ணி வைக்கிறார்கள். பிள்ளைகளைப் போல் பெண்கள் ஸ்கூல், பெண்கள் காலேஜ் எல்லாம் ஏற்பட்டு, அவரவர் புத்திக் கெட்டின மட்டும் படிக்கும்படியா யிருக்கிறது. இப்படி எல்லாம் பெண்களுக்குப் படிப்பேற்பட்டு, ஒருத்தருக்கும் அடிமையாகாமல் அவரவரிஷ்டம் போல் மானத்துடனும் மரியாதையுடனும் வாழலா மென்ற சுதந்திரம் ஏற்பட்டிருக்கிறது. புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் நம்மைப்போல் படிப்பு புத்தி எல்லா மிருக்கென்று மனதில்பட்டு, ஸ்திரீகளை அடிமையாய் நடத்திவந்ததை விட்டுவிட வேணுமென்ற எண்ணந் தோன்றி, புருஷர் மரியாதை வைத்து நடக்கிறார்கள். நெடு நாளாய் ஸ்திரீகளைக் கேவலமாய் நினைத்து அடிமை யாக்கி நடத்தி வந்த வழக்கத்தினால் இன்னும் அனேகம் புருஷர்கள், ஸ்திரீகளுக்கு படிப்பேது என்றும், அவர்களை கண்ணியமாய் நடத்தினால் தங்களுக்கு அவமான மென்றும், நினைக்கிறார்கள். சிலர் மனதில், ஸ்திரீகளும் நம்மைப்போல் புத்தி படிப்பு எல்லாமிருக்க அவர்களை இழிவாய் நடத்தக்கூடாது என்று மனதில் பட்டாலும், நெடு நாள் பழக்கத்தினால், தங்கள் வீட்டு ஸ்திரீகள் கொஞ்சம் சரிசமமாய் நடந்தாலோ, அல்லது காரியத்தில் சுதந்தரத்துடனிருந்தாலோ, தன்னை அறியாமல் கோபம் வந்து; அவலை நினைத்துக்கொண்டு உரலை இடிப்பது போல், வேறு ஏதாவது சொல்லிக் கோபித்துக் கொள்கிறார்கள். நூற்றிலொருத்தர் வீதம் சில புருஷர்தான் தாங்கள் இது வரையில் ஸ்திரீகளை நடத்ினது அக்கிரம மென்றும், இனிமேல் ஆடு மாடுகளை விலைக்குக்கொண்டு வேலை வாங்கி நடத்துவது போல் நடத்தாமல், தம்மைப்போல் சகல விஷயத்திலும் சுதந்திரத்துடனிருக்கும்படி செய்ய வேணுமென்றும் தோன்றி, அப்படியே நடக்கிறார்கள். இப்படி எல்லாமிருக்கும் இந்த நாளில், சில ஸ்திரீகள், பெண்களுக்குக் கொஞ்சப் படிப்புப் போது மென்றும்; சிலர் பத்து வயது மட்டும் தாய்ப்பாஷை கற்றுக்கொண்டு, பிறகு வீட்டு வேலைகள் கற்றுக்கொண்டால் போது மென்றும்; சிலர், கொஞ்சம் தமிழும் வீட்டுக்கணக்குந் தெரிந்து குடித்தனத்துக்கு வேண்டிய படிப்பிருந்தால் போதும், எதற்காகப் பெண்கள் உடம்பைக் கெடுத்துக்கொண்டு இங்கிலீஷ்ப் படித்து மேல் கிளாஸ்ப் பரீக்ஷைக்குப் போகிறார்கள் என்றும் சொல்லி, தங்கள் சாமர்த்தியத்தைக் காட்டுகிறார்கள். அடிமைத்தனம் நீங்கி வருங்காலத்தில்,

ஸ்திரீகளே இப்படிச் சொல்வதும் ஒரு விந்தை தான்! குழந்தையாயிருக்கும் பொழுது படிப்புச் சொல்லி வைக்காமல், காரியத்தில் விட்டால், அவர்களால் என்ன வேலைகள் செய்ய முடியும்? இந்தக் காரியம், குழந்தை முதல் 15 வயது வரையுஞ் சொல்லி வைத்தால் எவ்வளவு தெரியுமோ அவ்வளவு, 13 முதல் 15 வரையில் சொல்லி வைத்தாலும் வந்து விடும். வேலை செய்வதெல்லாம், பெரியவர்களாக விட்டு, இரண்டு மூன்று வருஷத்தில் கற்றுக்கொண்டால், எல்லாந் தெரிந்து விடும். படிப்பு, ஒரு வருஷம் இரண்டு வருஷத்தில் படித்து விட முடியாது. மேலும், குழந்தை முதல் எல்லா விதமான வேலைகளும் கற்றுக் கொண்டு வீட்டில் குடித்தனம் பண்ணிக்கொண்டு, பிறகு படிக்க ஆரம்பித்தால், படிப்பும் வராது, புத்தியும் படிப்பில் செல்லாமல், வீட்டிலுள்ள வேறு விஷயங்களில் தான் சென்று விடும். குழந்தைகளாயிருக்கும் பொழுது மனதில் ஒரு விதக் கவலையும் ஏற்படாமல், களங்கமற்ற மனசாயிருப்பதினால், படிப்புச் சொல்லி வைத்தால் நன்றாய் மனசில் பதிந்து வருகிறது. புருஷர்களாய்ப் பிறந்து, குழந்தை முதல் வேலை செய்வது இன்னதென்றும் தெரியாமல், படிக்க வைத்த சில பிள்ளைகள், படிப்பு வராமல், ஏழையாயிருந்தால், 16—17 வயதில் பரிசாரகனாக வேலைக்கு வந்து, இரண்டொரு வருஷத்தில் எல்லா வேலையுங்கற்றுக்கொண்டு, வேலை செய்ய வில்லையா? வேலை செய்வதெல்லாம், குழந்தை முதல் 15 வயது வரை சொல்லிவைப்பதும், 13—14 முதல் இரண்டு வருஷம் சொல்லிக் கொடுக்கிறதும், ஒன்று தான். படிப்பு இளமையில் கற்க வேண்டியிருப்பதினால், ஆண் பெண் எல்லாக்குழந்தைகளையும் படிக்க வைப்பது பெரியவர்களுடைய கடமை. அவரவர் புத்தி போல் படிப்பு வருகிறது. அப்படி நினையாமல், சில படித்த ஸ்திரீகளே, பெண்கள் தாய்ப் பாஷை மட்டுங் கற்றுக்கொண்டால் போதும், மற்றப்பாஷைகள் வேண்டிய தில்லை என்று சொல்லி வருகிறார்கள். புருஷர்களுக்கு இப்படி யிருந்தால், அது போதும். அதில்லாமல், புருஷர்கள் இங்கிலீஷ்ப்படித்திருப்பதினால், அவர்கள் பேசுவது இன்னதென்று தெரியாமலும் எழுதுவதை வாசிக்கத் தெரியாமலுமிருக்கிறது. ஒரு தந்தி வந்தால், அதை வாசிக்கத்தெரியாமல், தந்தியிலுள்ள காரியம் என்னதோவென்று மனம் பதை பதைக்க, எங்கே எந்தப் புருஷனிருக்கிறான் இதைப் படித்துச் சொல்ல என்று, அலைந்து திரிவது சரியா? எல்லாரும் தமிழ்ப்படித்தால், அது எல்லாருக்கும் பொருந்தும். முதலில் தன் சொந்த பாஷை எல்லாருக்குந் தெரிந்திருக்க வேண்டியது தான். மற்றப் பாஷைகள் கற்றுக் கொள்வதனால் என்ன கெடுதல்? எவ்வளவுக்கெவ்வளவு பாஷைகள் கற்றுக்கொள்கிறார்களோ, அவ்வளவும் நன்மையே தவிர,

படிப்பினால் மனுஷர்கெட்டு விட மாட்டார்கள். நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும், அவரவர் குணம், பரம்பரை வழக்கம் இவைகளினாலேயே வித்தியாசம் தவிர படித்துக் கெட்டுப்போவார்கள் என்று ஒரு வரும் சொல்ல முடியாது. இங்கிலீஷ் படித்தால், மேசையில் சாப்பிட்டுக் கொண்டு பூட்சும் கவுனும் போட்டுக் கொள்ள வேணுமென்றும்; தெலுங்கு படித்தால், மடி கட்டிக் கொண்டு புளிஇலைத் துவையல் சாப்பிட்டுக்கொண்டு, உடையைச் சுற்றிக் கட்டிக்கொள்ள வேணுமென்றும்; ஸம்ஸ்கிருதம் படித்தால், ஆசிரமத்திலிருந்து வேதபாராயணம் பண்ணிக் காய் கனிகள் சாப்பிட வேணுமென்றும், தமிழ் வாசித்தால் தான், வீட்டில் வேலை செய்து குடித்தனம் பண்ணுவார்கள் என்றும், ஒருவராலும் சொல்ல முடியாது. படிப்பெல்லாம், ஆண் பெண் இருவருக்குப்பாருக்கும் முக்கியமானது. புருஷர்களுக்கு ஒரு படிப்பு, பெண்களுக்கு ஒரு படிப்பென்றிருந்தாலே,குடித்தனத்தில் ஒத்துவாழ முடியாது. புருஷர்கள் படித்தும் பெண்கள் படியாமலும் இருந்ததினாலேயே இவ்வளவு காலமும் ஸ்திரீகளை இழிவாய் நடத்தி வருகிறார்கள் என்பது மட்டுந் தெரியவில்லைப்போலும். இந்த நாகரிக நாளிலே, எந்த எந்த பாஷை கற்றுக்கொள்ள முடியுமோ, அவ்வளவுங் கற்றுக்கொண்டாலும் நல்லது; படிப்பினால் புத்தியும் விசாலப்படும். எல்லாரையும் படிக்க வைத்தால், படிக்க வைத்தவர்களுக்கெல்லாம் படிப்பு வந்து விடுகிறதா? ஏதோ சிலருக்குத்தான் புத்தி படிப்பில் சென்று விர்த்தியாகிறது. அதில்லாமல், அந்தப் படிப்புக்கூடாது, இந்த பாஷை கூடாது என்று வீண் வார்த்தை சொல்லி, ஸ்திரீகள் படிப்பதைச் சிலர் கெடுக்கப் பார்ப்பது,ஆச்சரியமும் அவமானமுமாயிருக்கிறது, எல்லாரும் தம்மால் கூடிய மட்டும் படிப்பதே உத்தமமாகும்.

குசிகர் குட்டிக் கதைகள்

மூன்று பாகங்களில் 22 கதைகள்

மொத்தம் விலை, ராப்பர் 1—8—0.

ஷை டக்லீன் 1—12—0.

பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு,

மயிலாப்பூர் - சென்னை.

பத்திராதிபர் குறிப்புக்கள்

(384–ம் பக்கத்தின் தொடர்ச்சி)

20. சுயராஜ்யக் கட்சியும் காங்கிரஸும்—இந்தியா சட்ட சபையின் தலைவராக ஸ்ரீ. வல்லபதாஸ் பட்டேல் தெரிந்தெடுக்கப்பட்டது தான், தேசபந்து தாஸ் இறந்த பின், இக் கட்சியார் அடைந்துள்ள வெற்றிகளில் சிறந்ததென்னலாம். மகாத்மா காந்தியைத் தம் பக்கம் திருப்பி, இராசாங்கத்தாரை மும்முறை முறியடித்ததே தேசபந்துவின் வெற்றிகள். பட்டேல் அதி சமர்த்தர், தீரர், எதையும் எவரையும் அஞ்சாதவர், சூழ்ச்சித் திறமையும் வாய்ந்தவர். அவைத் தலைமைக்கு அவரை எதிர்த்து நின்ற திவான்பகதூர் ஸ்ரீ அரங்காசாரியார் அடைந்த தோல்வி, அரசாங்கத்தினர் அடைந்த தோல்வியே என்பர். அது எங்ஙனமாயினும், அரசாங்கத்தாராக என்றுமே பட்டேலின் தலைமையை விரும்பியிரார் என்பது திண்ணம். அகில இந்தியா காங்கிரஸ் கமிற்றியார் கூடித் தீர்மானித்த விஷயங்களிலும், பண்டிதர் மதிலால் நேருவின் தலைமைக் கீழ் முனைந்து நின்ற இக் கட்சியாரே வெற்றி பெற்றுளார். காங்கிரஸ் சபை அங்கத்தினர்க்கு, நாலணாச் சந்தா மீண்டும் ஏற்பட்டுவிட்டது. ஆயினும், யானை கொடுத்தவன் தொறட்டி மறுத்த கதைபோல, கதராடை ஒன்று, இன்னும் கட்டாயமாக இருந்துகொண்டிருக்கிறது. கதரைப் பற்றி நாட்டிலே அபிப்பிராய பேதமில்லாவிட்டால், இதை ஒப்புக்கொண்டிருக்கலாம்; அபிப்பிராய பேதம் உள்ளவரை, இப்படிப்பட்ட வில்லங்கம் விசனிக்கத் தக்கதேயாம். சென்னை நகர பரிபாலன சபையிலும் சுயராஜ்யக் கட்சியார் மேவிட்டு வருகின்றனர். ஆனால், இச் சபையாரின் நடவடிக்கைகளையும், இச் சபையின் கீழுள்ள நிருவாக உத்தியோகஸ்தர்களின் தோரணை

கனம் பட்டேல்.

களையும், இவற்றின் உருவகங்களாம் நகரக் காட்சிகளையும் கவனித்து வருவோர், வேறு வேடிக்கை விநோதங்களை விரும்பார். இந்தியன் நாஷனல் காங்கிரஸ் சபையே அடிக்கடி உருக்குலைந்து அலங்கோலப்பட்டு வரும் நாளிலே, இது வியப்பன்று.

21. மதுவிலக்கு —மதுக்களையும் மற்ற லாகிரி வஸ்துக்களையும் உண்டுபண்ணுவதை அறக்குறைத்து, வைத்தியர் உத்திரவின்படி மருந்துகளாக வன்றி மற்றப் பொழுதுகளில் எவரும் அவற்றை உபயோகிக்க முடியாமல் தடுத்துவிட்டால், பலவிதத் துன்புகளும் நோய்களும் நீங்கி, ஏழை ஜனங்கள் செழித் தோங்குவர்; அதுதான் நாகரிக முறை என்பது; இந்நாளிலே பல நாட்டார் துணிபாகி, அநுஷ்டானத்துக்குக் கொண்டுவரப்படுகிறது. மதுபானம் பாவமாகக் கருதப்படும் இந்தியாவிலே இதை அமுலுக்குக் கொண்டுவருதல், துரைத்தனத்தார் மாத்திரம் மனம் வைத்தால், சுலபமாகும். இந்தியா சட்ட சபையிலே இதைப் பற்றி ஒரு தீர்மானம் நிறைவேறியது; ஆனால், துரைத்தனத்தார், இராசாங்க சபையின் மூலமாக, அதைத் தள்ளிவிட்டனர். மதுவிலக்கு விஷயமோ, இப்பொழுது இந்திய மந்திரிகளின் அதிகாரத்துக்குள் ளிருப்பதாகப் பாவனை. இருகிளை யாட்சியின் பொய்த் தோற்றங்களில் இஃதொன்று. பம்பாய் மாகாண கவர்ன்மெண்டார், இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் உழைக்கத் தலைப்பட்டனர். அதைப் பற்றி இந்தியா சட்ட சபையில் பேச்சு நிகழ்ந்த போது, எந்த மாகாண கவர்ன்மெண்டாவது மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவர எத்தனித்தால், தாங்கள் குறுக்கிட்டுத் தடுக்க வேண்டி வருமென்று இந்தியா கவர்ன்மெண்டார் கூறினர். அவ்வண்ணமே, மதுவிலக்கின் முதல் படியாக, ஊரார் இஷ்டத்தைப் பொறுத்தே மதுக் கடைகளை வைக்கவும் எடுக்கவும் வேண்டுமென்னும் (Local Option Bill) மசோதாவை, ஸ்ரீ. R.G. ப்ரதான் பம்பாய் சட்ட சபையில் கொண்டுவர முயன்றதை, பம்பாய் கவர்னர் அநுமதி கொடாமல் தடுத்துவிட்டார். மற்ற நாடுகளில் போல இந்தியாவிலும், பழைய நாட்களில் மதுபானம் ஜனங்களுக்குள் வழக்கமாயிருந்தது உண்மையாயினும், ஒரு சிலாருள் மட்டுமிருந்த அவ்வழக்கம், தர்ம சாஸ்திரங்களால் கண்டிக்கப்பட்டு, மற்ற ஜனங்களால் வெறுக்கப்பட்டது. இந்நாளிலோ. அந்த உணர்ச்சி மாறிவருகிறது. தவிர, சுதேச மன்னர்கள் எவருமே, எக்காலத்திலுமே, பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரைப் போல, இலாபத்தைக் கருதி மதுவியாபாரத்தை ஒழுங்கு படுத்தி விருத்தி செய்யவில்லை என்பது திண்ணம். பூர்ண சுயராஜ்யம் கிடைத்தால்தான், இந்தத் தீங்கை ஒழிக்க முடியும் போலும்.

22. சம்மத வயது—சட்ட விரோதமாக ஸ்திரீ புருஷர் கூடுவதில், பெண் சம்மதித்திருந்தால் ஒரு தண்டனையும், பெண்ணின்

சம்மத மின்றிப் பலவந்தமாய்க் கூடினால் அதிகத் தண்டனையும், ஏற்படுவ துண்டு. ஆயின் அறியாச் சிறுமிகளும் ஏமாறிச் சம்மதிக்கக் கூடுமானதால், பெண்களை நன்கு காக்கும் பொருட்டு, இத்தனை வயதுக்கு மேற்பட்ட பெண்களின் சம்மதந்தான் சட்டப்படி சம்மத மாகும்; அவ்வயதுக்குக் குறைந்த பெண்கள் சம்மதித்தாலும், அது சம்மதமாகாது என்று ஏற்படுத்தி யிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டார் இம்மாதம் சட்ட சபையில் நிறை வேற்றிய சட்டப்படி, ஒரு கணவனும் அவன் மனைவியும் சம்பந்தப் பட்டவரையில், மனைவிக்கு வயது 13 நிறைந்த பின்பே, அவள் சம்மதம் சட்டப்படி பயன் படு மென்றும்; தம்பதிகளாகாத மற்றவர் விஷயத்தில், 14 வயது நிறைந்த பெண்ணின் சம்மதமே பயன் படு மென்றும் தீர்மான மாயிற்று. அதாவது, பெண்ணின் சம்மதம் இருப்பினுமே இல்லாவிடினுமே, 13 வயது நிறையாத தன் மனைவியிடம் பிரவேசிக்கும் கணவனும், 14 வயது நிறையாத மற்றப் பெண்ணுடன் பிரவேசிப்பவனும் குற்றவாளிகளாவர். வெகுவாய் பிராமணர்களுக்குள், 13 நிறையாத பெண்களுக்கு ருதுசாந்தி நடப்பதும், 13க்குள் பெண்கள் பிரசவிப்பதுமே இது வரை சாதாரணமா யிருந்தது. இனி அது முடியாது. இந்தச் சம்மத வயதுகளை முறையே பதினாலும் பதினாறும் ஆக்கி விடவேண்டு மென்று சீர்திருத்தக் கட்சியார் முயன்றும் பலிக்க வில்லை. இந்த விஷயத்தில் படிப்படியே மேற் செல்வதே உத்தமமாகும். இதனால், முக்கியமாய் ஹிந்து ஜன சமூகத்திக்கு, பெரு நன்மை விளையும் என்பதும் நிச்சயம். சம்மத வயதை மட்டுமன்றி விவாக வயதையே சட்டப்படி உயர்த்தி, ஆரியர் திராவிடரின் ஆதிகால வழக்கப்படி செய்து விடுதல், பல தீங்குகளையும் கொடுமைகளையும் நோய்களையும் அகால மரணங்களையும் விலக்கி விடும்; ஆனால், அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை, பிரிட்டிஷார் இந்நாட்டில் ஏற்படுத்த முன் வரார்—சுயராஜ்ய துரைத்தனமே அப்படிச் செய்ய வேண்டும்.

23. சென்னை போர்ஸ்டால் மசோதா—குற்றத்தின் தன்மைக்கும், குற்றவாளியின் வயதுக்கும் குணத்துக்கும் அந்தஸ்துக்கும் தக்கவாறு தண்டனை விதிப்பதே, இக்காலத்து நாகரிக முறை. அதிகார வர்க்கத்தார் ராஜத்துரோகியாக மதித்துச் சிறை விதித்த ஒரு தேச பக்த சிகாமணியையும், கொலை களவு பலவந்தப்புணர்ச்சி, வீட்டில் நெருப்பிடுதல் முதலிய குற்றங்களில் ஏதற்காக வேனும் சிறை விதிக்கப் பெற்ற ஒரு துராத்மாவையும் சிறைச்சாலையில் சேர்த்து, ஒரே விதமாக நடத்துவ தில்லை; இது போலவே, விவரந் தெரியாது குற்றஞ் செய்த ஒரு சிறுவனையும், குற்றங்களில் ஊறி உறைத்துப்போன ஒரு கொடியோனையும்

ஒன்று போல் நடத்துவ தில்லை. இளம் பருவத்தினர் நெறிதவறிக் குற்றஞ் செய்வது, மூளை நோயினை உண்டாகும் புத்தித் திரிபினை லன்றிப் பிறவிக்குணக் கேட்டா லில்லை; அப்படிப் பட்ட குற்ற வாளிகளை வேருக்ப் பிரித்து வைத்து, ஏற்ற சிகிச்சைகள் செய்து, நன்மதி புகட்டித் திருத் துவது தான் கிரமம் என்பது, இந் நாளைய நம்பிக்கை. மேல் நாடுகளில் முன் தலைமுறையில் ஏற்பட்ட நாகரிகமே இந்தியாவில் அடுத்த தலை முறையில் சிறிது சிறிதாக அநுஷ்டானத்துக்கு வருவது, இம் மாதிரியான விஷயங்களில் சகஜ மாயிருக்கிறது. அவ்வண்ணமே, 1902-ம் ஆண்டில், போர்ஸ்டால் என்னும் இடத்தில், வாலிபக் குற்ற வாளிகளுக் கென்று ஒரு புது முறையை ஏற்படுத்திப் பரீக்ஷை பார்த்து, பலன் தெரிந்து, மேன் மேலும் அம்முறை மேல் நாடுகளில் விருத்தி யடைந்திருக்கிறது— அந்த முறையைச் சென்னை மாகாணத்தி லே அனுஷ்டிக்குமாறு, 20-9-25ல் கவர்ன்மெண்டார் ஒரு மசோதா கொண்டு வந்திருக்கின்றனர். இப் பொழுது அந்த மசோதா, ஒரு கமிற்றியாரால் ஆராயப்பட்டு வரு கிறது. மசோதா நிறை வேறிச் சட்டமாய் விடினும், அநதப்புது முறையை அமுலுக்குக் கொண்டு வரும் மேலதிகாரிகள், அதில் நம் பிக்கையும், வாலிபக் குற்றவாளி களிடத்தில் அநுதாபமும், மனச் சாட்சிப் படி யொழுகும் தீரமும் கடமைப் பற்றுமுள்ளவர்களாயும்; அதைக் கண்காணிப்போர், துரைத் தனத்தாரின் தயவை நாடிய பட்ட வேட்டைக்காரரா யின்றி, நாட்டின் நன்மையையே நாடும் சிலர்களாயும் இருந்தா லன்றி, எவ்வித நன்மை யும் விளையாது. இதுவு மன்றி, இந்த விஷயத்தில் போதுமான பணம் செலவிடத் துரைத்தனத் தார் சித்தமா யிருக்க வேண்டும். இம் மூன்றும் சேர்ந்தால்தான் காரியம் பலிதமாகும். மேலே கூறியது என் நண்பர் ஸ்ரீ T. ஆதி நாராயண செட்டியாரவர்கள் (M.L.C.) எழுதியனுப்பிய குறிப்பின் சாரம்.

அ. மாதவையர்.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

இந்திய தேசீய கீதங்கள்

தேசபக்தர்களுக்கு முக்கியமான
24 சிறிய, பெரிய, கீதங்கள்
புதுப்பதிப்பு-0-3-0 ; தபாற் கூலி 0-1-0
பஞ்சாமிர்தம் ஆபீஸ் - மயிலாப்பூர்'
சென்னை.